2013, November 16 - 30

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013



தமிழ்நாடு
சொல்லும் செய்தியும்
சொல்லாத செய்தியும்

விகாரைகளும்
நில அபகரிப்பும்

ஜெயலலிதாவின்
சுவரிடிப்பு அரசியல்

இலங்கையின்
இஸ்லாமிய வெறுப்பு
பிரத்தியேகமானதா?

கூட்டமைப்பும் சுயநிர்ணய
உரிமைக்கோரிக்கையும்

## தமிழர்களின் மனக்காயங்களை குணப்படுத்துவது எப்போது?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA................IN₹ | 50.00 | CANADA........CAN$ | 10.00 | USA...........US$ | 10.00 |
| SRI LANKA....SLR | 100.00 | AUSTRALIA...AUS$ | 10.00 | UK.............GB£ | 5.00 |
| SINGAPORE...SG$ | 14.00 | SWISS.............CHF | 10.00 | EUROPE..EU€ | 5.00 |

# ஆரோக்கிய வாழ்வுக்கான முழுமையான வழிகாட்டி சஞ்சிகை.




The Eatwell Plate




எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் வெளியீடு


தொலைவில் மங்கலாக இருப்பதைப் பார்ப்பதல்ல,
அருகே தெளிவாக இருப்பதைப் பார்ப்பதே எமது
பிரதான காரியமாக இருக்க வேண்டும்
- தோமஸ் கார்லைல்

சமகாலம்
எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
2013, நவம்பர் 16 - 30
பக்கங்கள் - 68




11 முன்னோக்கிச்செல்ல முடியாத முட்டுச்சந்தியில் இலங்கை
- நெவில் ஜயவீர



22 பௌத்த விகாரைகளும் நில ஆக்கிரமிப்பும்
- க.குருநாதன்



18 தமிழ்நாடு சொல்லும் செய்தியும் சொல்லாத செய்தியும்
- என்.சத்தியமூர்த்தி



34 ஜெயலலிதாவின் சுவரிடிப்பு அரசியல்
- முத்தையா காசிநாதன்

29 இலங்கையின் இஸ்லாமிய வெறுப்பு பிரத்தியேகமானதா?
- இஸெத் ஹுசெய்ன்



53 சிவில் சமூகமும் பொதுமக்கள் விரிகளமும்
- பேராசிரியர் ஜயதேவ உயன்கொட



47 கென்னடியின் கொலையிலிருந்து அமெரிக்கா படித்த பாடம்
- இயன் புரூமா

50 பாகிஸ்தானில் அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல்கள்

62 நாயின் வால் மொழி
- டாக்டர் எம்.கே.முருகானந்தன்

41 கூட்டமைப்பின் தேர்தல் வெற்றியும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையும்
- அஜித் ரூபசிங்க

60 திறனாய்வு வெளியும் திறனாய்வு வழியும்



38 போருக்கு பின்னரான மீள்நிர்மாணம், மீண்டெழலில் பெண்மகள்
- ஹரிம் பீரிஸ்

57 வரலாற்றுப்பதிவுகள் புதைக்கப்படுமா? விதைக் கப்படுமா?
- கே.ஆர்.டேவிட்



66 கடைசிப் பக்கம்
ச.இராகவன்


*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

ஆசிரியரிடமிருந்து...

# மன்மோகனும் கொழும்பு மகாநாடும்

இருவருடங்களுக்கு ஒரு தடவை இடம்பெறுகின்ற பொதுநலவரசு அமைப்பின் உச்சிமகாநாடுகள் வழமையாக சர்வதேச அரங்கில் பெரிதாக பரபரப்பை ஏற்படுத்தாமல் அமைதியாக நடந்துமுடிந்துவிடும். இத்தடவை இலங்கையில் நடைபெற்ற காரணத்தினால் அந்த அமைப்பின் 23ஆவது உச்சிமகாநாடு சர்வதேச ரீதியில் முக்கிய கவனத்தைப் பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. கொழும்பில் மகாநாட்டை நடத்துவதற்கான யோசனை முன்வைக்கப்பட்ட ஆரம்பகட்டத்தில் அதைத் தடுப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பில் இலங்கைக்கு இருக்கக்கூடிய பொறுப்புடைமை குறித்து பிரச்சினை கிளப்பிக் கொண்டிருக்கின்ற சர்வதேச மனித உரிமைகள் குழுக்களும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள அமைப்புகளும் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள், குழுக்களும் இந்தத் தடுப்பு முயற்சியின் முன்னணியில் நின்று செயற்பட்டன. என்றாலும் இறுதியில் கொழும்பில் மகாநாடு நடைபெறுவதைத் தடுக்க முடியாமற் போய்விட்டது. உச்சிமகாநாட்டுக்கான இடத்தைத் தீர்மானிப்பதற்காக இறுதியாக கடந்த ஏப்ரிலில் லண்டனில் நடைபெற்ற பொதுநலவரசு அமைப்பின் அமைச்சர்கள் மட்ட செயலணிக் கூட்டத்தில் கொழும்புக்கு ஆதரவாக நிலைவரம் மாறுவதற்கு ஏதுவாக எமது அயல்நாடான இந்தியா பெருமளவிற்கு அதன் செல்வாக்கைப் பயன்படுத்தியது என்பது வெளிப்படையானது.

அத்தகையதொரு செல்வாக்கை வெளிக்காட்டி கொழும்பு மகாநாட்டை உறுதி செய்வதில் பெரும் பங்களிப்பைச் செய்த இந்தியாவின் பிரதமர் மகாநாட்டில் பங்கேற்க முடியாமற் போய்விட்டது. அவரின் சார்பில் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமையிலான குழுவினரே மகாநாட்டில் கலந்துகொண்டு இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். கடந்த காலத்தில் பொதுநலவரசு உச்சிமகாநாடுகளில் இந்தியப் பிரதமருக்குப் பதிலாக துணை ஜனாதிபதியோ வெளியுறவு அமைச்சர்களோ பங்குபற்றிய சந்தர்ப்பங்கள் பல இருக்கின்றன. ஆனால், இத்தடவை பிரதமர் கலாநிதி மன்மோகன்சிங் கொழும்பு வரமுடியாமற் போனமைக்கான காரணத்தின் பிரத்தியேகத் தன்மையே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இந்தியா மகாநாட்டை முற்றுமுழுதாகப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டை எடுத்த தமிழகக் கட்சிகளும் அமைப்புகளும் குறைந்தபட்சம் பிரதமர் கொழும்பு வருவதையாவது தடுத்தேயாக வேண்டுமென்று போராட்டங்களைத் தீவிரப்படுத்தியிருந்தன. வழமையாக இத்தகைய போராட்டங்களுக்கு ஆதரவாகக் குரல்கொடுக்காமல் இருந்து வந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களும் (நிதியமைச்சர் பி.சிதம்பரம் முக்கியமானவர்) பிரதமர் கலாநிதி சிங் தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ளாமல் விட வேண்டுமென்று வலியுறுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது. மகாநாட்டை இந்தியா முழுமையாகப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று தமிழக சட்டசபையில் ஒன்றுக்கு இருதடவைகள் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றச் செய்தார் முதலமைச்சர் ஜெயலலிதா. ஒரு துரும்பு கூட இலங்கைக்குச் செல்லக்கூடாது என்று கூறிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி பிரதமர் மகாநாட்டுக்குப் போகாதிருக்கத் தீர்மானித்தது ஆறுதல் தருகிறது என்று கூறி திருப்திப்பட்டுக்கொண்டார்.

இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காகவே இந்தியா மகாநாட்டைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை தமிழக அரசியல் சக்திகள் முன்வைத்தன. ஆனால், பிரதமர் மன்மோகன்சிங் அந்தக் காரணத்துக்காக கொழும்புக்குச் செல்வதைத் தவிர்த்ததாக மத்திய அரசாங்கத்தின் தரப்பில் இருந்து எந்த அறிவிப்புமேயில்லை. உச்சி மகாநாட்டுக்கு பிரதமர் வராமல் விட்டதற்கும் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்ச்சைகளுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை என்று வேறுயாருமல்ல வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்தே பகிரங்கமாக அறிவித்தார்.

இதுதொடர்பாக சிதம்பரம் போன்ற தமிழக காங்கிரஸ் தலைவர்களிடமிருந்து எந்தப் பிரதிபலிப்பும் வெளிவரக் காணோம். மகாநாட்டை பகிஷ்கரித்த கனடியப் பிரதமரும் மொரீஷியஸ் பிரதமரும் இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்காகவே அவ்வாறு செய்ததாக வெளிப்படையாக அறிவித்த அதேவேளை, மன்மோகன்சிங் வரமுடியாமைக்காக வருத்தம் தெரிவித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதத்தை அனுப்பியிருந்தார். அத்துடன் தொலைபேசி மூலம் ஜனாதிபதியுடன் அவர் பேசியதாகச் செய்திகள் வாயிலாக அறியக்கூடியதாக இருந்தது.

*(33ஆம் பக்கம் பார்க்க...)*

# கடிதங்கள்













## வடக்கு பொருளாதார மீட்பு நடவடிக்கைகள்

சமகாலம் அக்டோபர் 1-15 இதழில் அகிலன் கதிர்காமரும் அகல்யா பிரான்சிஸும் சீவல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்து வடமாகாண சபையின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்காக எழுதிய ஆய்வுக் கட்டுரை மிகவும் காலப் பொருத்தமானது.

வடக்கில் முதற்தடவையாக மாகாணசபை நிருவாகம் ஒன்று மக்களினால் தெரிவுசெய்யப்பட்டு இயங்கத் தொடங்கியிருக்கும் நிலையில், அங்கு முன்னுரிமை கொடுத்து கவனிக்கப்பட வேண்டிய பொருளாதார விவகாரங்கள் குறித்து அந்த நிருவாகத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது மிக மிக அவசியமானதாகும்.

வடக்கில் உள்ள பனைவளத்தை மையமாகக் கொண்ட பொருளாதாரச் செயற்பாடுகள் உள்நாட்டுப் போர்க்காலகட்டத்தில் நினைக்க முடியாத பின்னடைவைச் சந்திக்க வேண்டியிருந்தது. பிரதானமாக சீவல் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அதை பழைய நிலைக்கு மீட்டுக்கொண்டுவருவதற்கு பயனுறுதியுடைய நடவடிக்கைகளை தாமதிக்காமல் முன்னெடுக்க வேண்டியது வடமாகாண சபையின் பிரதான கடமைகளில் ஒன்றாகும்.

வடக்கில் மீள்விக்கப்பட வேண்டியிருக்கின்ற பொருளாதாரத்துறைகளை அடையாளம் கண்டு, அவை பற்றிய ஆய்வுகளைச் செய்து மாகாணசபையின் கவனத்துக்கு கொண்டுவருவதற்கான பணியில் இறங்கியிருக்கும் அகிலன் கதிர்காமரும் அவரது சகாவும் வடக்கில் இருக்கக்கூடிய பொருளாதார நிபுணர்கள், புத்திஜீவிகளுடன் இணைந்து தங்கள் செயற்பாடுகளை விஸ்தரிக்கவேண்டும். சமகாலம் ஆசிரியர் குழுவும் பொருளாதார நிபுணர்களினால் செய்யப்படுகின்ற ஆய்வுகள் சம்பந்தப்பட்ட விபரங்களை கட்டுரைவடிவில் மக்களுக்கு அறியத்தரவேண்டும்.

கேசவன் குருமூர்த்தி
அல்வாய், வடமராட்சி.

## ஆய்வாளர்களின் எழுத்துகள்

குல்திப்நாயர் போன்ற இந்தியாவின் மூத்த அரசியல் ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்களின் எழுத்துகளை சமகாலத்தின் மூலமாக தமிழில் வாசிக்கக்கூடிய வாய்ப்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன்

கடந்த சமகாலம் இதழின் ஆசிரிய தலையங்கம் இன்றைய தமிழர் அரசியலின் நிலையை, குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அரசியலைப் பற்றி சிந்தனையைக் கிளறக்கூடிய முக்கிய விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கிறது.

கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்குள் ஏற்பட்ட பிணக்குகளுக்கு சுமுகமான முடிவொன்றைக் காண்பதற்கு சகல விதமான பிரயத்தனங்களையும் செய்து வடமாகாண சபையின் சகல உறுப்பினர்களும் ஒரே அரங்கத்தில் ஏக காலத்தில் பதவிப் பிரமாணம் செய்யக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திய பிறகே முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பதவிப் பிரமாணத்துக்கு முன்வந்திருக்க வேண்டும் என்ற கருத்து முழுமையாகச் சரியானதேயாகும். விக்னேஸ்வரன் இதை வாசித்திருப்பாரோ?

கணேசமூர்த்தி ரகுவரன்,
யாழ்நகர்.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736



புக் கிடைக்கிறது. ஆனால், அத்தகைய கட்டுரைகள் கிரமமாக அன்றி, இடைக்கிடையே பிரசுரமாகின் றன என்பதை ஆசிரியர் குழுவின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

குல்திப்நாயர், அ.மார்க்ஸ், சிந்தாமணி மகாபத்ரா, எம்.ஜே.அக்பர் போன்றவர்களின் ஆய்வுக்கட்டுரை கள் பெருவாரியான தகவல்களையும் அறிவுவிளக் கத்தையும் கொண்டவையாக இருக்கின்றன. அத்த கையை கட்டுரைகளை தவறாமல் சமகாலத்தின் இதழ்களில் கிரமமாக வெளியிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று தமிழ் ஊடகத்துறையையும் தமிழ் வாசகர்களையும் சூழ்ந்திருக்கின்ற புத்திஜீவித்துவ வெற்றிடத்திலிருந்து அவர்களை மீட்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்கு சமகாலம் சஞ்சிகையினால் கணிசமானளவுக்கு பங்களிப்பைச் செய்ய முடியும் என்பது எனது நம்பிக்கை.

யோகன் குமாரசாமி, அச்சுவேலி.

## வலிமையான தமிழ் மிதவாதத் தலைமை

கடந்த சமகாலம் இதழில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவின் ஊடகச் செயலாளராக இருந்த ஹரிம் பீரிஸ் எழுதிய கட்டு ரையை ஒன்றுக்கு இரண்டுதடவைகள் வாசித்தேன்.

சம்பந்தன், சுமந்திரன், விக்னேஸ்வரன் ஆகியோரை வலிமையான மிதவாத தமிழ் அரசியல் தலைமையாக பீரிஸ் இனங்காண்கிறார். முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசரின் அரசியல் பிரவேசத்துக்குப் பின்னர் இலங்கைத் தமிழர் அரசியலில் ஒப்பீட்டளவில் புதிய சிந்தனைப் போக்கொன்று தோன்ற ஆரம்பித்திருப்பதாக பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பல புத்திஜீவிகள், அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

ஆனால், அத்தகைய புதிய சிந்தனைப் போக்கிற்கு அதாவது ஒப்பீட்டளவில் வலிமையான மிதவாதப் போக்கிற்கு அனுகூலமான முறையில் பிரதிபலிப்பை வெளிக்காட்டக்கூடிய சிந்தனைப்போக்கை தென்னிலங்கை சிங்கள அரசியல் சமுதாயத்தில் காணமுடியாமல் இருப்பது பெரும் துரதிர்ஷ்டவசமானதாகும்.

இந்த ஒரு வழிப்பாதை மிதவாதப் போக்கினால் அரசியல் நிலைவரங்களில் மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது. சிங்கள மக்களை மாயைத்தனமான நம்பிக் கையில் வைத்திருக்கும் சிங்கள, பௌத்த பேரினவாத கோட்பாடுகளுக்கு எதி ரான பயனுறுதியுடைய பிரசாரங்களை சிங்கள புத்திஜீவிகள் முன்னெடுப்பதில் அக்கறை காட்டுவார்களா?

சேயோன் ஐயாத்துரை, மருதனார்மடம், யாழ்ப்பாணம்.





இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 10
2013, நவம்பர் 16 – 30

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்


திறனாய்வு என்பது ஒரு தப்பெண்ணம். மற்ற வர்களை விளங்கிக் கொள்வதற்காக அல்ல, எம்மை விளங்கிக் கொள்வதற்காகவே நாம் வாசிக்க வேண்டும்

- எமையில் எம்.சியோரன்




வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

# வாக்குமூலம்....

ஜக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தா கட்டிடம் அமைந்திருக்கும் நிலம் சோதிட ரீதியாக துர்க்குறியானது. அந்தக் கட்டிடத்துக்கான அடிக்கல் காலஞ்சென்ற ஜே.ஆர்.ஜெயவர்தனவின் பிறந்த தினத்தன்று நாட்டப்பட்டது. அதற்கு முன்னர் கூட அந்த நிலத்துடன் சோதிடரீதியான பிரச்சினைகள் இருந்துள்ளன. கட்டிடத்தின் முன்பக்கம் வீதியின் மட்டத்தை விடவும் உயர்ந்தது. பின்பகுதி அந்த மட்டத்தை விடவும் தாழ்ந்தது. அது ஒரு அபசகுனமான கட்டிடம். கட்சியின் தலைமையகம் அங்கு மாற்றப்பட்ட பிறகே பல தலைவர்களும் கொல்லப்பட்டார்கள். அதனால் தலைமையக இடத்தை மாற்றுமாறு கட்சித் தலைமைத்துவத்தைக் கேட்கவிருக்கிறேன்.



ஜக்கிய தேசியக்கட்சி முன்னாள்
தவிசாளர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா

அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் நான் காலி மாவட்டத்தில் இருந்து அல்ல, வவுனியா மாவட்டத்தில் இருந்தே போட்டியிடப் போகிறேன். இதை நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்கனவே அறிவித்துவிட்டேன். மீள்குடியேற்ற அமைச்சர் என்ற வகையில் நான் வடக்கில் பெரும் எண்ணிக்கையான வீடுகள் கட்டப்படுவதையும் கண்ணிவெடிகள் அகற்றப்படுவதையும் உறுதி செய்திருக்கிறேன். போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெயர்ந்த மூன்று இலட்சத்து 50 ஆயிரம் மக்களின் புனர்வாழ்வை நான் உறுதிசெய்திருக்கிறேன். அதனால் அவர்கள் மத்தியில் எனக்கு பெரும் ஆதரவு இருக்கிறது. வவுனியாவில் போட்டியிட்டால் எனக்கு வெற்றி நிச்சயம்.



மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன்

என்னிடம் இருந்த அதிகாரங்களில் 19 அதிகாரங்களை கட்சியின் தலைமைத்துவக் கவுன்சிலிடம் ஏற்கனவே கையளித்துவிட்டேன். மேலும் பல அதிகாரங்களை விரைவில் கையளிப்பேன். கட்சி தலைமைத்துவ கவுன்சிலினாலேயே விரைவில் நிருவகிக்கப்படும். பாராளுமன்ற விவகாரங்களையும் அரசாங்கத்துடனும் ஏனைய அரசியற் கட்சிகளுடனுமான தொடர்புகளையும் நானே கையாளுவேன்.

பொதுநலவரசு உச்சி மகாநாட்டில் இருந்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விலகிக் கொள்ளவில்லை. இலங்கைக்கு வராதமைக்காக அவர் காரணமெதையும் கூறவில்லை. எமக்கு காரணத்தைக் கூறவேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை. பல மகாநாடுகளில் பங்கேற்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. அவற்றில் கலந்து கொள்ளாமலிருக்க நாம் தீர்மானிக்கின்றோமென்றால், அதற்கான காரணத்தை சம்பந்தப்பட்டவர்களுக்கு நாம் அறிவிக்க வேண்டுமென்ற அவசியமில்லை.



வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

பொதுநலவரசு உச்சிமகாநாட்டில் இந்தியா பங்குபற்றுவதை வைத்துக்கொண்டு, இலங்கைத் தமிழர்களின் விவகாரங்களில் இந்தியாவின் நிலைப்பாடு தளர்ந்துவிட்டதாக அர்த்தப்படுதலாகாது.



இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்

பிரிட்டிஷ் பத்திரிகையாளர்களை நாட்டுக்குள் அனுமதிக்குமாறு அரசாங்கத்திற்குள் இருக்கும் முட்டாள்தனமான ஆலோசகர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். இந்தப் பத்திரிகையாளர்களினால் ஏற்படக் கூடிய விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். கலும் மக்ரே என்ன நீதிபதியா? எமது நாட்டில் மனித உரிமைகள் பற்றியும் கருத்துச் சுதந்திரம் பற்றியும் கேள்வியெழுப்ப அவர் யார்?



பொது பலசேனா பொதுச் செயலாளர்
கலபொடஅத்தே ஞானசார தேரர்

பொதுநலவரசு உச்சிமகாநாட்டுக்காக பெருமளவு பணம் செலவு செய்யப்பட்டிருப்பதால் நாட்டின் பொருளாதாரம் மேலும் மோசமடையப்போகிறது. கொழும்பு நகரின் வீதிகள் ஷம்போவினால் கழுவப்பட்டுக் கொண்டிருந்ததைக் கூட நான் பார்த்தேன். அடுத்த வீதிகளுக்கு ஜெல் பயன்படுத்தப்பட்டதோ தெரியவில்லை.



எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

செய்தி ஆய்வு

# 'சர்வதேச விசாரணையா? உள்நாட்டு விசாரணைக்கு காலக்கெடுவா? எதற்கும் அனுமதிக்க முடியாது'



பொதுநலவரசு உச்சிமகாநாட்டுக் காலத்தில் சர்வதேச அரங்கில் மீண்டும் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் முக்கியத்துவத்தைப் பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

மகாநாட்டில் பங்கேற்க வந்த உறுப்பு நாடுகளின் சில தலைவர்களும் செய்தி சேகரிப்பதற்காக இலங்கைக்கு படையெடுத்து வந்த ஊடகவியலாளர் பட்டாளமும் மனித உரிமைகள் பிரச்சினை குறித்து தெரிவித்த கருத்துகளும் கிளப்பிய கேள்விகளும் அரசாங்கத்தலைவர்களுக்கு பெரும் அசௌகரியத்தைக் கொடுத்தன என்பதிற் சந்தேகமில்லை.

இத்தகைய பின்புலத்தில் இலங்கை அரசா ங்கம் மீண்டும் சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது.

உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச சட்டவிதிகள் மீறல்கள் தொடர்பில் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் இலங்கை அரசாங்கம் நம்பக மான விசாரணைகளை நடத்தாத பட்சத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடாக சர்வதேச விசாரணையொன்றுக்கான வலியுறுத்தலை விடுக்கப் போவதாக பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் கருத்துத் தெரிவித்திருந்த கையோடு அந்த விவகாரம் குறித்து வெளிநாட்டுச் செய்திச் சேவையொன்றுக்கு பேட்டியளித்த ஜனாதிபதியின் சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ, போர்க்குற்றங்கள் என்று கூறப்படுபவை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற நெருக்குதல்களை அரசாங்கம் நிராகரிக்கிறதென்று திட்டவட்டமாக அறிவித்திருந்தார்.

'சர்வதேச விசாரணையொன்றை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. சர்வதேச விசாரணையை ஏன் நடத்த வேண்டும். நாம் அதை ஆட்சேபிக்கிறோம். நிச்சயமாக நாம் அதை அனுமதிக்கப்போவதில்லை. ஏன் நாம் உள்நாட்டு விசாரணையை நடத்துகிறோம்' என்று அவர் கூறியிருந்தார்.

சர்வதேச விசாரணைக்கான நெருக்குதல் ஒன்றும் புதியதல்ல. அவர்கள் அவ்வாறு பேசுவது இதுதான் முதற் தடவையுமில்லை என்று கூறிய பசில் ராஜபக்ஷவிடம் இலங்கை அரசாங்கத்தின் சொந்த விசாரணைகள் பூர்த்தியடையவேண்டிய (ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் பிரகாரம்) மார்ச் காலக்கெடு குறித்து கேட்கப்பட்டபோது 'வெளியில் இருந்து எம்மீது நேர அட்டவணையொன்றைத் திணிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை' என்று பதிலளித்தார்.

'எமக்கு அவர்கள் திகதி நிர்ணயிக்க முடியாது. அவ்வாறு திகதி தருவது நியாயமான செயலும் அல்ல. எமக்கு கால அவகாசம் தேவைப்படுகிறது என்று டேவிட் கெமரூனும் கூறியிருக்கிறார். அவர்களின் வட அயர்லாந்தில் கூட நீண்டகாலம் எடுத்தது' என்று பசில் ராஜபக்ஷ கூறினார்.

பொதுநலவரசு உச்சிமகாநாடு ஆரம்பதினத்தன்று கெமரூன் யாழ்ப்பாணத்துக்குச் சென்று வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுடனும் பேச்சு நடத்தியதும் இடம்பெயர்ந்த மக்களை முகாமுக்குச்சென்று சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்ததும் அரசாங்கத்துக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அரசாங்கத் தலைவர்களின் பிரதிபலிப்புகளைப் பார்க்கும் போது புரிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது. ■




யாழ்ப்பாணத்தில் சம்பந்தன், விக்னேஸ்வரன், சுமந்திரனுடன் டேவிட் கெமரூன்

செய்தி ஆய்வு

# குற்றவாளிகள் மயமாகும் அரசியலும் அரசியல்மயமாகும் குற்றச்செயல்களும்



போரின் முடிவுக்குப் பின்னர் இலங்கையில் பயங்கரவாதச் செயல்களினால் ஒருவர் கூட மரணமடைய வில்லை என்றும் எந்தப்பகுதியிலும் ஒரு குண்டு கூட வெடிக்கவில்லை என்றும் கூறு வதில் அரசாங்கத் தலைவர்கள் எப் போதுமே பெருமைப்பட்டுக் கொள்கிறார் கள். பொதுநலவரசு உச்சிமகாநாட்டில் பங்கேற்க கொழும்பு வந்திருந்த உலகத்த லைவர்கள் மத்தியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கப்படைகள் பயங்கரவா தத்தைத் தோற்கடித்ததனால் இன்று நாட்டில் பூரண அமைதி நிலவுகிறது என்றும் எந்தப் பகுதிக்கும் மக்கள் பயமின்றிச் சுதந்திரமா கச் சென்று வரலாம் என்றும் கூறி பெரு மைப்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

அரசாங்கத் தலைவர்கள் இவ்வாறாக எல்லாம் பெருமை அடித்துக்கொள்கின்றதற்கு மத்தியில் நாட்டில் குற்றச்செ யல்கள் படுமோசமாக அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. தினமும் குற்றச்செயல்கள் பற்றிய பெருவாரி யான செய்தி கள் ஊடகங்களில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. கொலை, கொள்ளை, குண்டர் வன்முறைகள், பாலியல் வல்லுறவு, பெண்கள், சிறுவர்கள் துஷ்பிரயோகம் என்று இக்குற்றச் செயல்களின் வரிசை நீளுகிறது.

அரசியல்வாதிகள் குற்றச்செயல்களில் ஈடுபடும் அல் லது குற்றச் செயல்களைச் செய்விக்கும் போக்கு தீவிர மடைந்திருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. உள் ளூராட்சி சபைகளில் பதவிவகிக்கும் அரசியல்வாதிகள், பிரதேசசபைத் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர் கள், பாலியல் குற்றச்செயல்களிலும் தாக்குதல்களிலும் ஈடு படுகின்ற செய்திகளை அடிக்கடி காணமுடிகிறது. சில அர சியல்வாதிகள் மீது கொலை வழக்குகளும் இலஞ்ச வழக்குகளும் பதிவாகியிருக்கின்றன.

கடந்த ஏப்ரிலில் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட தகவல்களின்படி கடந்த வருடம் நாட்டில் 1750 சிறுவர் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் 330 பாலியல் வல்லு றவுச் சம்பவங்களும் 5475 சிறுவர் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றிருக்கின்றன. இவையெல்லாம் முறைப்பாடு செய்யப்பட்ட சம்பவங்கள். முறையிடப்படாத சம்பவங் கள் எத்தனையோ? குற்றச் செயலைச் செய்தவர்களும் பாதிக்கப்பட்டவர்களும் தான் அறிவர்.

நகரமயமாதல் அதிகரிப்பதன் காரணமாகவே குற்றச் செயல்கள் அதிகரிப்பதாக பொதுவான ஒரு நம்பிக்கை இருக்கிறது. இதை மறுதலிப்பவையாகவே குற்றச்செயல் கள் பற்றிய விபரங்கள் அமைகின்றன. 173 சிறுவர் பாலி யல் வல்லுறவுச் சம்பவங்கள் அநுராதபுரத்திலிருந்தும் 166 சம்பவங்கள் குருநாகலையில் இருந்தும் 129 சம்பவங்கள் கொழும்பில் இருந்தும் கம்பஹா மற்றும் இரத்தினபுரியில் இருந்து 111 சம்பவங்களும் அறிவிக்கப் பட்டிருந்தன.

இலங்கையில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதி ரான குற்றச்செயல்கள் படுமோசமாக அதிகரித்திருக்கின் றன. ஒவ்வொரு 90 நிமிடங்களுக்கும் ஒரு பெண்ணும் 3-5 சிறுவர்களும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படு கிறார்களாம். குடும்ப வன்முறைகளும் கடுமையாக அதிக ரித்தவண்ணம் இருக்கின்றன. 2011 ஆம் ஆண்டில் 60சதவீதமாக இருந்த குடும்ப வன்முறைகள் இவ்வருடம் 80சதவீதமாக அதிகரித்திருக்கின்றன. குடும்ப வன்முறைக ளின் வீதம் உயர்வாகவுள்ள நாடுகளின் வரிசையில் இலங்கை 5 ஆவது இடத்தில் இருப்பதாகக் கூறப்படு கிறது. இது இவ்வாறிருக்க சர்வதேச போதைப் பொருள் கடத்தல் செயற்பாடுகளின் ஒரு மையமாகவும் இலங்கை மாறுவதற்கான அறிகுறிகள் தாராளமாகத் தெரிகின்றன.

குற்றச்செயல்கள் அதிகரிப்புக்கு அடிப்படைக்காரணம் அரசியல் குற்றவாளிகள்மயமாவதும் குற்றச்செயல்கள் அரசியல்மயமாவதுமே என்று அவதானிகள் அபிப் பிராயம் தெரிவிக்கிறார்கள். ■

# முன்னோக்கிச்செல்ல முடியாத முட்டுச்சந்தியில் இலங்கை



## இக்கட்டான நிலையிலிருந்து ஜனாதிபதியினால் எம்மை மீட்க முடியுமா?



நெவில் ஜயவீர

உள்நாட்டு அரசியல்

**1956** ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ.ஆர். டி.பண்டாரநாயக்க சிங்கள மக்களின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியையும் அவர்களின் இயங்கு தளத்தின் விரி வாக்கத்தையும் (expanded the horizons) ஏற்படுத்தினார். ஆனால் அதே ஆண்டில் தமிழ் மக்கள் வாழ்வில் இருள்மேகங்கள் சூழ்ந்தன. ஒரு மக் கள் குழுமம் என்ற வகை யில் அவர் கள் தாழ்ந்து போனதை உணர்ந்தார் கள்.

அன்றிலிருந்து 60வருட காலமாக இலங்கை தான் இழந்த சமநிலையை மீண்டும் தாபிப்பதற்காக திணறிக் கொண்டிருக்கிறது. இரத்தமும், கண் ணீரும் சிந்தியபடி மேற்கொள்ளப் படும் இம்முனைவுகள் இன்னும் உரிய பயனைத் தரவில்லை.

பண்டாரநாயக்கவின் பண்டா-செல்வா ஒப்பந்தம் 1958, டட்லி சேனாநாயக்கவின் மாவட்ட சபை உடன்படிக்கை 1965, 13ஆவது திருத்தம் 1987 மூலம் ஜேர்.ஆர். ஜெயவர்தன மேற்கொண்ட முயற்சி, 1995, 1997, 2000 ஆகிய ஆண்டுக ளில் சந்திரிகா பண்டாரநாயக்க மேற் கொண்ட துணிச்சலான முயற்சிகள் என்பனவும் நிலைத்த பயனைத்தர வில்லை. இவையாவற்றையும் விட மிகப்பயனுடைய முயற்சி என்றால் அது ஜனாதிபதி ராஜபக்ஷ அண்மை யில் எடுத்த முடிவுதான். இலங்கை இழந்த சமநிலையை மீண்டும் பெறு வதற்கு உதவக்கூடிய நடவடிக்கை இது. 1987 ஆம் ஆண்டில் 13 ஆவது யாப்புத் திருத்தத்தின் கீழ் உருவாக்கப் பட்ட வடமாகாண சபையின் தேர் தலை நடத்தி அதனை அவர் தாபித்து விட்டார்.

சரியாக 50 வருடங்களுக்கு முன் னர் நான் யாழ்ப்பாணத்தின் அர சாங்க அதிபராக இருந்தபோது (1963-1966) அப்போதையை பிரத மர் திருமதி சிறிமாவோ பண்டாரநா யக்கவுடன் நான் நேருக்கு நேர் அலரி மாளிகையில் சந்தித்து உரையாடியது என் ஞாபகத்திற்கு வருகிறது. அந்தச் சந்திப்பின் போது மிகுந்த செல்வாக்கு மிக்க மனிதரான என்.கியூ.டயஸ்

> ஐம்பது வருடங்களுக்கு முன்னர் திருமதி பண்டாரநாயக்கவிடம் நான் கேட்ட அதே கேள்வியை ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் கேட்க விரும்புகிறேன். தமிழ் மக்களின் மனங்களில் ஏற்பட்ட காயத்தை இப்போது இறுதியாக நாம் குணப்படுத்தி முழுமையான இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்த வேண் டும் என்று நீங்கள் கருதவில்லையா?



(பிரதமரின் நிரந்தரக் காரியதரிசி) அவர்களும் இருந்தார். இச்சந்திப்பு நிகழ்ந்த காலப்பகுதியில் அதாவது 1963 ஆகஸ்ட் மாதத்தில் நான் அர சாங்க அதிபராக பதவியேற்றதன் பின்னர் பல பிரச்சினைகளை எதிர் கொண்டேன். அவற்றுள் ஒன்றான முக்கிய பிரச்சினை பற்றி அவருடன் பேசினேன்.

'அம்மணி! தமிழ்மக்கள் மனங்க ளில் ஏற்பட்ட காயங்களைக் குணப் படுத்தும் நடவடிக்கைகளை நாம் தொடக்க வேண்டுமல்லவா?' என்று நான் பிரதமரைப் பார்த்துக் கேட் டேன். இக்கேள்வியைத் தொடர்ந்து இடம்பெற்ற உரையாடலை முழுமை யாக எனது நினைவுக் குறிப்புகள் நூலில் பதிவு செய்திருக்கிறேன். நான் பல மாவட்டங்களில் அரசாங்க அதி பராகக் கடமையாற்றிய வேளையில் எழுதிவைத்த நாட்குறிப்புகளில் இரு ந்து எடுக்கப்பட்ட தகவல்களை இந்நி னைவுக்குறிப்புகள் நூலில் பதிவு செய்திருக்கிறேன். அச்சில் இருக்கும் இந்நூல் அடுத்த ஆண்டின் முற்பகுதி யில் புத்தகசாலைகளில் விற்பனைக்கு வந்துவிடும்.

பிரதமரின் பதிற்குறி நான் எதிர் பார்த்ததற்கு மாறாக இருந்தது. தமிழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்ற எனது விண்ணப்பத்திற்கு நம் பிக்கை தரும் வகையில் அவர் பதில் அமைந்தது. நீண்ட ஒரு மணிநேர உரையாடலின் பின் யாழ்ப்பாண மாவட்டம் முழுமையிலுமாக சிங்க ளம் மட்டும் என்ற கொள்கையைச் செயற்படுத்துவதை ஒத்தி வைப்ப தற்கு அவர் சம்மதம் தெரிவித்தார்.

ஆனால் ஒரு நிபந்தனை. இதுபற்றி வெளியே விளம்பரப்படுத்தக்கூடா து,எழுத்து மூலம் உறுதிப்படுத்தும்படி கேட்கக் கூடாது என்றார் (1960களின் திருமதி பண்டாரநாயக்கா 1970க ளில் நாம் கண்டவரை விட வேறான ஒரு பெண்மணி என்பதை நான் இங்கு குறிப்பிடவேண்டும்) சிங்கள மொழிக் கொள்கையை செயற்படுத்து வதை ஒத்திவைத்தல் பற்றிய இந்த முடிவு எட்டப்பட்ட போது சமுகமா யிருந்த என்.கியூ.டயஸ் முகம் கவ லையால் சுருங்கிப்போயிற்று.

பிரதமர் என்னைக் கேட்டுக் கொண் டதற்கு இணங்க நான் எந்தவிதமான பகிரங்க அறிவிப்பையும் செய்யா மலேயே உத்தியோக மொழிச்சட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்பா டில்லாது போக அனுமதித்தேன். பிறப்புச் சான்றுப் பத்திரம், இறப்புப் பதிவுப் பத்திரம், விவாகப்பதிவுப் பத்திரம், பிறகடிதங்கள், பதில்கள் என்று எவற்றையும் யாழ்.மாவட்டத் தில் உள்ள அரச அலுவலகங்கள் சம் பந்தப்பட்ட நபரின் விருப்பத்திற் குரிய மொழியில்லாத வேறு மொழி யில் அன்று முதல் எழுதி வழங்க வில்லை. பற்றுச்சீட்டுகள் இவ்விதமே வழங்கப்பட்டன. கடிதங்கள் யாவுமே இவ்விதமே அனுப்பப்படலாயின. நாளடைவில் நான் ஒருதலைமுடி வாக செயற்படுத்திய மும்மொழிக் கொள்கை யாழ்.மாவட்டத்தில் எனக் குப் பின்னர் பணியாற்றிய அரசாங்க அதிபர்களால் மிகக் கவனமாக வில கல் இன்றிப் பின்பற்றப்பட்டது. இறுதி யில் 1987இன் 13ஆவது திருத்தம் மும்மொழிக் கொள்கையை இலங்கை

முழுமைக்கும் உரிய நடைமுறையாக ஆக்கியது.

எனக்கு இப்போது வயது 84. திருமதி பண்டாரநாயக்காவை நான் 50 வருடங்களுக்கு முன்னர் கேட்ட கேள்வியை இப்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவிடம் கேட்க விரும்புகிறேன்.

மேதகு ஜனாதிபதியவர்களே! தமிழ் மக்களின் மனங்களில் ஏற்பட்ட காயத்தை இப்போது இறுதியாக நாம் குணப்படுத்தி முழுமையான இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று நீங்கள் கருதவில்லையா? நீங்கள் ஆட்சிக்கு வந்து ஏழு ஆண்டுகள் கடந்தோடிவிட்டன. ஆயினும் சிங்கள மக்கள் மத்தியில் உங்களுக்கு உள்ள ஆதரவு கொஞ்சமேனும் குறையவில்லை. எதிர்காலத்தில் கூட சிங்கள மக்கள் மத்தியில் இதுபோன்ற அளவு ஆதரவைப்பெறக்கூடிய அரசு தலைவர் ஒருவர் தோன்றுவார், இந்த அளவுக்கு ஆதரவைத் தக்க வைத்துக்கொள்வார் என்று கூறுவதற்கில்லை. உங்களுக்கு இருக்கும் இந்த ஆதரவுப் பலத்தை புதிய தேசம் ஒன்றை நிர்மாணிப்பதற்குரிய தொடக்க நிகழ்வாக ஏன் மாற்ற முடியாது? வலிதருவன என்றாலும் நீண்ட நாட்களாகக் காத்துக் கிடக்கும் பணிகளை தேச நிர்மாணத்தைக் கருதிச் செய்ய வேண்டுமல்லவா?

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு நீங்கள் எடுத்த முடிவு துணிச்சல் மிக்கது; ஒரு வரலாற்றுத் திருப்பம். ஆனால் நீங்கள் செல்ல வேண்டிய பாதை நெடிது. பிரிவினை வாதத்திற்கு எதிரான உங்கள் இராணுவ வெற்றியைப் பார்த்து மக்கள் பிரமித்து நிற்கிறார்கள். உங்கள் பிரமாண்டமான பொதுக்கட்டுமானப் பணிகள், கட்டிடங்கள், வீதிகள் வியப்புக்குரியவை. உங்கள் ஆட்சிக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் உள்ளதையும் நீங்கள் அறிவீர்கள். ஊழல் ஒரு தொழில்துறையாகி விட்டது; குற்றத் தண்டனைக்கு அஞ்சாத அலட்சியப் பண்பாடு வளர்க்கப்படுகிறது. அரச நிதியும் வளங்களும், உத்தியோகச் சலுகைகளும் அருவருப்பை ஊட்டும் வகையில் துஸ்பிரயோகம் செய்யப்படுகின்றன; மனித உரிமைகள் மீறப்படுகின்றன; ஊடகவியலாளர்கள் வேட்டையாடப்படுகிறார்கள்; என்பன போன்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. இக்குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தவோ அல்லது ஆதாரமற்றவை என்று மறுத்துரைக்கவோ கூடிய நிலையில் நான் இல்லை. ஆனால் இக்குற்றச்சாட்டுகள் பலகோணங்களில் இருந்தும் எழுந்த வண்ணம் உள்ளன. நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் உரத்த குரலில் இவை பேசப்படுகின்றன.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். நீங்கள் தமிழ் மக்களின் மனங்களில் ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்த முன்வந்தால், அரசியல் யாப்பின் 86 ஆவது உறுப்புரையின் படியோ எவ்வாறோ நடவடிக்கை எடுத்து தமிழர்களை ஒன்றிணைத்தீர்களானால் வரலாற்றில் நீங்கள் அசைக்க முடியாத நிலையான இடத்தைப் பெற்றுக்கொள்வீர்கள் என்பது உறுதி.



**வட மாகாண சபையை நிறுவுவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட துணிச்சல்மிகு செயல் தமிழ் மக்களின் இயங்குதளத்தை விரிவாக்கியுள்ளதா? அது இழந்த சமநிலையை மீளக்கொண்டுவந்ததா? இனி என்ன செய்ய வேண்டும்?**

ஜனாதிபதி ராஜபக்‌ஷவினால் வட மாகாணசபையைத் தாபிக்கும் துணிச்சல் மிகு வீரச் செயல் தமிழ் மக்களின் இயங்கு தளத்தை விரிவாக்கியுள்ளதா? அது இழந்த சமநிலையை மீளக்கொண்டுவந்ததா? இனி என்ன செய்ய வேண்டும்?

## தமிழ் மக்களின் இயங்கு தளத்தைப் 13ஆவது திருத்தம் விரிவாக்கியுள்ளதா?

தமிழ் மக்களின் இயங்கு தளத்தை விரிவாக்குதல் என்றால் என்ன? அது அதிகாரப் பகிர்வுக்கான ஒரு கருவியாக ஆகவேண்டும். ஆகக் குறைந்தது தங்கள் அலுவலகங்களைத் தாங்களே ஒழுங்கமைக்கவும் கொண்டு நடத்தவும் தேவையான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். தேசத்தின் இறைமைக்கு பங்கமில்லாத அதிகாரப் பகிர்வாகவும் இருக்க வேண்டும்.

உண்மையில் 13 ஆவது திருத்தம் இவ்வாறான அதிகாரப் பகிர்வை வழங்கவில்லை. ஏனெனில் அதிகாரப்பகிர்வை வழங்குதல் அத்திருத்தத்தின் நோக்கமாக இருக்கவில்லை. அதிகாரப்பகிர்வை வழங்கும் கருத்திலும், அர்ப்பணிப்பும் அத்திருத்தத்தைத் தூண்டும் சக்திகளாகச் செயற்படவில்லை. தமிழர்களை வழிக்குக் கொண்டுவருவதற்கும் அவர்கள் மீதான கட்டுப்பாட்டை இறுக்குவதற்கும் இந்தத் திருத்தம் வரையப்பட்டதே அல்லாமல் அவர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்காக அல்ல என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

மாகாணசபைக்குரிய அதிகாரங்களின் அட்டவணை, ஒருங்கிணை அதிகாரங்களின் அட்டவணை (Concurrent list) ஒதுக்கிவைக்கப்பட்ட அதிகாரங்கள் என்று மூன்று அட்டவணைகள் உள்ளன. இது முரண்பாடில்லாத கொள்கை முடிவை எடுப்பதற்கும், ஒருங்கிணைவான நிர்வாகத்திற்கும் தடையாக உள்ளன. மத்திய அரசுக்கும் மாகாணசபைக்கும் ஏதாவது விடயத்தில் சிக்கல் நிலை ஏற்பட்டால் இந்த அட்டவணையின் விடய எல்லை பற்றிய கருத்து முரண்பாடு எழுந்தால் மத்திய அரசு தான் நினைத்ததைச் செய்து முடிக்கலாம். எந்த விடயத்



அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் ஒரு சூழ்ச்சித்த னமான பின்னணியிலேயே கொண்டுவரப்பட்டது. ஆயுதக் கிளர்ச்சியைக் கைவிடுவதற்கு தமிழ்த் தீவிரவாத இளைஞர் களை இணங்க வைப்பதற்காக இத்திருத்தம் கொண்டுவரப் பட்டதே அல்லாமல் அதிகாரப்பகிர்வை வழங்குவதற்கு அல்ல. திருத்தத்தின் விடயப்பரப்பு, அதன் நோக்க எல்லை பற்றி மீளாய்வு செய்யும் அவசர தேவை இப்போது உள்ளது

தையும் இது தேசியக் கொள்கை (NATIONAL POLICY) என்று பாராளு மன்றத்தைப் பிரகடனப்படுத்தும்படி கூறி பிணக்குக்குரிய விடயத் தைத்தனது விருப்பத்துக்கேற்ப முடிவு செய்துவிடலாம். ஆதலால் 13 ஆவது திருத்தத்தின் படியான ஏற்பாடுகள் கொழும்பில் உள்ள பலமிக்க அதிகா ரத்துவ மையத்தால் தமக்கு ஏற்றவகை யில் உபயோகப்படுத்தப்பட்டு மாகாணசபையின் முயற்சிகள் தோல் வியுறச் செய்யப்படும். மாகாணசபை உயிர்ப்பில்லாத நடைபிணமாகத் தான் இருக்கும்.

இந்தச் செயன்முறையின் அபத்தம் இதுவரை வெளித்தெரியாமல் மறை ந்திருப்பதற்கு காரணம், 25 வருடங் களாக அது செயற்படுத்தப்பட்ட ஏழு மாகாணங்களிலும் மாகாண சபை கள், மத்தியில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் கைப்பாவைகளாக இருந்தது தான்.

13ஆவது திருத்தம் கொண்டுவரப் பட்ட பின்னணியைப்பார்க்கும் போது இந்தச் சூழ்ச்சியின் தன்மையை முழு மையாகப் புரிந்துகொள்ள முடியும். தமிழ்த் தீவிரவாத இளைஞர்கள் தமது ஆயுதக் கிளர்ச்சியைக் கைவிட வேண் டும் என்று சம்மதிக்க வைப்பதற்கா கவே இத்திருத்தம் கொண்டுவரப்பட் டதே அல்லாமல் அதிகாரப்பகிர்வை வழங்குவதற்காக அல்ல என்பதை நாம் கவனித்தல் வேண்டும். ஆகவே கடந்த 26 வருடங்களாக பொதுவாக எல்லாத்தமிழ்க் குழுக்களுமே இத்தி ருத்தம் பற்றி அவநம்பிக்கை கொண்டி ருந்தன. தங்கள் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாய் இது இருக் கவில்லை என்பதை அவை உரத்துக் கூறி வந்துள்ளன. இப்போது நாம் பதின்மூன்றாவது திருத்தத்தின் விட யப்பரப்பு, அதன் நோக்கெல்லை என் பன பற்றி மீளாய்வு செய்யும் அவசர தேவையுள்ளது என நான் கருதுகி றேன். இருப்பினும் ஒரு இடைக்கால நடவடிக்கையாக ஜனாதிபதி ஆகக் குறைந்தது ஒருங்கிணை அட்டவ ணையை ஒழித்து வட மாகாண சபை க்கு அவ்வட்டவணை தொடர்பான எல்லா அதிகாரங்களையும் வழங்க லாம். அப்படி ஒரு முன்முனைவு வட மாகாணசபைக்கு அரசாங்கத்தில் பெருமளவு பங்கேற்பையும் ஈடு பாட்டு உணர்வையும் வழங்கும்; அத் தோடு தற்போது நிலவும் அதிருப்தி உணர்வையும் தணிக்கலாம்.

### 13ஆவது திருத்தம் அபிவிருத்திக்கான வாய்ப்பை வழங்குகிறதா?

இன்னொரு கோணத்தில் இவ்விட யத்தை நாம் நோக்கினால் 13ஆவது திருத்தம் அபிவிருத்திக்கான பெரு வாய்ப்பை வழங்குகிறது என்று கூற லாம். ஆம்! இதனை நான் அழுத்திக் கூறவிரும்புகிறேன். வடக்கு மாகாண சபைக்குள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவு நன்மைகளை அது தர முடியும். ஆகவே தான் தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பும் தற்போது தெரிவு செய்யப்பட்ட சபை, மட்டுப்படுத்தப் பட்ட அதிகாரங்களை உடையதாயி னும்,படிப்படியான முன்னேற்றத்திற் கான முதல்படியாக அதனைக் கொள்ள வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு யதார்த்தபூர்வமாகச் சிந்திக்க வேண் டும். பிரிவினையைக்கோரி 30 ஆண்டுகள் போர் நடத்திய பின்னணி யில் இருந்து மீண்டுள்ளோம். சிங்கள மக்கள் இன்றும் கூட தீவிரமான சந்தே கம் உடையவர்களாகவே உள்ளனர். அவர்கள் முழுமையான சுயாட்சியை இறைமையுள்ள இலங்கைக்குள் என்ற அடிப்படையில் கூட வழங்குவதற் குத் தயாராக இல்லை. இதனால் தான் சுயாட்சிக்கோரிக்கை சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தவே உதவும். முத லில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயல்வலுவுடைய மாகாணசபையை அமைத்து அதனை இலங்கை முழு மைக்கும் திறமைக்கும் அபிவிருத்தி க்கும் முன்மாதிரியான ஒன்றாகக் காட்ட வேண்டும். முதலமைச்சர் விக்னேஸ்வரனால் அதனைச் செய்ய முடியும் என்றே நான் கருதுகிறேன்.

வடக்கு மாகாண சபையிடம் இரண்டு பெரும் வளங்கள் உள்ளன. முதலாவது விடயம் அதன் மக்கள்! இலங்கைத் தமிழர்கள் அறிவு, முய ற்சி, மீண்டும் உயிர்த்தெழும் ஆற்றல் என்பனவற்றைக் கொண்டவர்கள். அவர்களுக்கு நிகரான சமூகம் உல கின் எந்தப் பகுதியிலும் இல்லை என்றே கூறுவேன். (நான் உலகின் பல பகுதிகளிலும் நேரடியாக பெற்ற அனு பவத்தைக் கொண்டு கூறுகிறேன்). இரண்டாவதாக 'டயஸ்போறா' (புலம்பெயர் தமிழர்) என்றவளம். புலம்பெயர் தமிழர்களிடம் பேரளவு பயன்படுத்தப்படாத வளம் உண்டு. புலம்பெயர் தமிழர்களிடம் முதலீட் டுக்கான பெருந்தொகைப் பணம் மட்டுமல்ல, மிகவும் பயிற்சிபெற்ற தொழில்நுட்ப வளமும் உள்ளது.

இந்த மூலதனத்தையும், திறன் களை யும் முதலமைச்சர் விக்னேஸ்வரன்

வடமாகாணத்திற்கு திருப்பிவிடலாம். அவ்வாறு செய்வதன் மூலம் ஒரு பத்து வருடகாலத்தில் வடமாகாண சபையை வலுவுள்ளதாக்கி விடலாம். வடபகுதியின் ஒட்டுமொத்த பலம் அதிகரிக்கும். ஸ்கொட்லாந்தில் இவ்வாறு தான் நடந்தது. 1745 இல் இங்கிலாந்து ஸ்கொட்லாந்தியரை தோற்கடித்து வெற்றி கொண்டனர் ஸ்கொட்லாந்தியர் என்ன செய்தார்கள்? காடுகளுக்குள் ஓடி மறைந்து மனம் புளுங்கிக்கொண்டிருக்கவில்லை. துணிச்சலோடு வாழ்க்கையை எதிர்கொண்டார்கள். 50 வருட காலத்திற்குள் பிரித்தானிய கைத்தொழில்துறையின் முக்கிய பிரிவுகளில் தம் ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்டார்கள். இலங்கைத் தமிழர்களால் ஸ்கொட்லாந்தியர் போன்ற உழைப்பாளிகள், அவர்களை ஒத்த குண இயல்புகள் பல இவர்களிடம் உண்டு. ஸ்கொட்லாந்தியர் செய்ததை இவர்களால் இலங்கையில் செய்ய முடியும்.

### ஜனாதிபதி ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழிகள்

மகிந்த ராஜபக்ஷ தமிழ்மக்களுக்கும், இந்தியாவுக்கும், உலகசமூகத்திற்கும் திரும்பத்திரும்ப ஒன்றைக் கூறியுள்ளார். இலங்கையின் இறைமைக்குப்பாதிப்பு ஏற்படாத வகையில் அவர் அதிகாரப்பகிர்வை வழங்குவதற்கு தன்னாலான வகையில் முயற்சிப்பார் என்று உறுதிமொழி கூறியுள்ளார். இதனால் நாம் நம்பிக்கை அடைகிறோம். நல்ல எதிர்காலம் உண்டு என எண்ணுகிறோம். தமிழ் மக்கள் வாழ்வில் விடிவு ஏற்படப் போகிறது. இலங்கையின் அரசு தலைவர்களில் வடமாகாண சபைக்கு முதன்முதலாக தேர்தலை நடத்திய ஒரு தலைவர் இவரே என்பதை மறத்தல் கூடாது. அவரது இச்செயல் அதிகாரப் பகிர்வு பற்றி மகிந்த ராஜபக்ஷ உண்மையான அக்கறை கொண்டுள்ளார் என்பதைக் காட்டுகிறது.

மகிந்த ராஜபக்ஷ அதிகாரப்பகிர்வு பற்றி ஆராய்வதற்காக இரண்டு குழுக்களை அமைத்துள்ளார். ஒன்று அனைத்துக்கட்சிகளினதும் பிரதிநிதிகள் கொண்ட APRC என்ற குழு. மற்றது நிபுணர்கள் குழு. இவ்விரு குழுக்களும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டங்களை முன்மொழியும்படி வேண்டப்பட்டுள்ளன. ராஜபக்ஷ தனது இலட்சியத்தை பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குதான் எல்லாவகையிலும் முனைவதாகவும் மாற்று வழிகளை பரிசீலிப்பதாகவும் கூறியுள்ளார். தானாகவே ஒரு தீர்வைத் திணிப்பதற்கு விரும்பவில்லையென்றும் இவ்விரு குழுக்களையும் தீர்வு ஒன்றைச் சரிபார்க்கச்செய்யுமாறும் கூறியுள்ளார்.

மக்கள் தாம் வாழும் சொந்த இடங்களில் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் தகைமையுடையவர்களாகவும் தாம் வாழும் அரசியல்-பொருளாதாரச் சூழலைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்றும், வளங்களைச் சமத்துவமற்ற வகையில் பகிர்ந்தளிக்கும் முடிவுகளை மத்தியில் உள்ளவர்களே எடுத்தல் நீண்ட நாட்களாகவே உள்ள பிரச்சினையென்றும் அவர் கூறினார். அதிகாரப் பகிர்வு மிக முக்கியமான பிரச்சினையென்றும் தேவையென்றும் அவர் குறிப்பிட்டார்.

பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுப்பதும் மக்கள் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் பொறுப்பை ஏற்பதும் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். இரு குழுக்களும் முன்வைக்கும் தீர்வுகளின் அடிப்படையில் நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் தாம் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

துணிச்சலான மனதிற்கு இதமளிக்கும் வார்த்தைகள் இவை!

### ஜனாதிபதி ராஜபக்ஷ எதிர் நோக்கும் இக்கட்டு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உண்மையில் இக்கட்டான நிலையில் உள்ளார். 1958 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவும் 1967 இல் டட்லி சேனநாயக்காவும் இவ்வாறான இக்கட்டான நிலையிலேயே இருந்தனர். 1987 இல் ஜே.ஆர், 2000 ஆம் ஆண்டில் சந்திரிகா என்போரும் இவ்வாறான இக்கட்டையே எதிர் நோக்கினர். தனிப்பட்டமுறையில் இந் நால்வரும் தாராண்மை நோக்குடைய



**தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு யதார்த்தபூர்வமாகச் சிந்திக்க வேண்டும். பிரிவினையைக்கோரி 30 ஆண்டுகள் போர் நடத்திய பின்னணியிலிருந்து மீண்டுள்ளோம். சிங்கள மக்கள் இன்றும் கூட தீவிரமான சந்தேகம் உடையவர்களாக உள்ளனர். அவர்கள் முழுமையான சுயாட்சியை இறைமையுள்ள இலங்கைக்குள் என்ற அடிப்படையில் கூட வழங்குவதற்குத் தயாராக இல்லை. கூட்டமைப்பு முதலில் செயல் வலுவுடைய மாகாண சபையை அமைத்து இலங்கை முழுமைக்கும் முன் மாதிரியான ஒன்றாகக்காட்ட வேண்டும். இதை முதலமைச்சர் விக்னேஸ்வரனால் செய்ய முடியும்**

முற்போக்காளர்கள். தெற்கின் சிங்கள மேலாண்மைச் சிந்தனையுடைய சக்திகள் இவர்களைத் தடுத்து நிறுத்தியிருக்காவிட்டால் யாவருக்கும் நீதியான முறையில் தேசிய இனப்பிரச்சினையை இவர்கள் தீர்வு செய்திருப்பார்கள்.

ராஜபக்ஷவின் நிலை இன்னும் கடினமானது. ராஜபக்ஷ வீரம்மிக்க றுகுணுவில் காலூன்றி நிற்பவர். வேறு எந்தத் தலைவருக்கும் இத்தகைய றுகுணுப் பாரம்பரியம் என்ற கதையாடல் இருக்கவில்லை. இதனால் ராஜபக்ஷ அந்த மரபுடன் தனக்குள்ள அந்நியோன்ய உறவு பற்றி அதிக கரிசனை உடையவராக இருக்கிறார்.

மறுபுறத்தில் அவர் ஒரு பிராந்தியத்தின் மரபுவழித் தலைவன் என்ற நிலையில் இருந்து விலகி முழுத்தேசத்தினதும் தலைவராக, பல இனங்கள், பல மதங்கள், பல பண்பாடுகள் கொண்ட ஒரு தேசத்துக்கு தலைமை தாங்குபவர் என்ற நிலைக்கு உயருதலும் வேண்டும். பிராந்தியத் தலைவர் என்பதை விட தேசத்தின் தலைவர் என்ற பொறுப்பு மகத்தான பொறுப்பு என்பதை அவர் உணர வேண்டும்.

பிராந்தியம் ஒன்றின் மரபுவழித் தலைவர் என்ற நிலையில் இருந்து தேசத்தின் நாயகனாக அனுபவம் மிக்க, மதிப்பு மிக்க தலைவராகத் தன்னை உயர்த்திக் கொள்வது எவ்வாறு? இந்த நிலைமாற்றம் அரசியல் யாப்புக் கட்டமைப்புகளூடாக ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் தனிப்பட்ட அவரது உணர்வு நிலையில் முதலில் ஏற்படவேண்டும்.

எனக்கு ராஜபக்ஷவை நேரடியாகத் தெரியாது. ஆயினும் இந்த நீண்டகால எல்லையில் அவர் உணர்வு நிலையில் இந்த மாறுதலைச் செய்துகொள்வதற்கு முயற்சித்து வருவதை நான் கண்டிருக்கிறேன். அவர் நாட்டின் ஜனாதிபதியாகி ஏழாண்டுகள் ஆகிவிட்டன. இக்காலத்திற்குள் அவர் பழுத்த அனுபவம் மிக்க தேசத்தலைவராக ஆகிவிட்டார் என்றும், குறுகிய பிராந்தியத்தின் சிற்றூர்த் தலைவர் என்ற நிலையில் இருந்து உயர்ந்துவிட்டார் என்றும் கூற முடியும்.

### ராஜபக்ஷவினால் மக்களின் உணர்வு நிலையை மாற்ற முடியுமா?

இன்றுள்ள சிக்கலுக்குள் இருந்து விடுபடுவதானால், இரண்டு வழிகள் உள்ளன. அரசியல் யாப்புப் பேரவை ஒன்றை அமைத்தல் ஒரு வழி, தற்போதைய அரசியல் யாப்பின் 86 ஆவது உறுப்புரையின்படி அதிகாரங்களை உபயோகிப்பது இன்னொரு வழி. இன்னொரு அரசியல் யாப்புப் பேரவையை அமைப்பதால் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது? திருமதி பண்டாரநாயக்கா 1972 இல் அமைத்த அரசியல் யாப்புப் பேரவை என்ன செய்ததோ அதனையே ஒரு அரசியல் யாப்புப் பேரவை செய்யக் கூடும். ஒவ்வொரு அரசியல் யாப்புப் பேரவையும் சிங்கள் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும். அப்பேரவைகளும் பாராளுமன்றத்தின் வரையறைகளுக்குள் நின்றே செயல்படும். இதுபோன்றே 86 வழியான நடவடிக்கையும் பெரும்பான்மை உணர்வு நிலையின் பெறுபேறாகவே அமைந்து விடக்கூடும். ஆகவே இன்றைய தேவை அரசியல் யாப்பு வழிமுறைகளை நாடுவதல்ல. மேலாதிக்கச் சிங்கள உணர்வு நிலையில் இருந்து முற்றாக விடுபட்ட ஒரு புதிய திருப்பமே இன்று எமக்குத் தேவை. அது மீண்டும் தலையெடுப்பதல்ல. வரலாற்றுச் செயல்முறையூடாக அது இனி ஒருபோதும் மீண்டுவராதபடி தவிர்த்தல் வேண்டும். தொலைநோக்கும், திறமையும், ஆளுமைக் கவர்ச்சியும் மிக்க ஒரு தலைவரால் முழுத்தேசத்தினதும் உணர்வு நிலையை மாற்றி அவர்களை தடைகளைத் தாண்டி முன்னோக்கி அழைத்துச் செல்ல முடியும். நீண்ட வரலாற்றுச் செயல்முறை மூலம் நடைபெற வேண்டிய ஒன்றை ஒரே ஒரு பெரும்தாவலாகத் தாண்டிச் சென்றுவிட முடியும். இந்தியாவில் மகாத்மாகாந்தி அதனைச் செய்தார், அமெரிக்காவில் மார்ட்டின் லூதர் கிங்கும் தென்னாபிரிக்காவில் மண்டேலாவும் அதனைச் செய்து காட்டினர்.



பிராந்தியம் ஒன்றின் மரபு வழித்தலைவர் என்ற நிலையிலிருந்து தேசத்தின் நாயகனாக அனுபவமிக்க, மதிப்புமிக்க தலைவராக ஜனாதிபதி ராஜபக்ஷ தன்னை உயர்த்திக்கொள்வது எவ்வாறு? இந்த நிலைமாற்றம் அரசியல் யாப்புக் கட்டமைப்புகளூடாக ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் தனிப்பட்ட அவரது உணர்வு நிலையில் முதலில் ஏற்பட வேண்டும்

மகிந்த ராஜபக்ஷவால் இலங்கையில் மாற்றத்திற்கான முகவர் அல்லது செயலூக்கி என்ற வகிபாகத்தைப் பெறமுடியுமா? தன்னை உருவாக்கிய மக்களின் உணர்வு நிலையை தான் வெளிப்படுத்தி நிற்பதுடன், அவர் நின்று விடுவாரா? அது எந்தவொரு மூன்றாம் தர அரசியல்வாதியும் செய்து விடக்கூடிய பணி. ஆனால் அதற்கும் அப்பால் சென்று, உயர் விழுமியங்களைக் கொண்ட புதிய உணர்வுநிலையைக் கட்டியெழுப்பி மக்களை அந்த உணர்வு நிலைக்கு உயரச் செய்ய அவரால் முடியுமா?

இப்போது நாம் முன்னோக்கிச் செல்ல முடியாத முட்டுச்சந்தியில் நின்று தவிக்கிறோம். ஜனாதிபதி ராஜபக்ஷவால் இந்த இக்கட்டில் இருந்து எம்மை மீட்க முடியும். அவர் தொலைநோக்கோடு செயற்பட்டு அரசியல் யாப்பின் உறுப்புரை 86 இன்படியான வழிமுறையைக் கையில் எடுப்பாரா

னால், அதற்கான இயக்கத்தைத் தொடங்குவாரானால் மக்களின் உணர்வு நிலையில் பெருமாற்றத்தை அவரால் ஏற்படுத்த முடியும்.

அண்மையில் (2013ஆம் ஆண்டில்) நடந்து முடிந்த தேர்தல்களின் முடிவுகள், அவர் ஏழு ஆண்டுகள் பதவியில் இருந்த பின்னரும் கூட நாட்டின் ஆதரவுத்தளத்தை இழக்கவில்லை என்பதையும் வடக்கு மாகாண சபை பகுதிக்கு வெளியே 58 வீத வாக்காளர்கள் அவரின் பின்னால் நிற்கிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. தனிநபர்களைக் கையாள்வதில் அவருக்கு இருக்கும் திறமைக்கு ஈடாக ஒரு அரசியல் தலைவரை நான் எனது 84 வருட வாழ்க்கையில் இலங்கையிலோ, வெளிநாடுகளிலோ கண்டதில்லை. அரசியல் அரங்கில் இவ்விடயத்தில் அவர் காட்டிய மதிநுட்பம் ஈடு இணையற்றது. எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள், ஆய்வறிவாளர்கள், புலமையாளர்கள், பெரும்வர்த்தகப் புள்ளிகள், ஊடகவியலாளர்கள், சமயத்தலைவர்கள் என்று ஒரு பெரும் கூட்டமே அவருடைய தாளத்திற்கு ஆடுவதற்குத் தயாராக உள்ளனர். பாராளுமன்றத்தில் அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் போகும் ஆபத்து எழுகின்றது என வைத்துக் கொள்வோம். அவர் எஞ்சியிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவருக்கும் ஒவ்வொரு அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து அவர்களை வசப்படுத்தி விடுவார். ஆட்களைக் கையாளும் அவருடைய திறமை அசாதாரணமானது! ஆதலால் அவர் தொலை நோக்குடனும் மன உறுதியுடனும் செயற்படுவாரானால் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழியில் யாவரையும் சேர்த்து நடத்திச் செல்வது அவரால் செய்து முடிக்கக்கூடிய ஒரு பணி என்றே நான் கருதுகிறேன். அதற்கு அவர் உறுப்புரை 86 ஐ ஒரு வழியாகத் தேர்ந்து கொள்ள வேண்டும்.

வீதி அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்தி என்ற இரண்டிலுமாக ராஜபக்ஷ நாட்டுக்குச் செய்த நன்மைகளை விட ஒப்பீட்டளவில் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் மகாவலி திசை திருப்புத்திட்டம் பெருநன்மைகளைக் கொண்டு வந்ததென்பது உண்மையாகும். ஆனால் மகிந்த ராஜபக்ஷ தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கொண்டு வருவாரானால் அத்தீர்வு கொண்டுவரக் கூடிய நன்மைகள் அவரது கட்டுமானப்பணிகளால் கிடைத்த நன்மைகளை விடப் பெரிதாக இருக்கும். அது மட்டுமல்ல, அவருக்கு முன்னிருந்த அரசுத் தலைவர்களின் சாதனைகளை விட மகிந்த ராஜபக்ஷவின் சாதனைகள் விஞ்சி நிற்கும். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற சாதனையை அவர் நிகழ்த்தினால் வரலாற்றில் அவர் அழியாத ஒரு இடத்தைப் பெறுவார். மகாவம்ச காவிய வீரர்களில் அவர் ஒருவராகி 'மகா மகிந்த ராஜபக்ஷ' என்ற புகழைப்பெறுவார்.

> ஜனாதிபதி ராஜபக்ஷ தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்கொண்டு வருவாரேயானால் அத்தீர்வு கொண்டு வரக்கூடிய நன்மைகள் அவரது அரசாங்கத்தினால் இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட கட்டுமானப்பணிகளால் கிடைத்த நன்மைகளை விடவும் பெரிதாக இருக்கும். அது மட்டுமல்ல, அவருக்கு முன்னிருந்த அரச தலைவர்களின் சாதனைகளை விட ராஜபக்ஷவின் சாதனைகள் மிஞ்சி நிற்கும்



இக்கட்டுரையின் முடிவுரையாக நான் 2008ஆம் ஆண்டில் எழுதிய எனது நினைவுக்குறிப்புகளின் ஒன்பதாவது அத்தியாயத்தில் இருந்து ஒரு மேற்கோளைத் தரவிரும்புகிறேன். இது விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு ஆறு மாதங்கள் முன்பு நான் எழுதியது.

'எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் என்பதால் ஒரு பெரும்பான்மைச் சமூகத்திற்கு எல்லாரையும் விஞ்சிய மேன்மையொன்று இருக்கலாம். ஆயினும் அச்சமூகத்திற்குத் தார்மீக அதிகாரமும் உண்மையான பெருமையும் அதனால் மட்டும் கிடைத்து விட மாட்டாது. சிறுபான்மையினராகவும் எண்ணிக்கையினால் பெறும் பலம் இல்லாதவர்களுக்கு, தமக்குச் சமதையான அந்தஸ்தையும், கௌரவத்தையும் வழங்கவேண்டும். சிறுபான்மையினர் தாம் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்ற காரணத்தினால் அல்லது தாம் வேறு இனத்தவர் அல்லது மதத்தினர் என்ற காரணத்தால் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டும் ஒறுப்புகளுக்கும் ஆளாகியும் உள்ளோம் என்ற உணர்வைப் பெறும் நிலை இருக்கக்கூடாது. இதன் மூலமே பெரும்பான்மைச் சமூகம் மதிப்பையும், மேன்மையையும் பெற்றுக் கொள்ள முடியும். இந்த உண்மையை உணரக்கூடியவர்களும், இந்த உண்மையின் புரிதலின் அடிப்படையில் வகுக்கப்படும் கொள்கைத் திட்டங்களைச் செயற்படுத்தும் தகைமையுடையவர்களுமான தலைவர்களை இலங்கை உருவாக்கும் வரை இலங்கைக்கு விடிவு இல்லை. பிரபாகரன் மறைந்து வரலாற்றால் மறக்கப்பட்டு நீண்ட காலம் கடந்த பின்பும் கூட இந்நாடு மோதல்களால் பிளவுண்டு சிதறுண்டபடியே இருக்கும். ■

*'தமிழாக்கம் ஹரன்'*

**தமிழக பிரதிபலிப்பு**



என்.சத்தியமூர்த்தி

பொதுநலவரசு உச்சி மகாநாட்டை பயன்படுத்தி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான இடைவெளியை அதிகரிக்க முயன்று அதில் வெற்றியும் கண்ட சக்திகள் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து என்ன நினைத்து செயற்படுகிறார்கள் என்று முடிவு செய்வதற்கு அதிக முயற்சி தேவையில்லை. அரசியல் தீர்வு அல்ல அவர்களது அடிப்படை நோக்கம்

# தமிழ்நாடு சொல்லும் செய்தியும், சொல்லாத செய்தியும்

இலங்கையில், பொதுநலவரசு உச்சி மகாநாட்டில் இந்திய பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்ளாமைக்கு தமிழ் நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும், அவை சார்ந்த தலைவர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. அதேசமயம், அவர்களின் கண்கள், கடலுக்கு அப்பால் உள்ள இலங்கைத் தமிழ்ச் சகோதரர்களின் நலனுக்காக மட்டுமே இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்று யாராவது கருதினால், அது குறைந்தபட்சம் தவறான கருத்தே. மாறாக, வெறும் வாயை சுவைப்பவனுக்கு ஒரு பிடி அவல் கிடைத்த கதையாகவே தமிழ் நாடு அரசியல் கட்சிகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையை தொடர்ந்து பார்த்து வருகிறார்கள் என்பது வருந்தத்தக்க விடயம். ஆனால், அதுவே உண்மை நிலைமையும் கூட.

இதற்கு, அண்மைக்கால உதாரணம் ஒன்று. வட மாகாண சபைத் தேர்தல் முடிந்து, அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 'அசைக்க முடியாத' வெற்றி அடைந்த பின்னரும் கூட தமிழ் நாட்டில் ஆட்சி செய்யும் அ.இ.அ.தி. மு.க முதல்வர் ஜெயலலிதா, அந்தக் கட்சியை வாழ்த்தி ஒரு அறிக்கை கூட இன்றளவும் வெளியிடவில்லை. அதுபோன்றே, வட மாகாண முதல்வர், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் பதவி ஏற்ற போதும், அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்கவில்லை.

ஜெயலலிதாவை வைத்து நோக்கும் போது, தமிழ் நாட்டின் முன்னாள் முதல்வரும் தி.மு.க கட்சியின் தலைவருமான மு.கருணாநிதி பரவாயில்லை எனலாம். கூட்டமைப்பின் தேர்தல் வெற்றி உறுதியான கையோடு, ஒரு வாழ்த்துச்செய்தி



வெளியிட்டார். மற்றபடி, அவரும் சரி, தி.மு.க. கட்சியும் சரி, அவர்களும் கூட இலங்கைத் தமிழர் பிரச்சினையை உள்நாட்டு தேர்தல் களத்தில் உருட்டி விளையாடும் பகடைக்காயாகவே பெரும்பாலும் காண்கின்றனர்.

இது இப்படி என்றால், தமிழ் நாட்டில் உள்ள பிற கட்சிகள் குறித்து எதுவுமே கூறத் தேவையில்லை. வடமாகாண தேர்தல் காலகட்டத்தில், விக்னேஸ்வரன் இந்தியாவிற்கு ஆதரவாக பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்த ஒரே காரணத்தினால், தமிழ் நாட்டில் உள்ள சில அரசியல் தலைவர்கள் அவரை வெளிப்படையாகவே விமர்சித்தனர். ஏன், அவர் இந்திய அரசு மற்றும் இலங்கை அரசின் கைப்பாவை என்ற நிலைக்குக் கூட இறக்கப்பட்டு கொச்சைப்படுத்தப்பட்டார். அதிலும், 'நான் முந்தி, நீ பிந்தி' என்ற அரசியல் தொனியே அதிகமாக வெளிப்பட்டது. ஏன், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தமிழ் நாட்டில் சட்டத்திற்கு எதிராக செயற்படும் சில அமைப்புகளுக்கு இடையே கூட இத்தகைய போட்டா-போட்டி தொடர்ந்து நிலவி வருகிறது என்பதே உண்மை.

### தனிமைப்படுத்தல்

அடுத்த வருடம் இந்திய பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெறவுள்ளது. அதில், மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சியை தனிமைப் படுத்தும் முயற்சியே தமிழ் நாட்டு அரசியலின் தற்போதைய முக்கிய கட்டம். அதற்கு, தன் பங்கிற்காக இலங்கை இனப்பிரச்சினையை பயன்படுத்துகிறது என்பதே அப்பட்டமான உண்மை. தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியை தனிமைப்படுத்துவது, இலங்கை அரசை மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான மன்மோகன் சிங் அரசு இனப் போர் காலகட்டத்தில் முற்றிலுமாக ஆதரித்தது என்பதல்ல காரணம்.

மாறாக, தற்போதைய தேர்தல் அரசியலில், கழுதை தேய்ந்து கட்டெறும்பாய் மாறிப்போன காங்கிரஸ் கட்சியின் வாக்கு வங்கி இன்னமும் கூட அடுத்த கட்சிக்கு பயன்படக்கூடாது என்பதில் தி.மு.க. மற்றும் அ.இ.அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளுமே தெளிவாக உள்ளன. ஆதனால்தான், இனப்போரின் உச்சகட்டத்தில் நடந்த இந்திய பாராளுமன்ற தேர்தலில் இலங்கை பிரச்சினை எந்த விதத்திலும் தமிழ் நாட்டு தேர்தல் களத்தில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஏன், விடுதலைப் புலிகள் இயக்கத்தினை வெகுவாகப் பாராட்டி பேசிவரும் ம.தி.மு.க. தலைவர் வைகோ, தனது சொந்த தொகுதியான சிவகாசியில் தி.மு.க. ஆதரவு பெற்ற, அறிமுகம் இல்லாத காங்கிரஸ் வேட்பாளரான மாணிக்தாகூரிடம் தோல்வியைத் தழுவினார்.

### விஷப் பரீட்சை

தமிழ்நாடு அரசியலுக்கும் தேர்தலுக்கும் 'ஆறு' வித்தியாசங்கள் உள்ளன. அவற்றை, தமிழ் நாட்டின் இராஜதந்திரிகளான அரசியல் தலைவர்களாலேயே இன்னமும் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு தேர்தலில் பெரும் வெற்றி பெற்ற கூட்டணி அடுத்து நடைபெறும் தேர்தலில் கடும் தோல்வியைச் சந்தித்துள்ளது. ஒரு தேர்தலில் வெற்றி கண்ட உத்தி, அடுத்த தேர்தலில் காலைவாரி விடுகிறது. ஆனால், ஒரு தேர்தலில் முக்கிய பிரச்சினையாகக் கருதப்படும் கருத்தை, தமிழ் நாடு வாக்காளர்கள் அடுத்து வரும் தேர்தல்களில் கண்டு கொள்வதில்லை. இதற்கு ஒரே விதிவிலக்கு, மக்களின் அன்றாடத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்த கவலைகள் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஆகியவையே தமிழ்நாடு மற்றும் இந்திய அளவில் வாக்காளர்களை அடுத்து வரும் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்று முடிவு செய்யத் தூண்டி உள்ளது.

அந்த விதத்தில், தமிழ் நாட்டு தேர்தல் அரசியலில் இலங்கை இனப்பிரச்சினை 2009 ஆண்டு தேர்தலிலேயே காலாவதியாகிப் போய்விட்டது. ஏன், கடந்த 1991 ஆம் ஆண்டு தேர்தலில் கூட 'ராஜீவ் காந்தி படுகொலை' மீதான வாக்களிப்பு விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எதிரான வாக்கு அல்ல. மாறாக, தமிழ் நாட்டில், முந்தைய தி.மு.க. ஆட்சி (1989-91) காலத்தில் நிலவிய சட்டம்-ஒழுங்கு மற்றும் அதனால் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் தமிழ் நாட்டிற்கு தேசிய அளவில் ஏற்பட்ட தலைகுனிவு ஆகியவையே அந்தத் தேர்தலில் தி.மு.க. கட்சி தொடங்கிய நாள் முதல் இல்லாத படுதோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.

தற்போது, இனப்பிரச்சினை என்ற பெயரில், இலங்கை அரசையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் உலகளவில் தலைகுனிய வைக்க வேண்டும் என்ற ஒற்றை நோக்கிலேயே இலங்கைத் தமிழ் அமைப்பினர் சிலரும், புலம்பெயர்ந்த தமிழர்களில் பல







ரும் செயற்பட்டு வருகின்றனர் என்று எண்ணத்தோன்றுகிறது. அவர்க ளைப் பொறுத்தவரையில், பொதுநல வரசு மகாநாட்டில் இந்திய பிரதமர் கலந்து கொள்ளவில்லை என்றால், அதுவே அவர்களுக்கு கிடைத்த வெற்றியாக கருதத் தொடங்கி விட்ட னர். அதற்கு, எவ்வாறெல்லாம் தமிழ் நாடு அரசியல் கட்சிகளையும் அதன் தலைவர்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அளவிலேயே அவர்களது உத்திகளும் நிலைகொண் டுள்ளது. இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து அவர்கள் கவலைப்படு வதாகவே தெரியவில்லை.

இது ஒரு விஷப் பரீட்சை என்பதை இதற்காக 'ரும் போட்டு' திட்டம் தீட் டும் புலம்பெயர்ந்த தமிழர்கள் உணர் ந்து கொள்ள வேண்டும். 'தொப்புள் கொடி உறவு' என்று கூறிக்கொண்டா லும், தமிழ் நாட்டுடனான சமகால அரசியல் உறவு என்பது, அந்த மாநி லத்தில் தேர்தல் அரசியலுக்கான ஒரு பகடைக்காய் என்பது மட்டுமே உண்மை. எட்டு கோடி தமிழ் மக்க ளின் உணர்வு என்ற பெயரில் அங்கு ஆடப்படும் அரசியல் ஆட்டம், அடு த்து வரும் காலங்களில் இனப் பிரச்சி னையையே நீர்த்துப்போக வைத்து விட்டால், இலங்கைத் தமிழர்களின் அறிவுஜீவிகள் தங்களைத்தான் குறை கூறிக்கொள்ள வேண்டுமே தவிர, தமிழ் நாடு அரசியல் தலைவர்களை அல்ல.

தாயும் பிள்ளையும் ஒன்றானாலும், வாயும் வயிறும் வேறு. ஏன், தமிழ் நாட்டில் இனப்பிரச்சினை காரண மாக எந்தவொரு அசம்பாவிதம் அரங்கேறினாலும், அரசியல் கட்சிக ளும் அதன் தலைவர்களும் இனப்பி ரச்சினையைக் கைவிட்டுவிட்டு, துண் டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடி விடுவார்கள். அண்மையில், சென்னை நகரத்தின் முக்கிய பகுதிகளில் மத்திய அரசுக் குச் சொந்தமான இரண்டு தபால் நிலையங்களில் வீசப்பட்ட பெற் றோல் குண்டுகளுக்கு யாராவது பலி யாகி இருந்தால் கூட, நிலைமை இது வாகத்தான் இருந்திருக்கும்.

**இந்தியாவுடனான உறவு என்று மட்டுமல்ல, இனப்பிரச் சினைக்கான முடிவு என்ற விடயத்திலும் தமது நிலைப் பாட்டை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தெளிவுபடுத்த வேண்டும். அதை அலட்சியம் செய்து செயற்பட்டுக் கொண்டிருந்தால் பின்னர் அரங்கேறும் நிகழ்வுக்கான தார்மீக பொறுப்பை அவர்கள் தட்டிக்கழித்து விட முடியாது. இனப்போராட்டம் இனப்போராக உருவெடுத்ததற்கான காலகட்டத்தில் மிதவாத தமிழ்த் தலைமைகள் சரியான நிலைப்பாட்டை எடுத்து அதை தமிழ் மக்களிடம் எடுத்துச் செல்லத் தவறியதால்தான் பின்னர் விழைந்த துயரச் சம்வங்களுக்கு தமிழினம் பழியாக வேண்டியிருந்தது**

ஒரு தபால் நிலையத்தில் கண் காணிப்பு கமெராக்கள் பொருத்தப் பட்டுள்ளது கூட தெரிந்துகொள்ள முயலாத கைது செய்யப்பட்ட நான்கு நபர்களும், இரவு நேரமானாலும் அந்த அலுவலகங்களில் யாராவது வேலை செய்து கொண்டிருந்திருக்க லாம் என்று எண்ணி செயற்பட்டதா கக் கருத இடமில்லை. தாக்குதல் நடந் தபோது அந்த அலுவலகங்களில் யாரும் இருக்கவில்லை என்பது ஆண்டவன் செயல். அவ்வளவு தான்.

இதற்காக, இனப்பிரச்சினையின் பெயரில் தமிழ் நாட்டில் அவ்வப் போது அரங்கேறும் வன்முறைச் செயல்களுக்கு, இலங்கைத் தமிழர் அமைப்புகள் காரணம் என்று பொருள் அல்ல. கூட்டுத் தலைமை இல்லாத எதிர் முறை போராட்டங் கள் என்று வந்தபிறகு, அதன் எதிர்வி னைகளுக்கு பிரச்சினைக்கான கரு வும் அதனால் பாதிக்கப்பட்ட மக்க ளும் பொறுப்பேற்கும் சூழ்நிலை உருவாகிவிடும்.

ராஜீவ் காந்தி படுகொலை விடுத்த செய்தியும் இதுதான். ஒன்று, இல ங்கை இனப்பிரச்சினை விடயங்க ளில் இந்தியா தனது பங்களிப்பை முற்றிலுமாக நிறுத்திக் கொண்டது. இரண்டு, இனப்பிரச்சினையோடு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கான ஆதரவை குழப்பி, தமிழ் நாட்டில் கூட இலங்கைத் தமிழ் மக்கள் சந்தே கக் கண்ணோடு பார்க்கப்பட்டார்கள். தமிழ் நாட்டில் உயிருக்கும் உடை மைக்கும் புகலிடம் தேடிச் சென்ற இலட்சத்திற்கும் மேலான இலங்கைத் தமிழ் மக்கள், தமிழ் நாடு முழுவதும் இந்திய மத்திய அரசின் நிதி உதவியு டன் நிறுவப்பட்ட மறுவாழ்வு இல் லங்களில் இருந்து, பணி மற்றும் உடல்நலக் குறைவு நிமித்தம் கூட வெளியே சென்று வருவதற்கு கூட பயந்தார்கள்.

### இந்தியாவை ஒதுக்கி விட்டு

இன்று, பொதுநலவரசு உச்சி மகா நாட்டை பயன்படுத்தி, இந்தியா விற்கும் இலங்கைக்கும் இடையே யான இடைவெளியை அதிகரிக்க முயன்று, அதில் வெற்றியும் கண் டுள்ள சக்திகள், இனப்பிரச்சினைக் கான தீர்வு குறித்து என்ன நினைத்து செயற்படுகிறார்கள் என்று முடிவு செய்வதற்கு அதிக முயற்சி தேவை யில்லை.இனப்பிரச்சினைக்கான அர சியல் தீர்வு அல்ல அவர்களது திட் டம். அதனைத் தொடர் காரணமாக முன்வைத்து, கத்தி இன்றி, இரத்தம் இன்றி, 'தனி நாடு' கோருவதே அவர் களது எண்ணமாக இருக்க வேண் டும்.

இந்தப் பின்னணியில், இந்தியா போன்ற ஒரு நாடு இலங்கையுட னான நல்லுறவைப் பேணவில்லை



என்றால் அதன் காரணமாக, இனப்பிரச்சினை எனும் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறும் சூழல் உருவானால், அதனால் மீண்டும் இலங்கை அரசு தரப்பை சமாதானப் போராட்டங்கள் மூலம் உசுப்பிவிட்டு, அதன் மூலம் ‘தனி நாடு’ கோரிக்கையை உயிர்த்தெழச் செய்யலாம் என்ற எண்ணம் படைத்தோரும் புலம்பெயர்ந்தோர் மத்தியில் உள்ளனர். அவர்களது செயற்திட்டம், அதன் அடிப்படையிலான தற்போதைய செயற்பாடு ஆகியவற்றை, இலங்கையிலேயே தொடர்ந்து வாழ்ந்து வரும் தமிழ்ச் சமூகத்தினர் ஏற்றுக்கொண்டுள்ளார்களா? அத்தகைய எண்ண வோட்டத்தை அவர்கள் ஆதரிக்கிறார்களா?

இலங்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டான உரிய அரசியல் அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்னரே, கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக அதனை தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்று இந்தியா அங்கீகாரம் கொடுத்து செயற்பட்டு வந்துள்ளது. தற்போது, வட மாகாண தேர்தலில் அந்தக் கட்சிக்கு மாபெரும் வெற்றி கிடைத்து ஆட்சி அமைத்துள்ள நிலையில், இந்தியாவுடனான இலங்கை அரசு உறவு மட்டுமல்ல, அதன் காரணமாக கூட்டமைப்பு மற்றும் வட மாகாண அரசு ஆகியவற்றுடனான உறவும் ஆட்டம் கண்டுள்ளது.

ஆனால், மாகாண சபைத் தேர்தல் முடிந்த கையோடு, கூட்டமைப்பு தலைமையில் சிலர் கூட, தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளை முன்னிலைப்படுத்தத் தொடங்கி உள்ளனர். ஆனால், தேசிய கட்சிகளின் மாநில தலைவர்கள் தவிர, மற்றனைவருமே இலங்கை இனப்பிரச்சினையை ‘ஊறுகாய்’ போலவே பார்த்து, பயன்படுத்திக்கொள்ள விழைகிறார்கள். தேசிய கட்சிகளின் தேசிய தலைமைகளோ, தங்களது தேசிய அளவிலான சித்தாந்தங்களின் அடிப்படையிலேயே பிரச்சினைகளை அணுகி வந்துள்ளன.

இந்தியாவுடனான உறவு என்று மட்டுமல்ல, இனப்பிரச்சினைக்கான முடிவு என்ற விடயத்திலும் தனது நிலைப்பாட்டை, இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ அரசிற்கு தலைமை ஏற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவுபடுத்த வேண்டும். இல்லாது, தொடர்ந்தும் கண்ணடைத்து செயற்பட்டுக் கொண்டிருந்தால், பின்னர் அரங்கேறும் நிகழ்வுகளுக்கான தார்மீகப் பொறுப்பை அவர்கள் தட்டிக் கழித்துவிட முடியாது. இனப் போராட்டம், இனப்போராக உருவெடுத்ததற்கு இடையேயான காலகட்டத்தில், மிதவாத தமிழ் அரசியல் தலைமைகள் சரியான நிலைப்பாட்டை எடுத்து அதனை தங்களது மக்களிடம் எடுத்துச் செல்லத் தவறியதால்தான், பின் விளைந்த துயர் சம்பவங்களுக்கு தமிழினம் பலியாக வேண்டியிருந்தது என்பதும் உண்மையே.

அண்மையில் நடந்து முடிந்த வட மாகாண தேர்தலில் கூட்டமைப்பு, சுமார் எண்பது சதவீத வாக்குகளைப் பெற்று 38 உறுப்பினர் உள்ள மாகாண சபையில் 30 உறுப்பினர்களைப் பெற்றுள்ளது குறிப்பிட்டுப் பேசப்படுகிறது. ஆனால், மொத்தமுள்ள வாக்காளர்களில் 64 சதவீதத்தினரே வாக்களித்துள்ளனர் என்பதை உள்கொண்டு நோக்கினால், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தேர்தலில் கூட, கூட்டமைப்பு 50 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளையே பெற்றுள்ளது என்ற உண்மை புலப்படும்.

இது தமிழ்ச் சமூகம், கூட்டமைப்பிற்கு அடித்துள்ள எச்சரிக்கை மணி. இனப்பிரச்சினை, ஓர் அரசியல் பிரச்சினை என்பதை மட்டுமே பெரிதுபடுத்தி இராணுவத்தை பின்வாங்க வேண்டும், ஆளுனரை மாற்ற வேண்டும் என்பது போன்ற விடயங்களில் மட்டுமே கூட்டமைப்பும் வட மாகாண அரசும் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்தால், அவர்களது மக்களின் கவனம் வேறு எங்காவது போய்விடும்.

அந்த ‘கவனக்குறைவு’, உரிமைக்காக இலங்கை மத்திய அரசை எதிர்த்து அரசியல் போராட்டமாக இருக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை. உணவு, உறைவிடம், குடி தண்ணீர், மின்சாரம், சாலை மற்றும் போக்குவரத்து வசதி உட்பட்ட அடிப்படைத் தேவைகளை முன்னிறுத்தி, மாகாண அரசிற்கு எதிராகவும் அத்தகைய போராட்டம், உயிர்த்தெழலாம். இந்த உண்மையை கூட்டமைப்பு தலைமையும், புலம்பெயர்ந்தோர் குழுக்களும் உணர்ந்து செயற்பட வேண்டும். அந்த வகையில், இந்தியா மற்றும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஆகிய விடயங்கள் வட மாகாண அரசு செயற்பாட்டின் ஒரு அலகு மட்டுமே. ஆட்சித் திறன் மட்டுமே வட மாகாண வாக்காளர்களில் பெரும்பகுதியின் முன்நிற்கும் முக்கிய பிரச்சினை. முழு பிரச்சினையும் கூட! ■

# பௌத்த விகாரைகளும் நில ஆக்கிரமிப்பும்



க.குருநாதன்

ஆலயங்கள் மனிதனைப் பண்படுத்தவே அமைக்கப்படுகின்றன. அது சமூகத்தைப் புண்படுத்த வல்ல. இன்று பல தமிழ், முஸ்லிம் கிராமங்களில் பௌத்த மக்கள் வாழாத இடங்களில் கூட பௌத்த ஆலயங்கள் அமைக்கப்படுவதும் அரச நிலங்கள் ஆயிரக்கணக்கில் ஆக்கிரமிக்கப்படுவதும் அந்த நிலங்களின் சட்டரீதியான நில உரிமைகளை ஆராய்ந்து பார்க்காமல் சட்டத்துக்கு மாறாக ஏனைய சமயத்தவர்களின் மனங்களைப் புண்படுத்தும் வகையில் விகாரைகள் அமைக்கப்படுவதும், சில பௌத்த பிக்குகள் தன்னிச்சையாக நடந்து சட்டத்தின் வழி உரிமையுள்ளவர்களிடம் அனுமதி பெறாமல் ஏற்கனவே அரசு பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங்களை ஆக்கிரமித்து விகாரைகளை அமைத்தல் சர்வசாதாரணமான விடயமாகியுள்ளது. இது நிறுவனமயமாக்கப்பட்ட சிங்கள-பௌத்த பேரினவாதமாக (Ethnocratic state) மாற்றப்பட்ட நிலைக்குக் கொண்டு செல்கிறது. சட்டமும் ஒழுங்கும் நிலைகுலைந்த நிலையில் நசுக்கப்படும் சிவில் சமூகமாக தமிழ், முஸ்லிம் மக்களின் நிலையும் அவர்களின் நிலமும் ஆக்கிரமிக்கப்படுகிறது. இதற்கு நிலம் சம்பந்தமாக எந்தச் சட்ட அந்தஸ்தும் இல்லாத உயர் அதிகாரிகளும் படையணிகளும் இந்த பௌத்த ஆலய அத்துமீறலுக்கு துணைநிற்கின்றமை வேதனை அளிக்கின்றது. இதற்கு அவர்கள் கூறும் குருட்டு நியாயம், இந்த நிலங்கள் எல்லாம் பழைமை வாய்ந்த புனித இடங்கள்.



சட்டத்தின் வழி உரிமை உள்ளவர்களிடம் அனுமதி பெறாமல் சில பௌத்த பிக்குகள் தன்னிச்சையாக செயற்பட்டு நிலங்களை ஆக்கிரமித்து விகாரைகளை அமைக்கும் நடவடிக்கைகள் சர்வ சதாரணமானவையாகி விட்டன

காணி ஆணையாளர் நாயகத்தின் விதப்புரையுடன் கூடிய அறிக்கை அமைச்சர் அங்கீகாரம் பெற்ற பின்னர் அரச காணிச்சட்ட ஒழுங்கு விதி 21(2) இன் கீழ் வர்த்தமானி விளம்பரம் மூலம் வெளியிடப்பட்டு பொதுமக்களின் எதிர்ப்பு இல்லாத நிலையிலேயே பௌத்த ஆலயத்திற்கு அரச காணிகள் வழங்கப்படும்.காணி ஆணையாளர் விதப்புரை, காணி அமைச்சர் அங்கீகாரம், வர்த்தமானி விளம்பரம் மூலம் வெளியிடப்பட்டு பொதுமக்கள் எதிர்ப்பு இல்லாமை மூலமே பௌத்த ஆலயத்திற்கு காணி பெறமுடியும்.

ஒரு அரச நிலத்தை சட்ட ரீதியாக அரசிடம் இருந்து பௌத்த ஆலயத்திற்கு புதிதாகப் பெறுவதாயின் பின்வரும் ஆவணங்கள் அவசியம்.

1. பௌத்த அலுவலர்கள், ஆணையாளர் நாயகம் அவர்களால் வழங்கப்பட்ட சான்றிதழின் பிரதி, அப்பிரதியில் இந்த பௌத்த விகாராதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என அவர் சிபார்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். அது இதுவரை வழங்கப்படவில்லையாயின் அந்த ஆலயம் எந்த நிக்காவிற்குள் வருகிறதோ அந்த நிக்காய மகாநாயக்க தேரரால் வழங்கப்பட்ட அதிகாரப்பத்திரம் இருக்கவேண்டும்.

2. இவ்வாலய விகாராதிபதி எந்த நிக்காயவைச் சேர்ந்தவர் என்றும் அந்த நிக்காயவின் மகாநாயக்க தேரரின் பெயரும் வழங்கவேண்டும்.

3. பிரதேச செயலாளர் அல்லது பிரதி ஆணையாளர் (மாவட்டம்) அல்லது உதவிக்காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பாக இருந்தால்



அதாவது மாகாண அதிகாரத்திற்குள் வராத காணிக்கு) இக்காணியை வழங்க சிபார்சு அவசியம். இவை இல்லாமல் காணி ஆணையாளர் தனது சிபார்சை காணி அமைச்சருக்கு அனுப்பமாட்டார். காணி ஆணையாளர் அனுமதியின்றி அரச காணிக்குள் உட்புக முடியாது. ஆனால், இவை எதுவுமில்லாமல் தனியே அரச அதிபர் காணிகளை பௌத்த ஆலயங்கள் அமைக்க அனுமதி வழங்க முடியாது. இன்று திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் இப்படியான சட்டத்திற்கு விரோதமாக அரச காணிகள் ஆலயங்களுக்கு அடாத்துச் செய்யப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

**ஒதுக்குக் காணிகள்:**

1. ஒரு காணி வனவிலங்கு மற்றும் வன திணைக்களத்திற்கோ தொல் பொருள் இடமாகவோ இருந்தால் அதற்கு ஒரு (Demarcation Boundary) நில அளவை வரைபடமும், வர்த்தமானியில் எல்லைகள், பரப்பளவு குறித்த நிபந்தனையுடன் கூடிய வெளிப்படுத்தல் விளம்பரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வனச்சட்டம் பிரிவு மூன்றின் கீழ் அமைச்சரானவர் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் ஒரு பகுதிக்காணியையோ முழுக் காணியையோ (Reserved Forest) 'வன ஒதுக்கு' என வெளிப்படுத்தியிருக்க வேண்டும். வன ஒதுக்காக வரும் காணி (Lands Resumption Ord.) - விட்டதை மீண்டும் கைக்கொள்ளல் சட்டத்தின் கீழோ (Land settlement ord.) காணி நிர்ணய சட்டத்தின் கீழோ அல்லது (Waste Land Ord.) புரண் காணிச்சட்டத்தின் கீழோ அல்லது (Land Acquisition Ord or Act) காணி சுவீகரிப்புச்சட்டத்தின் கீழோ அரச சொத்தாக கொண்டுவரப்பட்டிருத்தல் வேண்டும்.

**நிலம் சம்பந்தமாக எந்தச்சட்ட அந்தஸ்தும் இல்லாத உயர் அதிகாரிகளும் படையினரும் இந்த பௌத்த ஆலய அத்துமீறலுக்கு துணை நிற்கின்றனர். இதற்கு அவர்கள் கூறும் குருட்டு நியாயம் இந்த நிலங்கள் எல்லாம் பழைமை வாய்ந்த புனித இடங்கள் என்பதாகும்**

2. வனச்சட்டத்தின் 78 ஆவது பிரிவு முக்கியமானது. இப்பிரிவின் கீழ் வனச்சட்டத்தின் பொருள்கோடல் (Interpretation). இதில் வன ஒதுக்கு (Reserved forest) என்ன அர்த்தத்தில் உள்ளது என்பதைப் பார்க்கலாம். வன ஒதுக்கு எனக் குறிக்கப்படும் இடத்தில் உப பிரிவு (b) மர நடுகை (plantation) செய்யப்பட்ட இடங்களும் உதாரணமாக, தேக்கம் மரநடுகை செய்த சோலைகளும் வன ஒதுக்காகக் கருதப்படும்.
3. Fauna and Flora Protection Ord. No 2 of 1937 வனக்காணியை தீர்மானிக்கும் அமைச்சரின் வர்த்தமானி அறிவித்தலின் கீழும், வனக்காணி உருவாகும்.
4. வனமும் வனப் பாதுகாப்பு அமைச்சு சுற்றுநிருபம் இலக்கம் 05/ 2001 திகதி 10.08.2001உம் இதில் செய்யப்பட்ட திருத்த சுற்றுநிருபமான சுற்றாடல் அமைச்சு சுற்று நிருபமான இல 02/2006 திகதி 17.05.2006 இனையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இச்சுற்றுநிருபப் படி மாவட்டச் செயலாளர் (GA) பிரதேச செயலாளரால் நிர்வகிக்கப்பட்ட 'சகல காடுகளும்' தேசிய வனக்கொள்கைக்கு அமைய நிர்வகித்தல், மேலும் முன்னேற்றம் செய்தல், பாதுகாத்தல் என்பவற்றிற்காக வனப்பரிபாலன திணைக்களத்திற்கு வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. பொதுத்தேவைக்கு இக்காணிகளில் காணி தேவைப்படும் போது சுற்றாடல் அமைச்சில் இருந்து விடுவித்துக்கொள்ளலாம். குறிப்பிட்ட தேவையான அளவுக்காணியை மட்டும் இதற்காக காணி பயன்பாட்டுக்குழு மூலம் அதாவது, பிரதேச செயலக காணிப்பயன்பாட்டுக்குழுத் தீர்மானம் மாவட்ட அரச அதிபர் தலைமையிலான மாவட்ட காணிப்பயன்பாட்டுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அக்குழுவும் தீர்மானித்து சுற்றாடல் அமைச்சு மூலமாக குறிப்பிட்ட தேவைக்காணியை விடுவித்துக்கொள்ளலாம். ஆனால், இச்சுற்று நிருபத்தின்படி 'சகல காடுகளும்' என்னும்போது ஏற்கனவே ஒருவருக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் இவற்றுள் உள்வாங்கப்படாது. காரணம், பகிர்ந்தளிப்பு முறையாக இரத்துச் செய்யப்படாமல் அதன் உரிமை வனத்திணைக்களத்திற்கு வராது. அத்துடன் 30 வருட இனப்பிரச்சினை காரணமாக ஏற்கனவே 1935ஆம் ஆண்டில் LDO சட்டம் வந்தது. முதல் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு மக்கள் குடியிருந்து அபிவிருத்தி செய்த காணிகள் இடப்பெயர்வினால் கைவிடப்பட்டு காணிகள் காடாகக்

கிடக்க மீண்டும் யுத்தம் முடி ந்த பிற்பாடு மக்கள் தங் கள் காணிகளை அபிவிருத்தி செய்யச் சென்றபோது வனத்திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் மேற்படி இல 05/2001 சுற்று நிருபத்தைக்காட்டி சகல காடுகளும் தமக்குச் சொந்தம் எனக்கூறுவது பொருத்தமில்லாத ஒன்று, இது சட்டத்திற்கு முரணான செயல்.

5. ஆகவே, இன்று எழுந்துள்ள நிலை குறித்து பிரதேச செயலக, மாவட்ட செயலக மட்டத்தில் வன, வன ஜீவராசிகள் ஆகிய இரு திணை க்களங்களுடன் கலந் துரையாடி விசாரணை செய்யப்பட்டு ஏற்கனவே ஆவணம் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டு சட்டரீதியாக உரிமை உள்ளவர்களின் காணி அவர்களுக்கே வழங் கப்படவேண்டியது கண்டிப்பானதாகும்.

6. வனத்திணைக்களம் இன்னுமொரு தகவலைத் தருகி றது. தாங்கள் 1907ஆம் ஆண்டில் இருந்து நில அளவைப் படத்துடனான வர்த்தமானி அறிவித்தல் களை காலத்திற்குக் காலம் செய்து திருகோணமலை யின் பல ஏக்கர் நிலப்பரப்புகளை தமது ஒதுக்காகப் பிரகடனப்படுத்தியதாகவும் அப்போது இருந்த அர சாங்க அதிபர்கள் பின்னர் பிரதேச செயலாளர்கள் இவற்றைக் கருத்தில் கொள்ளாது காணியைத் தம்மிட மிருந்து விடு வித்துக்கொள்ளாது உத்தரவுப்பத்திரத் தின் மூலம் பகிர்ந்தளித்துவிட்டனர். தங்கள் உத்தி யோகத்தர்களும் இதில் அக்கறை இல்லாது விட்டுவிட்டனர் என்ற கூற்றும் நிலவுகிறது. தற்போது பல வர்த்தமானி அறிவித்தல் தம்மிடம் இருந்து தொலை க்கப்பட்டுள்ளதால் தேடிப் பெறமுடியாத நிலை காணப்படுவதாகவும் கூறுகின்றனர்.

7. எது எப்படி இருந்தாலும் 1981 ஆம் ஆண்டுக்கு முன் அரசாங்க அதிபர்களுக்கு அரச காணியைப் பிரித்து வழங்கும் அதிகாரம் இருந்தது. சகல திணைக் களத்திற்கும் தலைவராக மாவட்டத்தில் காணப்பட்ட Lands Resumption ord. No 4 of 1887 இலும் கூட அரச அதிபரே முக்கியமானவராகக் காணப்படு கிறார். இச்சட்டமும் அநேக அரச காணிகளை வனத் திணைக்களக் காணிகளாக மாற்றுவதற்கு துணை நின்ற சட்டங்களில் ஒன்று.

8. 'பொது மக்களுக்கு அரச உத்தியோகத்தர்கள் சட்டரீதி யான எதிர்பார்ப்பை வழங்கிவிட்டு அதனைப் பொருட்படுத்தாது முன்னுக்குப்பின் முரணாக நடக் கக்கூடாது' என மேன்முறையீட்டு நீதிமன்ற வழக் கான CA120/98 சித்திரை 28ஆம் திகதி 2001 ஆண்டு வழக்கில் நீதியரசர் குணவர்த்தன (P/CA) கூறினார். இது ஒரு காணிச்சுவீகரிப்பு வழக்கு.

9. ஆகவே, பொது மக்களுக்கு உத்தரவுப்பத்திரம் மூலம் வழங்கப்பட்ட காணிகளை யுத்தசூழலில் அவர்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து மீண்டும் அக்கா ணிகளை அபிவிருத்தி செய்யச்சென்றபோது அது வனத்திணைக்களக் காணி, ஏற்கனவே வனக்காணி யாக பிரகடனப்படுத்தப்பட்டது எனக் கூறுவது பிழை. பொதுமக்களுக்கு உத்தரவுப்பத்திரத்தை வழங்கியது அரச அதிகாரிகளே.

10. ஆகவே வன, வன ஜீவராசிகள் திணைக்களமும், மாவட்ட செயலாளர்களும் பிரதேச செயலாளர் களும் தீர்க்கமாக விசாரித்து பொது மக்களிடம் உள்ள ஆவணங்களின் உண்மைத்தன்மை அடிப்ப டையில் அக்காணிகளை விடுவித்து பொதுமக்கள் தங்கள் காணியை அபிவிருத்தி செய்ய வழங்கு வதே சாலச்சிறந்தது.

11. அதேநேரம் சட்டத்தின் முன் சகலரும் சமம் என்று அரசியலமைப்பு சட்டத்தின் உறுப்புரை 12 (1) கூறு கிறது. இதற்கமைய சிங்கள மக்களுக்கு ஒரு நியாய மும் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமும் வழங்கக்கூ டாது. இன்று மூதூர் சேருவில பௌத்த ஆலயத்தில் இருந்து பொலநறுவை சோமாவதி சயித்திய பௌத்த ஆலயம் வரை ஆளுநரால் கிட்டத்தட்ட 50டுட் நீளமான வீதி புதிதாக 2007 இல் போடப் பட்டுள்ளது. இவ்வீதியின் இரு மருங்கும் சிங்கள மக்கள் காடுகளை அழித்து அடாத்துச் செய்கின்ற னர். இவை வன இலாகாவின் காணி. இந்த அடாத் துக்காரர்கள் உத்தரவுப்பத்திரம் எதுவும் இல்லாத வர்கள். இவர்களுக்கு எதிராக ஏன் வனத்திணைக்க ளமோ வன ஜீவராசிகள் திணைக்களமோ சட்டநட வடிக்கை எடுத்து அடாத்தை வெளியேற்றவில்லை? விலை உயர்ந்த மரங்கள் வெட்டப்படுகின்றன. இதேபோல் திருகோணமலை - கொழும்பு பிரதான வீதியில் நான்காம் கட்டையில் இருந்து கப்பற்துறை வரை திருமலையில் இருந்து வரும்போது வலது பக்கமாயுள்ள 100m அகலமான கிட்டத்தட்ட 3km நீளமான பாதையின் ஓரக்காணிகள் சிங்கள மக் களால் அடாத்துச் செய்யப்பட்டது. கிட்டத்தட்ட பிரதான பாதை ஓரத்தில் இருந்து 100m அகலக் காணி வனத்திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு உத்தரவுப்பத்திரம் மூலம் அர சாங்க அதிபர்/பிரதேச செயலாளரால் வழங்கப்பட் டது.

12. ஆனால், அந்த 100 மீற்றர் அகலத்தையும் தாண்டி பல மீற்றர் அகலமும் 3km நீளக்காணிகள் வனத்தி ணைக்களத்தால் விடுவிக்கப்படாமல் சிங்கள மக் களால் அடாத்துச் செய்யப்பட்டுள்ளது. நகரத்தை அண்டிய இடமும் கூட. ஏன் அம்மக்களுக்கு எதி ராக வனத்திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுக்க வில்லை என்பது இன்றைய தமிழ் மக்களின் கேள் வியாகும். சட்டத்தின் முன் சகலரும் சமம் என வெறும் அரசியலமைப்பு விதியாக இருந்தால் மக்க ளிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது.

13. ஆகவே, குச்சவெளி பிரதேச செயலகம், திரியாய், புல்மோட்டை, ஆலங்குள மக்களின் காணிகள் வன, வன ஜீவராசிகள் திணைக்களம் மூலம் ஆரா

யப்பட்டு தனியார் காணிகள், ஒப்பக்காணிகள் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு விசாரணை ஒன்றின் மூலம் விடுவிக்கப்படல் வேண்டும். அக் காணிகள் உரிமை உள்ள மக்களால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

**திருகோணமலையில் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் வன இலாகாவுக்குச் சொந்தமான காணிகள், அளவுகள்**

| காட்டு வகை | Extant பரப்பு | Percentage To Total area குச்சவெளி நிலப்பரப்பின் வீதத்தில் |
|---|---|---|
| காடுகள் Forests | 7607.7Ha | 49.16% |
| பற்றைக்காடுகள் Scrub | 935.9Ha | 6.04% |
| சதுப்புநிலக் காடுகள் Marshy | 572.8Ha | 3.69% |
| கண்டல் தாவரக் காடு Mangrove | 37.5Ha | 0.24% |

இத்தகவல் 2006 இல் எடுக்கப்பட்ட Development plane for Trincomalee Metro urban Development area volume one Part I இல் இருந்து பெறப்பட்டது.

பின்வரும் இடங்கள் பௌத்த விகாரைகளுக்கு ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ளன:

1. இலந்தக்குளம் பிரதேச செயலகக் காரியாலயம் குச்சவெளியில் இருந்து கிட்டத்தட்ட 6km தூரம் உள்ள கிராமம். இதில் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான 18 LDO காணித்துண்டுகள் LDO உத்தரவுப்பத்திரம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இக்காணிகளுக்கு அளிப்பு (Grant) வழங்குவதற்கான (Land Marking Plan) நில அளவைப்படமும் காணிகளுக்கு எல்லைக் கல் இட்டு கள அறிக்கையுடன் (Tennermentary Information) பிரதேச செயலகத்தில் காணப்படுகிறது. இக்காணிக்குள் உத்தரவுப்பத்திரக்காரர்கள் கடந்த பல வருடங்களாக யுத்தம் காரணமாகச் செல்லவில்லை. தற்போது சென்று அபிவிருத்தி செய்ய முயன்றபோது ஆயுதப்படைகளால் தடுத்து நிறுத்தப்பட்டு இவை பௌத்த விகாரைக்காணியாம் எனக் கூறியுள்ளார்கள்.
2. செம்மியன்மலைக் கிராமத்தில் பௌத்தவிகாரைக்கு 58 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 8 ஏக்கர் விகாரைக்கும் 50 ஏக்கர் வயல் செய்யவும் பௌத்த குருமார் முனைப்பு. இவையும் தமிழ் மக்கள் வாழ்ந்து பயிர்செய்த நிலங்கள். இங்கு தனியார் காணி இந்த 14220 என்ற உறுதியில் கந்தையா புவிராசசிங்கத்திற்கும் உண்டு. இவ்வுறுதி பிரபல சட்டத்தரணியும் நொத்தாரிசியுமான O.L.M இஸ்மையில் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இன்னும் இந்திராணி என்பவருக்கு 4Ac காணி உத்தரவுப்பத்திர இல 6102இல் 17.12.1974 திகதி வழங்கப்பட்டுள்ளது. இக்காணிகளும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. விகாரைக்கு வழங்க நில அளவைப்படம் (Tracing) கீறப்பட்டு நிலஅளவைத் திணைக்களத்தில் உள்ளது.
3. திரியாய், இக்கிராமம் பௌத்த குமாரால் பெயர் மாற்றம் பெற்று 'திரிகண்டுசாய' என இக்கிராமம் தற்போது அழைக்கப்படுவதோடு, பெயர்ப்பலகை இடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 3000 ஏக்கர் இவ் விகாரைக்கு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதுவும் தமிழ் மக்கள் வாழ்ந்து பயிர்செய்த நிலங்கள். திரியாய் விகாரையைச் சூழவுள்ள நிலப்பரப்பு இது. இந் நிலம் நில அளவை செய்யப்பட்டு படமும் தயாராக உள்ளது.
4. இலந்தக்குளம்; கிராமம் தற்போது 'மசங்கவேவ' என பெயர் மாற்றப்பட்டு 320 ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதில் 300 ஏக்கர் வயலுக்கும் 20 ஏக்கர் பௌத்த ஆலயத்திற்கும் 2010 ஆம் ஆண்டில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. நில அளவை செய்யப்பட்டு படமும் தயார்.



5. இறக்ககண்டி; இக்கிராமத்தில் சிங்கள மக்கள் 1985இல் வாழ்ந்துள்ளனர். இவர்களின் காணிக்கு ஒரு சிலரிடம் உத்தரவுப்பத்திரம் இருந்துள்ளது, சிலரிடம் எந்த ஆவணமும் இல்லை. ஆனால், அவர்களில் பலர் இக்காணிகளை தமிழ் மக்களுக்கு கையளித்து பணமும் பெற்றுச் சென்ற பின் குச்சவெளி பிரதேச செயலகம் இரத்துச் செய்து தமிழ் மக்களுக்கு 1990ஆம் ஆண்டுகளில் உத்தரவுப்பத்திரமும் வழங்கிவிட்டனர். தற்போது காணியை விற்றுச் சென்றவர்களும் அவர்களின் வாரிசுகளும் எந்த வித உத்தரவுப்பத்திரமும் இல்லாமல் சென்றவர்

களும், தமது பழைய காணிக்கு வந்து தமிழ் மக்களை வெளியேறுமாறு கோருகின்றனர்.

6. சலப்பையாறு, புடவைக்கட்டில் வாழ்ந்த சிங்கள மக்கள் இனப்பிரச்சினையால் தாம் அங்கு வாழமுடியாது என அரசைக் கோரி அப்போதே அவர்களுக்கு அரசாங்கம் மாற்றுக்காணி சீனன்குடா, கொட்பே என்ற திருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப்பிரிவில் வழங்கப்பட்டது. ஆனால் அவர்களும் அவர்களின் வாரிசுகளும் மீள தமது பழைய காணியைத் தருமாறு ஆக்கிரமிக்கின்றனர்.

7. Strategic Development Projects Act , No 14 of 2008 என்ற தந்திரோபாய அபிவிருத்தித்திட்ட சட்டத்தின் கீழ் திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலக கும்புறுப்பிட்டி கிராமத்தில் கிட்டத்தட்ட 495 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 150 ஏக்கர் குளிப்பந்து விளையாட்டிற்காகவும் சுற்றுலாத்துறைக்குமாக சுற்றுலாத்துறைச் சட்டம் இல 38 இன் 2008 சட்டத்தின் கீழ் பிரிவு 26 (1) இன் கீழ் சுற்றுலாத்துறைக்கு பராதீனம் செய்யப்பட்டு (Vesting) பின்னர் அரச காணிச்சட்டத்தின் (State Land Ord.) கீழ் அதன் பிரிவு - 2 இன் கீழ் ஜனாதிபதியினால் பூரண அளிப்பாக ஹோட்டல் உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனைப்பெற்றுள்ளவர் ஒரு சிங்கள சகோதரர். இதற்காக வர்த்தமானி வெளியீடு ஆரம்பத்தில் சுற்றுலாத்துறைச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது. அதன் வர்த்தமானி இலக்கம் 1671/29 திகதி 17.9.2010 ஆகும்.

8. குச்சவெளி பிரதேச செயலகத்திற்குப் பின்பக்கமாக கடற்கரையில் சிறிய கல்மலையில் இருந்த பிள்ளையார் சிலை அகற்றப்பட்டு பௌத்த சிலை வைக்கப்பட்டுள்ளது. இதற்கு 'சமுத்திரிகிரி' எனப் பெயர் வைத்துள்ளனர். இது தொல்பொருள் திணைக்களத்திற்குரிய இடமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

9. குச்சவெளிப்பிரதேசத்தில் கும்புறுப்பிட்டி கிராம Rigam Salt Private Ltd இற்கு 1805 ஏக்கர் நிலம் நீண்டகால குத்தகையில் வழங்கப்பட்டுள்ளது. இதற்காகப் பெறப்பட்ட காணி, கடல் நீர்வாவி ஆகும். இந்த நீர்ப்பரப்பு நீண்டகாலமாக தமிழ் மக்களால் அதுவும் ஏழை மீன்பிடியாட்களால் மீன்பிடிப்பதற்காக தங்கள் ஜீவனோபாயத்திற்காகப் பாவிக்கப்பட்டு தொழில் செய்யப்பட்ட இடத்தின் பெரும் பகுதி பறிக்கப்பட்டுள்ளது. இதனால் உள்ளூர் மீனவ ஏழைச்சமூகம் பாதிக்கப்பட்டுள்ளது.

**சட்ட ரீதியான நடைமுறைகளை பின்பற்றாமல் அரச அதிபர் தனியே காணிகளை பௌத்த ஆலயங்கள் அமைக்க அனுமதிக்க முடியாது. இன்று திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் சட்டத்திற்கு விரோதமாக அரச காணிகள் ஆலயங்களுக்கு அடாத்து செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன**

விகாரைகள் அமைக்கப்படுவதாக இருந்தால் அதற்கு சில சட்ட நடைமுறைகள் உண்டு. அரச காணியை விகாரைகளின் தேவைக்குப் பெறுவதாயின் காணி ஆணையாளரின் பின்வரும் சுற்றுநிருபங்களும், காணிக்கட்டளையும் பின்பற்றப்படல் வேண்டும்.

காணி கட்டளை 200(3) இதன்படி ஒரு பௌத்த விகாரைக்கோ, பிரிவினாக்களுக்கோ, விடுதி வசதியுடனான புத்தகுருமார் நிறுவனங்களுக்கோ பந்து சீலங் கடைப்பிடிக்கும் மகளிர் மடங்கள் போன்ற பௌத்த பிரிவிலடங்காத வேறு பௌத்த நிறுவனங்களுக்காக அரச காணியை வழங்குவது பற்றி இதில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்ட நடவடிக்கை முறைகளை மீறி எக்காணியும் பௌத்தசமய தேவைகளுக் காக வழங்கமுடியாது.

காணி ஆணையாளர் திணைக்கள சுற்று நிருபம் 2008/5. திகதி 28.10.2008 இதன்படி ஏற்கனவே அபிவிருத்தி செய்து இதுவரை எவ்வித ஆவணங்களுமில்லாத பௌத்த விகாரைகளுக்கும், அபிவிருத்தி செய்து முதல் நிலை குத்தகை பெற்ற காணிகளுக்கும் பூரண அளிப்பு ஜனாதிபதியால் வழங்குவது பற்றியும் கூறப்பட்டுள்ளது. புதிதாக பௌத்த விகாரைகளுக்கு காணிக் கட்டளை 200(3)இற்கு அமையவே காணி வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே சுற்று நிருபம் கூறுகிறது.

காணி ஆணையாளரின் சுற்றுநிருபம் இல 04/2003 திகதி 20.3.2003 இச்சுற்று நிருபத்தில் கூறப்பட்ட முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

சட்டவிரோதமான முறையில் அரசுக்குச் சொந்தமான காணிகள் குடியிருப்புக்காகவும் பல்வேறு கட்டிடங்கள் எழுப்புவதற்காகவும் தொல் பொருள் முக்கியத்துவ இடங்களும் சரித்திர முக்கியத்துவ இடங்களும் அத்துமீறப்படுவதுடன், சட்டத்திற்கு விரோதமாக சமயத்தலங்களை சமயத்தின் பெயரில் நிர்மாணித்து மேலும் விரிவுபடுத்துவதன் ஊடாக பிற மதங்களைச் சார்ந்த பொதுமக்களை பெரும் சிரமங்களுக்கு உட்படுத்துவது பற்றியும் பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதுபோன்ற முயற்சிகளால் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் என்பதுடன், சமாதானப் பேச்சுவார்த்தையின் போது அரசுக்கும் எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கும் பெரும் சிக்கலான நிலை ஏற்படக்கூடும். இதற்கு அரச காணியின் ஆட்சியை மீளப்பெறும் சட்ட நடவடிக்கை (Recovery of Possession Act No 7of 1979) மூலம் நட

வடிக்கை எடுத்து அடாத்தை வெளியேற்றுமாறு வேண்டுகிறார். - காணி ஆணையாளர்.

ஆகவே, சட்டவிரோதமாக அமை க்கப்படும் எந்த புதிய விகாரைகளும் அதனோடு சேர்ந்த எந்த நடவடிக் கையும் உடன் நிறுத்தப்படல் வேண்டும். இலங்கை அர சியலமைப்பின் உறுப்புரை 9இன் கீழ் பௌத்தமதம் அரச மதம் என்ற ஏற்பாடு கருதி எந்தக்காணியை அத்து மீறிப்பிடிக்கலாம், உரிமை கொள்ளலாம், பிறருக்கு வழங்கிய காணியையும் பறித்தெடுக்கலாம் என்ற ஏற் பாடு எங்கும் இல்லை. அரச காணியை எத்தேவைக்கும் பெறுவதானால் ஒவ்வொரு அங்குல காணியும் என்ன தேவைக்கு பாவிக்கப்படப்போகிறது, அதற்கான நிதி உண்டா, மக்களின் எதிர்ப்பில்லா நிலை உண்டா, என அறிந்தே வழங்கப்படும். ஒருவருக்கு வழங்கிய காணியை இரத்துச் செய்யாமல் அல்லது சுவீகரிக்காமல்



வேறு தேவைக்கு பாவிக்கமுடியாது. அளவு க்கு மீறிய காணியை அர்த்த மில்லாமல் கோரமுடியாது. பெரு கிவரும்சனத்தொகை, அதனால் ஏற்ப டப்போகும் இடத்தட்டுப்பாடு, நீர்த்தட்டுப்பாடு, சுற்றாடல் தாக்கம் ஆகியவற்றை கருத்தில் கொள்ளாது மிகையான காணி வழங்கமுடியாது. காடுகள், நிலம்,கல், மண் எல்லாம் பொதுமக்கள் நம்பிக்கைச் சொத்துகள் (Public Trust). ஆகவே, இதை அர சியல்வாதியோ அரச உத்தியோகத் தரோ துஷ்பிரயோகம் செய்யமுடி யாது. இதையே உயர்நீதிமன்ற வழக்கு (சுகதபாலமென்டிஸ் எதிர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமார துங்கவும் ஏனைய 20 பேரும் Sc (Fr) SLR 352/2007) கூறியது.

**தமிழ்ப் பகுதிகளில் ஏராளமான அரச காணி கள் சிங்களவர்களால் அடாத்துச் செய்யப்படு வது சட்டமும் ஒழுங்கும் சீர்குலைவதற்கு பிரதா னமான காரணமாகிறது. சட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமல் அரச காணிகளைப் பெற முடியாது. ஆனால் நடைமுறையில் நிலை வரம் தலைகீழாக இருக்கிறது**

## சட்டத்தின் முறையான படிமுறை அல்லது தகுந்த சட்டச் செயற்பாடு (Due process of Law):

சட்டத்தின் நிலையான நன்கறிந்த நடவடிக்கை முறை களைப் பின்பற்றாமல் அரச காணி ஒன்றைப் பெற முடியாது. அதேபோல் நீதிமன்றத்தில் கூட சட்டத்தின் முறையான படிமுறை இன்றி குற்றத் தீர்ப்பளிக்கவோ, அவருக்கு எதிராகக் கட்டளை எதுவும் ஆக்கப்படவோ முடியாது.

எல்லா சமயவழிபாட்டுத் தலங்களுக்கும் அரச காணி வழங்கப்படுவது அரச காணிச்சட்டமான இல 08 இன் 1947 இன்படியும் இதில் செய்யப்பட்ட திருத்தங்களின் படியும் அதனை ஒழுங்குவிதிகள், காணிக் கட்டளைப்ப டியுமாகும். இலங்கை அரசியலமைப்புச் சட்டம் உறுப் புரை 9 இன்படி புத்தமதம் அரச மதம் என குறிப்பிடப்படுகிறது. அதனால் சட்டமுறையான படிமு றைக்கு மாறாக அரச காணியைப் பெறமுடியாது. அரச காணிச்சட்ட ஒழுங்குவிதி பிரிவு 21(2) இன்படியான வர்த்தமானி விளம்பரம் ஒன்றின் மூலம் குறிப்பிட்ட இடத்தில் ஆலயமொன்றிற்காக வழங்கப்படும் காணிக்கு பொதுமக்களின் அபிப்பிராயம் அல்லது எதிர்த்தால் அதை அறிவதற்கே வர்த்தமானியில் விளம் பரப்படுத்தப்படுகிறது. எவ்வித எதிர்ப்பும் இல்லை என் றால் காணி ஆணையாளர் நாயகம் அமைச்சின் கட்ட ளைப்படி அரச காணியை ஆலயத்திற்கு பாரமளிக்க முதலில் கட்டளை பிறப்பிப்பார். இது எல்லா வழிபாட் டுத் தலங்களுக்கும் பொருந்தும்.

பௌத்த ஆலயங்களுக்கு மட்டும் பூஜா ஒப்பு எனப் படும் பூரண அளிப்பு வழங்கப்படும். ஆனால், ஏனைய சமய வழிபாட்டுத் தலங்களுக்கு நீண்டகால குத்தகையே வழங்கப்படுகின்றது. குத்தகையானது அபிவிருத்தி அடையாத காணியின் பெறுமதியின் 1/2 வீதமாகும். ஆனால், பௌத்த ஆலயத்திற்கு வழங்கப்படும் பூரண அளிப்பு இலவசமாகவே வழங் கப்படுகின்றது. இது சமயங்களுக்கிடை யிலான வேறுபாட்டைக் காட்டுகின்றது. இருந்தாலும் பூரண அளிப்பைப் பெறு வதற்கு முன் பௌத்த ஆலயங்களும் முதல் கட்டிடத்தில் நீண்டகால குத்தகை யைப் பெற்ற பின்னர் பூரண அளிப்பு வழங்கப்பட்டது. காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தில் இல 2008 /05 இன்படி இயங்கு நிலையில் இருக்கும் இது வரை எந்த ஆவணங்க ளும் இல்லாமல் இயங்கிவரும் பௌத்த ஆலயங்கள் நேரடியாக எந்தக் குத்தகை வரியும் செலுத்தாமலே பூரண அளிப்பைப் பெறப்போகின்றது. இது ஏனைய சமயங்களுக்கு வழங்கப்ப

டாமை சமயங்களுக்கிடையே வேற்றுமையைக் காட்டு கின்றது.

இலங்கையில் துறவிகள் (சமயத்தலைவர்கள்) தங்கள் சொந்தப் பெயரில் வங்கிக் கணக்கு வைத்திருப்பது அபூர்வமானது. பௌத்த குருமார் இறுதி விருப்பா வணம் எழுதி பதிவு செய்யமுடியாது. இதுபற்றி (Buddhist Temporalities ordinance) இன் பிரிவு 23 கூறு கின்றது. அந்த விகாரைச் சொத்தும் வங்கியில் பணமும் இவர் பெயரில் இருந்தாலும் அவருக்குப் பின் அவரின் பதவிக்கு வரும் விகாரைக்கு நியமிக்கப்படும் தேரரின் விகாரைக்குச் சேரும். பதவிக்கு வரும் தேரர் நீதிமன் றத்தை நாடி வங்கிப்பணத்தை விகாரைக்குப் பெற முடியும்.

தனது தனிப்பட்ட தேவைக்குப் பெறமுடியாது. காணி யும் பதவிக்கு வரும் தேரரான விகாராதிபதிக்கு உரிமை யாகும். முன்னைய விகாராதிபதியின் உறவுக்குப் போகாது. ஏதேனும் விகாராதிபதி அவர்களினால் தனது மறைவிற்குப் பின் விகாராதிபதி பதவிக்குரியவ ரைத்தெரிந்தெடுத்து எழுத்துமூல நியமனம் செய்யமுடி யாது போயின், அல்லது அத்தகைய நியமனம் ஏதேனும் ஒரு காரணம் பற்றி நடைமுறைப்படுத்த முடியாது போயின் விகாராதிபதி ஒருவரை நியமித்துக்கொள்ளும் அதிகாரம் குறித்தபௌத்த தலைமைப்பீடமான நிக்காயா பீடத்தின் மகாநாயக்கரின் பொறுப்பில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

அத்தகைய சந்தர்ப்பத்தில் பௌத்த ஒழுக்காற்று நடை முறையின்படி முன்னைய விகாராதிபதியின் சீடர்களின் சீடர் பரம்பரையின்படி அடுத்த தகுதி பெறும் தேரோ அவர்கள் விகாராதிபதியாக மேற்கூறப்பட்ட மகாநாயக் கரால் நியமிக்கப்படல் வேண்டும். அவ்வாறு சீடர்களின் சீடர் பரம்பரையில் ஒருவர் இல்லாது இருந்தால் விகாரா திபதி ஒருவரை நியமித்துக்கொள்ள மேலே கூறப்பட்ட மகாநாயக்கர் வேறு பொருத்தமான ஒரு தேரோவை பெயர் குறித்தல் வேண்டும்.

**ஒதுக்குகள்:**

அரச காணிகள் வனத்திணைக்களத்திற்கோ அல்லது தொல்பொருள் சரித்திர உண்டியல்சார் இடமாகவோ, வனவிலங்கு திணைக்கள ஒதுக்கு இடமாக வருவத னால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அந்த இடம் எல் லைகள் குறிப்பிடப்பட்டு அவற்றுக்குரிய ஒதுக்காகப் பிரகடனப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன், Demarcation Boundary எல்லை குறித்த நில அளவைப்படங்களும் மேற்படி ஒதுக்கு என அதனை வெளிப்படுத்தி இருக்கவேண்டும். இது இரண்டும் இல்லை என்றால் அது அவற்றுக்கான ஒதுக்கு எனக் கூற முடியாது.

ஆனால், தமிழர் வாழ் இடங்களை ஆக்கிரமிக்கும் நோக்கில் மேற்படி தேவைகளுக்காக நியாயமின்றி ஏற்க னவே தமிழர்களுக்கு வழங்கிய காணிகளை ஒதுக்கு களாக பிரகடனப்படுத்த நினைப்பது சட்டவிரோத மாகும். ஏற்கனவே சட்டப்படி மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் சுவீகரிப்புச் செய்யாமல் அவர்கள் காணிகளை புதிதாக தொல்பொ ருள் இடமாகவோ, வன ஒதுக்காகவோ, வனவிலங்கு ஒதுக்காகவோ பிரகடனப்படுத்த முயல்வது வலு விழந் ததாகும் (Ultra Vires). இது அடப்படை மனித உரிமை மீறலாகும்.

அரசியலமைப்புச்சட்டம் உறுப்புரை 17 இன்கீழ் அடிப்படை உரிமை மீறலுக்கு எதிராக அரச அதிகாரிக ளுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தொடுத்து உறுப்புரை 126 இன்கீழ் உயர் நீதிமன்றம் அரச அதிகா ரிகளை மக்களின் அடிப்படை உரிமை மீறலுக்காக கேள் விக்குட்படுத்தலாம்.

திருகோணமலையில் அரச அதிபர் ஒரு ஆயுதப்படை யின் தளபதியாக இருந்தவர். அவருக்கு சாதாரண சிவில் சட்டங்களில் பரிச்சயம் இல்லை. மற்றவர்களுக்கு ஆணையிடும் ஓர் இராணுவ அதிகாரி அரச அதிபராக இருக்கத் தகுதியற்றவர். இவர் சிங்களக் குடியேற்றங்கள் அரச காணியில் அத்துமீறிப்பிடிப்பதைத் தடுப்பதில்லை, உடந்தையாக இருக்கிறார்.

இதற்கு சமீபத்தைய உதாரணங்கள், சேருவில சயித்தி யவில் இருந்து சோமாவதி சயித்திய வரையான வீதி புதிதாகப் போடப்பட்டுள்ளது. இருமருங்கும் சிங்கள மக்கள் அத்துமீறி அரச காணிகளைப் பிடிக்க இவரால் எந்தவித நடவடிக்கையும் அடாத்துக்கெதிராகச் செய் யப்படவில்லை.

பொது நிர்வாக அமைச்சின் சுற்றுநிருபம் இல 82/2, காணி கட்டளைப்பிரிவு 180 இன்கீழ் ஒரு மாவட்டத்தில் அரச காணி அடாத்து செய்யப்படும்போது அதனைத் தடுப்பதும் சட்ட நடவடிக்கை எடுப்பதும் அதுபற்றிய முன்னேற்ற அறிக்கையை இரண்டு கிழமைக்கு ஒருத டவை பிரதேச செயலாளர், கிராம சேவை உத்தியோகத் தரிடம் பெறுவதும் மாதம் ஒருமுறை அரசாங்க அதிபர் பிரதேச செயலாளர்களின் அடாத்து அறிக்கையை மேற் பார்வை செய்வதும் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்குவ தும் அரச அதிபரின், பிரதேச செயலாளர்களின் கடமை யாகும். இக்கடமையை திருகோணமலை அரச அதிபர் செய்யத் தவறியுள்ளார்.

இதனால், ஏராளமான அரச காணிகள் சிங்கள மக் களால் அடாத்துச் செய்யப்படுவதும் சட்டமும் ஒழுங் கும் சீர்குலையக் காரணமாகியுள்ளது. ஆகவே, இவர் அரசாங்க அதிபராக இருந்து நீதியான கடமை செய்ய முடியாது. சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படவேண் டுமானால் அரச உத்தியோகத்தர்கள் சட்டங்களையும் காலாந்திரங்களில் வெளியிடப்படும் திருத்தங்களையும் சுற்றுநிருபங்களையும் படித்து பொதுமக்களுக்கு நீதியான சேவை செய்யவேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் சமாதானம் நிலைத்திருக்கும். ■

உள்நாட்டு அரசியல்

# இலங்கையின் இஸ்லாமிய வெறுப்பு பிரத்தியேகமானதா?

**அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா ஹலால் சான்றிதழ் சிங்கள வர்த்தகர்களுக்கு மேலாக அதிகாரம் செலுத்துபவர்கள் என்ற ஒரு அந்தஸ்தை முஸ்லிம் மார்க்க அறிஞர்களுக்கு கொடுக்கிறது என்ற எண்ணமே பொதுபல சேனாவின் ஹலால் எதிர்ப்பு பிரசாரங்களுக்கு பிரதான காரணம் என்று நம்புகிறேன்**



இஸெத் ஹுசெய்ன்

இலங்கையில் ஹலால் சான்றிதழ் வழங்கல் குறித்து தொடருகின்ற பரபரப்பு இலங்கையின் இஸ்லாமிய வெறுப்பில் (Islamophobia) ஏதோ ஒரு பிரத்தியேகமான தன்மை இருக்கிறது என்பதை உணர்த்துகிறது. சில வருடங்களாக தொடர்ந்து கொண்டிருக்கின்ற முஸ்லிம்களுக்கு எதிரான பிரசாரங்கள் தேசிய அரங்கில் பொதுபலசேனாவின் தோற்றத்துடன் சுமார் ஒருவருடத்துக்கு முன்னர் ஹலால் சான்றிதழ் விவகாரம் மீது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தன. சில வாரங்களாக அடங்கிப் போயிருந்த பொதுபலசேனா ஹலால் சான்றிதழ் மீது கவனம் செலுத்தி அண்மையில் மீண்டும் ஆர்ப்பாட்டம் செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது. பொதுபலசேனாவின் பிரதிநிதியொருவர் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில், ஹலால் சான்றிதழ் விவகாரம் கசினோ விவகாரத்தை விடவும் முக் கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டிருந்தார்.

பாரதூரமான இஸ்லாமிய வெறுப்பைக் கொண்ட நாடுகளில் (மேற்குலகம் மற்றும் இந்தியா போன்றவை) ஹலால் சான்றிதழ் விவகாரம் பெரிய தொரு பிரச்சினையாக ஏன் பேசப்படவில்லை என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. பல்வேறு நாடுகளில் ஹலால் சான்றிதழ் தொடர்பில் கடைப்பிடிக்கப்படுகின்ற நடைமுறைகள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்காக எனது கம்பியூட்டரை இயக்கிப் பார்த்தேன். ஆனால், எந்த நாட்டிலுமே அது ஒரு பிரச்சினையாக இல்லை. படுமோசமான இஸ்லாமிய வெறுப்பைக் கொண்ட லீ பென்னின் தேசியக்கட்சி தேசிய அரசியலில் கணக்கில் எடுக்கக்கூடிய சக்தியாக வளர்ந்திருக்கின்ற பிரான்ஸ் போன்ற நாட்டில் கூட ஹலால் சான்றிதழ் ஒரு பிரச்சினையாக இல்லை.

ஹலால் சான்றிதழ் விவகாரம்;

பிரான்சில் உள்ள எனக்குத் தெரிந்த அன்பர் ஒருவர் பொருத்தமான சில தகவல்களை எனக்கு தெரியப்படுத்தியிருந்தார். பிரான்ஸ் போன்ற பெரும்பான்மையாகக் கிறிஸ்தவர்களைக் கொண்ட நாடொன்றின் பொதுவாழ்வில் ஹலாலைப் போன்ற இஸ்லாமிய நடைமுறைகளுக்கு இடமில்லை என்ற அடிப்படையில் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் ஹலாலுக்கு எதிரான பிரசாரம் ஒன்று அங்கு கிளம்பியது. கலந்தாலோசனைகளையும் விவாதங்களையும் அடுத்து பிரெஞ்சு

அரசாங்கம் ஹலாலுக்கு சார்பான முறையிலேயே தீர்மானமொன்றை எடுத்தது. தாங்கள் எதை சாப்பிடுகிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்கான உரிமை மக்களுக்கு இருக்கிறது என்பதே அங்கு முன்வைக்கப்பட்ட முக்கியமான வாதமாகும். அது உண்மையிலேயே மிகவும் வலிமை வாய்ந்ததும் பதிலுரைக்க முடியாததுமான வாதம் என்று எனக்குத் தோன்றுகிறது. இன்று சந்தையிலே பெருவாரியான செயற்கைச் சேர்மமான உணவுவகைகள் (Synthetic Foods) கிடைக்கின்றன. அவற்றில் கலந்துள்ள சகல பதார்த்தங்களையும் குறிக்கும் விபரங்கள் பக்கெட்டுகளில் அச்சிடப்பட்டிருக்கின்றன. பன்றி இறைச்சி மற்றும் அதிலிருந்து தயாரிக்கப்படுகின்ற பதார்த்தங்கள போன்ற குறிப்பிட்ட சில உணவு வகைகள் உள்ளே இருக்கின்றது குறித்து பக்கெட்டுகளில் எதுவும் தெரிவிக்கப்படக்கூடாது என்று (குறைந்த பட்ச நேர்மையாவது இருக்கும் ஒருவரால் தானும்) கருதமுடியுமா?

முழுஉலகிலுமே ஹலால் விவகாரம் ஒரு பிரச்சினையாக, அதுவும் சிறிய பிரச்சினையாக அல்ல பெரிய தேசியப் பிரச்சினையாக இருக்கிற ஒரே நாடு இலங்கை மாத்திரமே என்று தோன்றுகிறது. ஏன்? இலங்கையின் இஸ்லாமிய வெறுப்புணர்வில் ஏதோ ஒரு பிரத்தியேகமான அம்சம் ஒன்று நிச்சயமாக இருப்பதை இது உணர்த்துகிறது. வேறு எந்த நாட்டிலும் இருப்பதை விட இலங்கையின் இஸ்லாமிய வெறுப்பு மிகவும் அருவருக்கத்தக்கதாகவுள்ளது. பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு அரசாங்கமே முயற்சி எடுத்தது என்பது சகலவற்றுக்கும் முதலாக கவனிக்கப்படவேண்டிய முக்கியமான விடயமாகும். வழமையாக எமது அரசாங்கங்கள் இனப்பிரச்சினையை, அது கவனிக்காமல் விட முடியாத பெரிய நெருக்கடியாக உருவெடுக்கின்ற தருணங்களைத் தவிர, மற்றும்படி அலட்சியம் செய்திருக்கின்றன. அரசாங்கத்தின் எம்.பி.க்களுக்கும் பொதுபல சேனாவை ஆதரிக்கின்ற பிரதான கட்சியான ஜாதிகஹெல உறுமயவின் எம்.பி.க்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. அவற்றின் விளைவு வெற்றிகரமானதாக இருக்குமென்று கருதப்பட்டது. முஸ்லிம் மார்க்க அறிஞர்களின் சபையான அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா முன்னரைப் போன்றே முஸ்லிம் நிறுவனங்களுக்கு ஹலால் சான்றிதழ்களை வழங்கும் என்பதும் முஸ்லிம் அல்லாத நிறுவனங்கள் கேட்டுக்கொண்டால், அவற்றுக்கு பணம் ஏதும் அறவிடாமல் இலவசமாக அது அச்சான்றிதழ்களை வழங்கும் என்பதுமே விட்டுக்கொடுப்பின் அடிப்படையிலான தீர்வாக இருக்குமென்று கருதப்பட்டது. பொதுபலசேனாவின் பிரதிநிதிகளினால் தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய கருத்துகளின் அடிப்படையில் நோக்கும்போது குறிப்பிட்ட ஒரு திகதியளவில் ஹலால் சான்றிதழ் வழங்கும் நடைமுறையை நிறுத்துவதற்கு இணங்கிக்கொண்ட ஜம்மியத்துல் உலமா அவ்வாறு செய்யாமல் இணக்கப்பாட்டை மீறிவிட்டதாக இப்போது தோன்றுகிறது. எனவே, மேலும் பொதுபலசேனாவின் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுமென்று எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

**ஹலால் சான்றிதழ் வழங்கும் நடைமுறையை அரசாங்கம் பொறுப்பேற்பது முக்கியமானதொரு திருத்த நடவடிக்கையாக அமையும். அதனால் பொதுபலசேனாவின் ஹலால் எதிர்ப்பு பிரசாரங்களுக்கு முடிவைக்கட்டக் கூடியதாக இருக்கும். ஆனால் பிரச்சினை என்னவென்றால் அது மாத்திரம் முஸ்லிம் எதிர்ப்பு பிரசாரங்களுக்கு முடிவைக் கட்டிவிடாது**



வேறு நாடுகளில் ஹலால் சான்றிதழ் விவகாரம் ஒரு பிரச்சினையாகவே இல்லை. அல்லது பிரச்சினையாக இருந்திருந்தாலும் எந்தவிதமான பெரிய சிக்கலும் இல்லாமல் தீர்த்துவைக்கப்பட்டிருக்கிறது. பிரான்ஸை இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். நிலைமை இவ்வாறிருக்கையில், இலங்கையில் மாத்திரம் இது அடங்காத ஒரு பிரச்சினையாக ஏன் இருந்துவருகிறது. நேர்மையாக மனதைத் திறந்து சொல்கிறேன். பொதுபலசேனா, ஜாதிக ஹெல உறுமய, அரசாங்கம் மற்றும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா ஆகியவற்றுக்கும் இடையே என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பது பற்றிய சில்லறை நுட்ப நுணுக்கங்கள் எனக்

குத் தெரியாது. அவ்வாறு தெரிந்திருந்தால்தான் இந்த விவகாரத்தில் அறிவார்ந்த அறிவிப்பொன்றைச் செய்யக்கூடியதாக இருக்கும். ஆனால், சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளை நாம் அனுசரிக்கத் தயாராயிருப்போமென்றால், பிரச்சினையின் அடிப்படைக் கூறுகளை விளக்கிக் கூறுவதுடன், எவ்வாறு தீர்வைக்காணமுடியும் என்பதையும் என்னால் தெரிவிக்க முடியும்.

இலங்கையின் ஏனைய இனக்குழுமங்களைப் போலன்றி, முஸ்லிம்களைப் பொறுத்தவரை உணவு விடயங்களில் பல விலக்குகள் இருக்கின்றன. பெரும்பாலான முஸ்லிம்கள் இந்த விலக்குகளை மிகவும் கண்டிப்பாக கடைப்பிடிக்கிறார்கள். குறிப்பாக பன்றி இறைச்சியையும் அதிலிருந்து தயாரிக்கப்படுகின்ற உணவு வகைகளையும் முஸ்லிம்கள் வெறுத்தொதுக்குகிறார்கள். ஹலாலுக்குரியவை (உண்பதற்கு அனுமதிக்கப்படுபவை) எவை, ஹராமுக்குரியவை (விலக்கிற்குரியவை) எவை, மூன்றாவது வகைக்குரியவை (தடுக்கப்படாவிட்டாலும் தவிர்க்கப்படவேண்டியவை) எவை என்பதெல்லாம் குறித்து விரிவாக நான் இங்கு விபரங்களைத் தர முன்வரவில்லை. ஹலாலுக்குரியவையா இல்லையா என்பதைச் சுட்டிக்காட்டும் சின்னங்களோ, அறிவிப்புகளோ உணவுப்பக்கெட்டுகளில் இருக்க வேண்டியதே இங்கு முக்கியமானதாகும். சின்னமோ அறிவிப்போ பக்கெட்டுக்குள் இருக்கும் உணவு வகையில் மாற்றமெதையும் செய்துவிடப் போகவதில்லை. அவை சிங்களவர்களின் உணவுப் பழக்கங்களில் எந்தவகையிலும் தலையீடாக அமையவில்லை என்பதை முக்கியமாக மனதிற்கொள்ள வேண்டும். உள்ளே இருக்கும் உணவு ஹலாலுக்குரியதா இல்லையா என்பதை அறிந்துகொள்வதற்காக ஒரு முஸ்லிம் பக்கெட்டை ஆராய்ந்து பார்ப்பார். ஒரு பக்கெட்டுக்குள் இருக்கும் உணவில் கொலஸ்ட்ரோல் இருக்கிறதா அல்லது உடல் நலத்திற்கு கெடுதியாக அமையக்கூடிய பதார்த்தம் எதுவும் இருக்கிறதா என்று சிங்களவர் ஒருவர் அதை ஆராய்ந்துபார்ப்பதை ஒத்ததே இது வாகும். அதில் ஆட்சேபிப்பதற்கு எதுவுமில்லையே.

துரதிர்ஷ்டவசமாக ஹலால் சான்றிதழ் என்பது முஸ்லிம்களுக்கு மாத்திரம் சட்டரீதியான அக்கறைக்குரியதல்ல, முஸ்லிம் அல்லாதவர்களின் சட்டரீதியான அக்கறைக்குரியதாகும். இந்த விடயத்திலிருந்து தான் பொதுபலசேனாவுடனும் ஏனையவர்களுடனும் பிரச்சினை ஏற்படுகிறது. எதைத்தாங்கள் சாப்பிடவேண்டும், எதைத் தாங்கள் சாப்பிடக்கூடாது என்பதை முஸ்லிம்கள் தெரிந்திருந்தால் ஹலால் சான்றிதழ் அவர்களுக்குத் தேவைப்படாத காலம் ஒன்று இருந்தது. தடுக்கப்பட்ட பதார்த்தங்கள் உள்ளடங்கியிருக்கக்கூடிய செயற்கைச் சேர்மமான உணவு வகைகள் உலகம் பூராகவும் சந்தைகளுக்கு வந்த பின்னர் தான் ஹலால் சான்றிதழ்களுக்கான தேவை எழுந்தது. உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பாரிய முஸ்லிம் சந்தைகளில் இந்தச் செயற்கைச் சேர்மமான உணவு வகைகளை விற்பனை செய்வதற்காக ஹலால் சான்றிதழ் தேவைப்பட்டது. வர்த்தகப் போட்டாபோட்டியின் விளைவாகவே இந்த நிலைதோன்றியது. எனவே முஸ்லிம் அல்லாத வர்த்தக நிறுவனங்களும் தங்கள் தயாரிப்புகளுக்கு ஹலால் சான்றிதழைப் பெறுவதில் நாட்டம் காட்டின. இதையடுத்து அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா அச்சான்றிதழ்களை வழங்க உடன்பட்டது. இவ்வாறு தான் முதலாளித்துவம் இயங்குகிறது. இதற்குப் பின்னால் முஸ்லிம்களின் தீய நோக்கம் எதுவுமேயில்லை.

நான் மேலே குறிப்பிட்டதைப் போன்று ஹலால் சான்றிதழ் வழங்கலுடன் சம்பந்தப்பட்ட அடிப்படை விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அதைப் பற்றி எந்தப் பிரச்சினையுமே இருக்கத் தேவையில்லை. இலங்கையில் ஹலால் சான்றிதழ் வழங்கும் நடைமுறையில் சில ஒழுங்கீனங்கள் இடம்பெற்றிருக்கக்கூடும். அச்சான்றிதழை வழங்குவதற்காக ஜம்மியத்துல் உலமா மட்டுமீறிய தொகை பணத்தை கட்டணமாக அறவிடுவதாக ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. அந்தக் கட்டணங்களில் ஒருபகுதி இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு கொடுக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. ஹலால் சான்றிதழ்களைக் கேட்குமாறு சிங்கள வர்த்தகர்களை ஜம்மியத்துல் உலமா பலவந்தப்படுத்தியதாகக் கூட விசித்திரமான குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டதைக் கவனிக்க வேண்டும். அரசாங்கத்தின் நேர்மையான, வெளிப்படையான நடவடிக்கையின் மூலமாக தீர்த்து வைத்திருக்க முடியாத பாரதூரமான முறைகேடுகள் எதுவும் இடம்பெற்றதாக என்னால் காணமுடியவில்லை. ஹலால் சான்றிதழ் வழங்குவதிலும் அதற்கென கட்டணங்களை அறவிட்டதிலும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சட்டத்தின் வரையறைக்குள்ளேயே செயற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

எனவே, ஹலால் சான்றிதழ் வழங்கல் தொடர்பில் பரபரப்பு தொடருவதற்கு என்ன விளக்கம் தரப்போகிறார்கள்? இந்தப் பரபரப்பை அதன் பின்புலங்களின் அடிப்படையிலேயே விளக்கமுடியும் என்று நான் நம்புகிறேன். நீண்டகாலமாக தீவிரமடைந்துவருகின்ற முஸ்லிம் விரோத இனவெறிப் பிரசாரத்துடன் இதைத் தொடர்புபடுத்த வேண்டியிருக்கிறது. அந்தப் பிரசாரத்தில் காட்டப்பட்ட முஸ்லிம் வெறுப்பின் முனைப்பைக் குறைத்துமதிப்பிடக்கூடாது. ஒரு ஆர்ப்பாட்டத்தில் அல்லாஹ்வை ஒரு போஸ்டரில் பன்றியாக சித்தரித்திருந்தார்கள். இன்னொரு ஆர்ப்பாட்டத்தில் அல்லாஹ்வை பன்றியாக உருவகித்து செய்யப்பட்ட ஒரு கொடும்பாவி எரிக்கப்பட்டது. பொலிஸார் தொடர்ந்தும் இவற்றையெல்லாம் கைகட்டிப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். இந்த ஆர்ப்பாட்டங்களுக்கெல்லாம் பலம்பொருந்திய அரச இனவெறியர்களின் உத

வியும் ஒத்தாசையும் வழங்கியிருக்கிறார்கள் என்பதையே இது பிரகாசமாகக் காட்டியது. நான் இங்கு குறிப்பிடுவதைப் போன்று பொதுபலசேனாவின் பிரசாரங்களை அவற்றின் பின்புலங்களில் விளக்குகின்றபோது ஒரு கேள்விக்கு நாம் முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது. பொதுபலசேனாவின் ஹலால் எதிர்ப்பு பிரசாரத்தில் பிரத்தியேகமாக இருக்கின்ற இனவெறித்தன்மைதான் என்ன?

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவினால் வழங்கப்பட்ட ஹலால் சான்றிதழ் சிங்கள வர்த்தகர்களுக்கு மேலாக அதிகாரம் செலுத்துபவர்கள் என்ற ஒரு அந்தஸ்தை முஸ்லிம் மார்க்க அறிஞர்களுக்குக் கொடுக்கின்றது என்ற எண்ணமே பொதுபலசேனாவின் ஹலால் எதிர்ப்பு பிரசாரங்களுக்கு பிரதான காரணம் என்று நான் நம்புகிறேன். சிங்கள வர்த்தகர்கள் ஹலால் சான்றிதழ்களுக்காக முஸ்லிம்களிடம் விண்ணப்பிக்க வேண்டியிருக்கிறது. முஸ்லிம்கள் எடுக்கும் தீர்மானத்திற்கு சிங்கள வர்த்தகர்கள் கட்டுப்பட வேண்டியிருக்கிறது. இது கெஞ்சிமன்றாடுபவர்களாக சிங்களவர்களையும் அவர்களின் எசமான்களாக முஸ்லிம்களையும் காட்டுகிறது என்பதே சிங்கள இனவெறியர்களின் எண்ணம். இதை அவர்களால் எந்த வகையிலும் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை. 1977ஆம் ஆண்டுக்குப்பிறகு தொடங்கிய அரசியல் சீரழிவே இத்தகைய போக்குகள் சகலவற்றுக்குப் பின்னாலும் இருக்கிறது. இதை நான் எனது முன்னைய கட்டுரையொன்றிலும் விளக்கியிருக்கிறேன். அந்தச் சீரழிவு அரசியல் அதிகாரத்தைப் பற்றிய முற்றிலும் தரக்குறைவான எண்ணம் வலுப்பெறுவதற்கே வழிவகுத்தது. அரசியல் அதிகாரம் முழுமக்களினதும் நன்மைக்காகப் பயன்படுத்தப்படவேண்டிய ஒரு தூய்மையான நம்பிக்கையாக அன்றி மக்களை மிதித்துத் துன்புறுத்துவதற்கான ஒரு வழிவகையாகவே நோக்கப்படுகிறது. எனவே, ஹலால் சான்றிதழை பொறுத்துக்கொள்ள முடியாததாக சிங்கள இன வெறியர்கள் நோக்குகிறார்கள். ஏனென்றால், அச்சான்றிதழின் மூலமாக சிங்களவர்களை மிதிப்பதற்கு முஸ்லிம்களுக்கு அதிகாரளிக்கப்படுவதாக அவர்கள் நினைக்கிறார்கள். மற்றவர்களை மிதித்துத் துன்புறுத்துவதற்கான அதிகாரம் சிங்களவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட வேண்டும். ஏனென்றால், இலங்கை மறுத்துக்கூற முடியாத அளவிற்கு சிங்கள மண். அதேவேளை முஸ்லிம்களும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களும் விருந்தினர்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்பதே சிங்கள இனவெறியர்களின் நிலைப்பாடாக இருக்கிறது.

ஹலால் எதிர்ப்பு பிரசாரத்தின் இனவெறி அம்சம் குறித்து மேலும் கூடுதலாக என்னால் சொல்ல முடியும். இந்தப் பிரசாரத்தின் பின்னணியில் தீயநோக்குடைய வெளிநாட்டுச் சக்திகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பது எனது உறுதியான சந்தேகமாகும். அவையெல்லாவற்றையும் விளக்க இங்கு இடம்போதாது என்பதால் நிலைவரங்களைச் சீர்செய்வதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய திருத்த நடவடிக்கை தொடர்பிலான எனது சில அவதானிப்புகளை கூறிவிட்டு இக்கட்டுரையை பூர்த்தி செய்ய முனைகிறேன். நான் மேலே குறிப்பிட்டதைப் போன்று, இலங்கையின் இஸ்லாமிய வெறுப்பில் ஒரு பிரத்தியேகத்தன்மை இருக்கிறதென்பதை ஒப்பீட்டு அடிப்படையிலான தரவுகள் காட்டி நிற்கின்றன. இது சர்வதேச சமூகத்தின் கண்களில் சிங்களவர்களை அவமானத்துக்குள்ளாக்குகிறது. அந்த ஒரு காரணத்துக்காகவே திருத்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது எனலாம். அதைத்தவிர, கால்நூற்றாண்டு காலமாக நீடித்த உள்நாட்டுப் போருக்குப் பிறகு, இனங்களுக்கு இடையே ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்குத்தானே சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

ஹலால் சான்றிதழ் வழங்கும் நடைமுறையை அரசாங்கம் பொறுப்பேற்பது முக்கியமான ஒரு திருத்த நடவடிக்கையாக அமையும். அதனால், பொதுபலசேனாவின் ஹலால் எதிர்ப்பு பிரசாரங்களுக்கு முடிவைக் கட்டக்கூடியதாக இருக்கும். ஆனால், பிரச்சினை என்னவென்றால், அது முஸ்லிம் எதிர்ப்பு பிரசாரங்களுக்கு முடிவைக் கட்டாது. ஹலால் எதிர்ப்பு பிரசாரங்கள் உச்சத்தில் இருந்த கட்டத்தில் முஸ்லிம் இணையத்தளமொன்று எனக்கும் வேறுபலருக்கும் இந்தப் பிரச்சினையின் நிகழ்வுப் போக்குகள் குறித்தும் அவை தொடர்பான முஸ்லிம்களின் கருத்துகள் குறித்தும் நாளதுவரையிலான தகவல்களை வழங்கியது. முஸ்லிம்கள் உடனடியாகவே மன மார பொதுபலசேனாவுக்கு அடிபணிந்து போகக்கூடாது. ஏனென்றால், அவ்வாறு அடிபணிந்தால் முஸ்லிம் விரோத பிரசாரத்தைத் தொடருவதற்கு அந்தச்

**இலங்கையின் இஸ்லாமிய வெறுப்பு சர்வதேச சமூகத்தின் கண்களில் சிங்களவர்களை அவமானத்திற்குள்ளாக்குகிறது. அந்த ஒரு காரணத்திற்காகவே திருத்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது எனலாம். அதைத் தவிர கால்நூற்றாண்டு காலமாக நீடித்த உள்நாட்டுப் போருக்குப்பிறகு இனங்களுக்கிடையே ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்குத்தானே சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்**

சேனா இன்னொருபுதிய சாக்குப் போக்கைக் கண்டுபிடிப்பதற்கு வழிச மைப்பதாகவே முடியும் என்பது அந்த இணையத்தளத்தில் வெளியி டப்பட்ட கருத்துகளில் ஒன்று.

முக்காடுக்கு எதிராக பொதுபல சேனா பிரசாரம் செய்யுமென்று அதன் பிரதிநிதியொருவர் அண்மை யில் பேட்டியொன்றில் தெரிவித்தார். அரசாங்கம் எடுக்கக்கூடிய பொருத்த மான நடவடிக்கை என்னவென்றால், ஹலால் சான்றிதழை அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா தொடர்ந்து வழங்குவதை ஏற்றுக்கொண்டு, ஏதா வது முறைகேடுகள் இடம்பெறுமா யின் திருத்த நடவடிக்கையை மேற் கொள்வதேயாகும். சிங்கள- பௌத்த மக்கள் அதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதே பொதுபலசேனாவின் பதிலாக இருக்கும். பொதுபலசேனாவை ஆத ரிக்கின்ற அரசியற் கட்சிகளினால் தேர்தல்களில் தனியொரு ஆசனத் தைத் தானும் வென்றெடுக்க முடி யாது என்று கூறிவைப்பதன் மூலம் இதற்கு அரசாங்கம் தக்க பதில் கொடுக்க முடியும். ஒன்றைமட்டும் கூறி இக்கட்டுரையை முடிக்க விரும் புகிறேன். முஸ்லிம்களாகிய நாம் நீ திக்காக நிற்க வேண்டும்-அதாவது தங்களுக்கான நீதிக்காகவும் மற்றைய சகலரினதும் நீதிக்காகவும் நிற்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே எனது கருத்து களை முன்வைக்கின்றேன். அதனால் தான் நான் எழுதுகிறேன். ■

---

*(05ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

இந்தியாவில் அடுத்த பொதுத்தேர் தல் நடைபெறுவதற்கு இன்னமும் 6 மாதங்களே இருக்கும் நிலையில், மன்மோகன் சிங் எடுத்த தீர்மானத்தை விளங்கிக் கொள்வதற்கு பெரிய அர சியல் ஞானம் எதுவும் தேவையில் லை. இக்கட்டத்தில் இந்தியாவின் பல தேசிய ஊடகங்களில் பிரதமரின் தீர் மானத்தினால் ஏற்படக்கூடிய விளை வுகள் குறித்து ஏகமனதாகத் தெரி வித்த கருத்து எமது கவனத்தைத் தூண்டியிருந்தது. அதாவது இலங்கை யுடன் தொடர்ச்சியானதும் வலுவான துமான ஊடாட்டங்களைச் செய்வதன் மூலம் மாத்திரமே இந்தியா தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் மீது செல்வாக்கைச் செலுத்தக் கூடியதாக இருக்கு மென்றும் உச்சிமகாநாட்டுக்கு மன்மோகன் சிங் வராததால் அத்த கைய செல்வாக்கைச் செலுத்தக்கூடிய வாய்ப்புகளுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படுமென்றும் அந்த ஊட கங்கள் எச்சரிக்கை செய்திருந்தன. இந்த எச்சரிக்கை எந்தளவுக்கு பெறு மதியானது என்பதை எதிர்கால நிகழ் வுப் போக்குகள் நிச்சயமாக உணர்த் தும். ■







# ஜெயலலிதாவின் சுவரிடிப்பு அரசியல்



சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவது, ஈழத்தமிழருக்கு ஆதரவளிப்பது என்ற இரட்டைக்குதிரைச் சவாரி பாராளுமன்றத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் ஜெயலலிதாவுக்கு கைகொடுக்காது. இதே சவாரி தி.மு.க.வுக்கு கைகொடுக்கவில்லை என்பது அண்மைக்கால வரலாறு உணர்த்தும் பாடம்

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் இரவோடு இரவாக இடித்துத் தள்ளப்பட்டிருக்கிறது. உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்தக் கைது நடவடிக்கையைக் கண்டித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவும், நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமானும் தஞ்சாவூரில் உள்ள விளார் கிராமத்தில் இருக்கும் நினைவு முற்றத்திற்கு விரைந்தார்கள். அவர்களை நினைவு முற்றத்திற்குள் நுழைய பொலிஸ் அனுமதிக்கவில்லை. அதனால் அங்கேயே போராட்டத்தில் குதித்தனர். பொலிஸாருடன் ஒரு கட்டத்தில் தள்ளுமுள்ளு வரும் நிலையே உருவாகிவிட்டது. அப்போது நிருபர்களிடம் பேசிய வைகோ, ''இது ஒரு பாசிச ஆட்சி'' என்று கடுமையாகப் பேசினார். ''உலகத் தமிழர்கள் எல்லாம் என்ன நினைப்பார்கள்?'' என்று ஆவேசமாகக்கேள்வி எழுப்பினார். ஏன் இலங்கை ஜனாதி



பதி ராஜபக்ஷவிற்கும் முதல்வர் ஜெயலலிதாவிற்கும் என்ன வித்தியாசம்? என்று உணர்ச்சி பூர்வமாக உரத்த குரலில் பேசினார்.

தமிழகத்தில் ஆங்காங்கே இந்த இடிப்புச் சம்பவத்திற்கு திடீர் போராட்டங்கள், மறியல்கள் நடந்தன. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகளே ''எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது'' என்று சாலை மறியலில் ஈடுபட்டனர். எங்கும் ஒரே பரபரப்பு. இந்த நினைவு முற்ற இடிப்பின் பின்னணியில் உடனடியாக





'டெசோ' அமைப்பின் அவசரக் கூட்டத்தை நடத்தவிருக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. அவர் தன் பேட்டியில், 'இரட்டை நிலைதான் இந்த அரசின் (தமிழக அரசு) அணுகுமுறை. வரலாற்றுப் பதிவுகளையும் பழந்தமிழ் சின்னங்களையும் ஒழிப்பதே தங்கள் கடமை என்று கருதிச் செயற்படுகின்ற பல செயல்களிலிருந்து புரிந்து கொள்ளலாமே. அதற்கு பல உதாரணங்கள் உண்டு. அவற்றில் இதுவும் (முள்ளி வாய்க்கால் நினைவு முற்றம் இடிப்பு) ஒன்று' என்று கூறியிருக்கிறார். அவரைப் பொறுத்தமட்டில் பழ. நெடுமாறன் கைது பற்றியோ அல்லது வைகோவின் போராட்டம் பற்றியோ கருத்துச் சொல்லவில்லை. நினைவுமுற்றத்தின் காம்பவுண்ட் சுவர் இடிக்கப்பட்டது குறித்து மட்டும் 'சிம்பிளாக' கருத்துச் சொல்லி விட்டு டெசோ கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார். அந்த டெசோ கூட்ட முடிவின்படி அடுத்தகட்டப் போராட்டங்களில் அவர் இறங்கக்கூடும்.

ஆனால் டாக்டர் ராமதாஸ் 'நினைவு முற்றத்தின் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலைத்துறைக்குச் சொந்தமான இடத்தில் சுற்றுச்சுவர் அமைத்து அதை உலகத் தமிழர் பேரமைப்பே பராமரிப்பது என்றும், நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அனுமதியை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்துக் கொள்வது என்றும் தமிழக அரசுடன் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. நடப்பாண்டிற்கும் அனுமதியைப் புதுப்பிக்கக் கோரி பல மாதங்களுக்கு முன்பே மனு அளிக்கப்பட்டுள்ள நிலையில், ஆக்கிரமிப்பு என்று கூறி சுற்றுச் சுவரை இடித்துள்ளது. பூங்கா சிதைக்கப்பட்டுள்ளது. முற்றத்திற்குச்செல்லும் நுழைவு வாயிலை கம்பி வேலி அமைத்து தடுத்துள்ளனர். ஒரு புறம் தமிழக சட்டமன்றத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தீர்மானம் இன்னொரு புறம் முள்ளிவாய்க்கால் முற்றச்சுவர் இடிப்பு என்று ஜெயலலிதா இரட்டை வேடம் போடுகிறார்' என்று சாடியிருக்கிறார். பொதுநலவரசு உச்சி மகாநாட்டை இந்தியா முழுவதுமாக புறக்கணிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்ற கூட்டப்பட்ட சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைப் புறக்கணித்தது பாட்டாளி மக்கள் கட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் ராமதாஸைத் தொடர்ந்து மற்ற சிறிய கட்சித் தலைவர்கள் கண்டித்து இருந்தாலும், அ.தி.மு.க.வின் இரு முக்கிய கூட்டணிக் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அன்றே அறிக்கை விடவில்லை. கண்டனமும் தெரிவிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் நினைவு முற்றத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நல்லக்கண்ணு இடிக்கப்பட்ட தினத்தில் ஏதும் பேட்டி கொடுக்கவில்லை. அறிக்கை விடவில்லை. ஏன் ஈழத்தமிழர் போராட்டத்துடன் இணைந்து பணியாற்றி வரும் சி.பி.ஐ. தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கூட அன்றே கருத்துச் சொல்லவில்லை. வழக்கம்போல் காங்கிரஸ் கட்சி மௌனம் சாதித்தாலும், பொதுநலவரசு உச்சி மகாநாடு சம்பந்தப்பட்ட தீர்மானத்தையே அந்தக் கட்சி சட்டமன்றத்தில் புறக்கணித்து விட்டதால், நினைவு முற்றத்தின் சுற்றுச்சுவர் இடிப்பு பற்றி கருத்துக்கூறும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திற்குள் நுழைய




முத்தையா காசிநாதன்

பொலிஸ் தடை விதித்துள்ளது என்று ஈழத்தமிழ் ஆதரவாளர்கள் அமைப் பினர் குற்றஞ் சாட்டி வருகிறார்கள். இந்தப் போராட் டத்திற்குச்சென்ற வைகோவை சமா தானப்படுத்தி அங்கிருந்து அனுப்பி விடுவதில்தான் காவல்துறை சீரிய ஸாக இருந்தது. 'நினைவு முற்ற சுற் றுச்சுவர் நெடுஞ்சாலைத்துறைக்குச் சொந்தமான இடத்தில் இருக்கிறது. ஆகவே இடித்ததில் தவறு இல்லை' என்பதை விளக்கிச் சொன்ன உயர் பொலிஸ் அதிகாரிகள் ஒரு கட்டத் தில் வைகோவை சமாதானப்படுத்தி னார்கள் என்றே சொல்ல வேண்டும். அங்கே உடனே அவசர ஆலோ சனை நடத்திய வைகோ, சீமான் உள் ளிட்டோர் 'முதலில் இலங்கைத் தமி ழர் ஆதரவுக்காகப் போராடும் 21 அமைப்புகளை அழைத்துப் பேசு வோம். அதன் பிறகு நினைவு முற்ற விடயத்தில் ஒரு முடிவு எடுப்போம்' என்று தீர்மானித்தனர். இதை கைது செய்யப்பட்ட பழ.நெடுமாறனிடமும் விளக்கிச் சொன்னார்கள். இனி 21 அமைப்புகளும் இணைந்து என்ன முடிவு எடுக்கப் போகிறார்கள்? எது மாதிரியான போராட்டங்களை நடத் தப் போகிறார்கள்? என்பது போகப் போகத் தெரியும்.

பழ. நெடுமாறன் கைது திடீரென்று நடந்தது அல்ல. அதற்கு முன்பே முதல்வர் ஜெயலலிதாவை நினைவு முற்றத் திறப்பு விழாவிற்கு அழைத்து அவர் வர மறுத்து விட்டார் என்று வைகோவே வெளிப்படையாக அறி வித்துள்ளார். அதன் பிறகு நினைவு முற்றத் திறப்பு விழாவை நடத்தக் கூடாது என்று உயர்நீதிமன்றம் வரை சென்று தடை கேட்டுப்பார்த்தது தமி ழக அரசு. அதற்கு உயர்நீதிமன்றம் தடை கொடுக்கவில்லை. மாறாக நடராஜன் தரப்பை அனுமதித்தது. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று தடை பெற்று விடக்கூடும் என்று அஞ்சிய உலகத் தமிழர் பேரமைப்பினர் அவ சர அவசரமாக முறைப்படி அறிவிக் கப்பட்ட திறப்பு விழாவிற்கு முன்பே நினைவு முற்றத்தைத் திறந்து வைத் தார்கள். நவம்பர் எட்டாம் திகதி தான் முறைப்படியான திறப்பு விழா. ஆனால் அந்தத் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை பல்வேறு தலைவர் கள் அங்கே பங்கேற்று நிகழ்ச்சிகளை நடத்தினர். சொற்பொழிவுகள் நடந் தது. இந்நிலையில் அனுமதிக்கப் பட்ட நேரத்திற்கும் அதிகமாக ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்தினார் கள் என்ற புகாரின் அடிப்படையில் பழ.நெடுமாறன் உள்ளிட்டவர்கள் மீது வழக்குப் போட்டது தமிழக காவல்துறை. அதில் எம்.நடராஜனும் அடக்கம். நான்கு பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கு அது. இதன் தொடர்ச்சியாகவே இப் போது நினைவு முற்ற சுற்றுச்சுவர் இடிக்கப்பட்டுள்ளது. பழ.நெடுமாறன் கைது செய்யப்பட்டுள்ளார். எம்.நட ராஜனும் அவரது தம்பி ஸ்வாமிநாத னும் மதுரை உயர்நீதிமன்றத்தில் முன் பிணை கோரியிருக்கிறார்கள். ஆனால், அதில் அவர்கள் வைத்து ள்ள வாதம் வினோதமானது. 'நினைவு முற்றத்தைக் கட்டிய உலகத் தமிழ் பேரமைப்பிற்கும் அந்த நிகழ்ச்சியை நடத்திய அமைப்பாளர் களுக்கும் எங்களுக்கும் சம்பந்த மில்லை. நான் தலைமை விருந்தினர் என்ற தகுதியில் மட்டுமே நவம்பர் 8ஆம் திகதி திறப்பு விழாவில் பங் கேற்றேன்' என்று கூறியிருக்கிறார்.

முள்ளிவாய்க்கால் சம்பவங்கள் அனைத்துமே வெளியுலகிற்குத் தெரி யுமாறு இந்த சுற்றுச்சுவர்கள் மீதுதான் பதிவு செய்யப்பட்டிருந்தன. சுற்றுச் சுவருக்குள் இருப்பது நினைவகங் கள் மற்றும் தங்குவதற்கு வசதியாக சில அறைகள். எதிர்காலத்தில் உலகத் தமிழர்கள் யாராவது இங்கு வந்து அஞ்சலி செலுத்தினால், அவர்கள் குடும்பத்துடன் நினைவு முற்றத்தில் உள்ள அறைகளிலேயே தங்கிக் கொள்ளலாம். அந்த அளவிற்கு வச திகளுடன் இந்த நினைவு முற்றம் இருக்கிறது. அந்தச் சுற்றுச்சுவர் இடிக் கப்பட்டு கம்பி வேலி போடப்பட் டுள்ளதால், இப்போது முள்ளிவாய்க் கால் காட்சிகள் கட்டிடத்திற்குள் இருக்கும் நினைவு முற்றத்திற்குள் போகாமலேயே அந்த வழியாக வரு வோரும், போவோரும் காணும் விதத்தில் இருக்காது. இந்த அளவில் இடிப்புச் சம்பவம் தமிழகத்தில் ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டத்திலும் சரி, அரசியல் களத்திலும் சரி பெரும் மாற்றத்தைக் கொண்டுவரப்போகி றது.

ஆளும் அ.தி.மு.க. அரசைப் பொறுத்தவரை இது ஒரு இக்கட்டான காலகட்டம் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். இலங்கையில் இறுதிக் கட்டத்தில் நடைபெற்ற போரில் இந்திய அரசும் அப்போது முதல்வராக இருந்த கருணாநிதியும் சேர்ந்துதான் தமிழர்களைக் கொன் றார்கள் என்ற குற்றச்சாட்டை பகிரங் கமாக வைத்து வந்தது அக்கட்சி. ஆட்சிக்கு வந்ததும் 8.6.2011 அன்று தமிழக சட்டமன்றத்தில் இலங்கைத் தமிழர்கள் பற்றி முதல் தீர்மானத்தை நிறைவேற்றினார் தமிழக முதல்வர் ஜெயலலிதா. அதைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்ற விவாதத்தில் தி.மு.க.வையும் மத்திய அரசையும் கடுமையாகச் சாடினார். அவர் தன் உரையில், 'தமிழினத் தலைவர் என்று கூறிக்கொண்டு தமிழினப் படுகொ லைக்கு காரணமாக இருந்தவர் கருணாநிதி' என்றும், இலங்கைத் தமி ழர் பிரச்சினையில் அவரது நடவடிக் கையைப் பார்த்தால், 'உறவு போல் இருந்து குளவிபோல் கொட்டுவது' என்ற பழமொழிதான் எனக்கு நினை வுக்கு வருகிறது என்றும் காட்டமாகப் பேசினார். அப்போதுதான் போர்க் குற்றங்கள் புரிந்த இலங்கை ஜனாதி பதி ராஜபக்ஷவை போர்க்குற்றவாளி யாக அறிவிக்கும் வரை, தமிழர்கள் சிங்களவர்களுக்கு நிகரான உரிமைக ளைப்பெற்று கண்ணியமாக வாழும் வரை இலங்கை மீது இந்தியா பொரு ளாதாரத்தடை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சென்ற மார்ச் மாதத்தில் பொது வாக் கெடுப்பு நடத்த வேண்டும் என்றே தமிழக சட்டமன்றம் தீர்மானம் நிறை வேற்றியது.

குறிப்பாக நடைபயணத்தில் வைகோவைச் சந்தித்த பிறகு நிறை

வேற்றப்பட்ட தீர்மானம் அது. அப்போதுதான் 'வரலாறு பொன்மகுடம் சூட்டும்' என்று அந்தத் தீர்மானத்தை வரவேற்ற வைகோ, 'தமிழ் ஈழம் மலரத்தான் போகிறது. இந்திய பாராளுமன்றமும் இதுபோன்ற தீர்மானத்தை நிறைவேற்றத்தான் போகிறது' என்று அறிக்கை விட்டார். இதன் பிறகுதான் பொதுநலவரசு உச்சி மகாநாடு வந்தது. அந்த மகாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது, குறிப்பாக பெயரளவில் கூட பங்கேற்கக் கூடாது என்று 24.10.2013 அன்று தமிழக சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதுமட்டுமன்றி இலங்கையை பொதுநலவரசு கூட்டமைப்பில் இருந்து தற்காலிகமாக நீக்கி வைக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. ஆனால் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்க மாட்டார். அதே சமயத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் பங்கேற்பார் என்று மத்திய அரசு முடிவு செய்தது. 'பிரதமர் போகாதது சற்று ஆறுதல் அளிக்கிறது' என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி பேட்டி கொடுத்தார். 'அது ஆறுதல் அளிக்கவில்லை' என்பதைச் சுட்டிக்காட்டவே தமிழக சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டம் நவம்பர் 12ஆம் திகதி கூட்டப்பட்டது. ஆனால் இந்த இருபது நாட்களில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் மாறியிருந்தது. இந்த இரு கட்சிகளுமே தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை.

12ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஈரம் காய்வதற்கு முன்பே தஞ்சாவூரில் உள்ள விளார் கிராமத்தில் 13 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் சுற்றுச்சுவர் இடிக்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் 12ஆம் திகதி இரவே அதற்கான முஸ்தீபுகள் முடுக்கிவிடப்பட்டு விட்டன என்பதுதான் ஹைலைட். அதைவிட முக்கியமாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் பொதுநலவரசு உச்சி மகாநாட்டில் பங்கேற்க இலங்கை மண்ணில் கால் வைத்தபோது, தமிழ் மண்ணில் கட்டப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூணின் சுற்றுப்புறச்சுவர் இடித்துத் தள்ளப்பட்டது. இது மத்திய அரசின் வற்புறுத்தலைக்காட்டுகிறது என்று தமிழக காவல்துறையில் உள்ள

**இனிமேல் தமிழகத்தின் அரசியல் களம் மாறும். பரபரப்பு காட்சிகள் அறங்கேறும். அரசியல் அணிகளில் கூட அதிரடி மாற்றங்கள் நிகழலாம். முள்ளி வாய்க்கால் நினைவு முற்ற சுவர் இடிப்பு இதற்கெல்லாம் ஒரு விதையை தமிழகத்தில் விதைத்து விட்டது**

உயர் அதிகாரிகளின் எண்ணமாக இருக்கிறது. மத்திய அரசின் தரப்பில், 'இந்த நினைவு முற்றம் எதிர்காலத்தில் பிரபாகரனின் மாவீரர் தினம் கொண்டாடப்படுவதற்கு வசதியாக அமைந்துவிடும்' என்று மத்திய அரசு விடுத்த எச்சரிக்கையே இந்த இடிப்பின் பின்னணி என்ற செய்திகள் சிறகடித்துப் பறக்கின்றன. ஆனாலும் 'சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது' 'ஈழத்தமிழர்களுக்கு ஆதரவளிப்பது' என்ற இரண்டும் வெவ்வேறானவை என்பதை அறிவிக்கும் வகையிலேயே தமிழக அரசின் நடவடிக்கை அமைந்தது என்பதுதான் இதில் முக்கிய அம்சம்.

அ.தி.மு.க. என்ற கட்சி இப்போது தி.மு.க. ரூட்டிற்கு வந்துவிட்டது. அதாவது தி.மு.க. ஆட்சி செய்த போது இப்படித்தான் 'சட்டம் ஒழுங்கை' காரணம் காட்டி போராட்டம் செய்வோர் மீது அவ்வப்போது நடவடிக்கை எடுத்தது. அதேநேரத்தில் ஈழத்தமிழர்களுக்காக முதலமைச்சராக இருந்த கருணாநிதியே உண்ணாவிரதம் இருந்தார். மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தினார். அனைத்து எம்.பி.க்களும் ராஜினாமா செய்வார்கள் என்று அறிவித்தார். ஆனால் அப்போது விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு இருந்தது. அதே வழியைத்தான் இப்போதைய அ.தி.மு.க. அரசு இப்போது தொடங்கியிருக்கிறது. ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான போராட்டங்களை இதுவரை அனுமதித்த அ.தி.மு.க. அரசு, இப்போது கெடுபிடி செய்கிறது. வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டமே பாய்கிறது. ஆனால் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும், பெயரளவில் கூட பொதுநலவரசு உச்சி மகாநாட்டில் யாரும் கலந்துகொள்ளக்கூடாது என்று சட்டமன்றத் தீர்மானங்களை நிறைவேற்றுகிறது. ஏன் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா மூன்று முறை கடிதம் எழுதினார்- நீங்களும் சரி, இந்தியாவிலிருந்து யாருமே பெயரளவில் கூட இலங்கையில் நடக்கும் பொதுநலவரசு உச்சி மகாநாட்டில் பங்கேற்கக் கூடாது என்று!

ஆனால் 'சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது?' ஈழத்தமிழருக்கு ஆதரவு அளிப்பது? என்ற இரட்டைக் குதிரை சவாரி பாராளுமன்றத் தேர்தல் நேரத்தில் அ.தி.மு.க.விற்கு கைகொடுக்காது என்பதே அரசியல் பார்வையாளர்களின் கருத்து. எப்படி 2011 சட்டமன்றத் தேர்தலில் இந்த சவாரி தி.மு.க.விற்கு கைகொடுக்கவில்லையோ அது மாதிரிதான் வருகின்ற பாராளுமன்றத் தேர்தலிலும் அ.தி.மு.க.விற்கு 'விஸ்வரூபம்' ஆக எழுந்து நிற்கும். அதை எப்படி சமாளிக்கப்போகிறது அ.தி.மு.க. என்பதுதான் இனிமேல் அக்கட்சி முன்பு நிற்கும் சவால். அதேநேரம், இனி தமிழகத்தின் அரசியல் களம் மாறும். பரபரப்புக் காட்சிகள் அரங்கேறும். ஏன் அணிகளில் கூட பாராளுமன்றத் தேர்தலின் போது அதிரடி மாற்றங்கள் நிகழலாம். முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற சுற்றுச்சுவர் இடிப்பு இதற்கெல்லாம் சேர்த்து ஒரு விதையை தமிழகத்தில் விதைத்து விட்டது என்றே சொல்ல வேண்டும்! ■

உள்நாட்டு அரசியல்



இலங்கையின் தசாப்தகால உள்நாட்டு யுத்தத்திற்குப்பின்னர் அரச மற்றும் தனியார் பௌதீகச் சொத்துகளுக்கு அதீதமான மீள்கட்டுமானங்களைச் செய்ய வேண்டிய பெரும் சேதங்களுக்கு மாத்திரம் நிலைமை வரையறுக்கப்படவில்லை. அனேகமாக, அன்புக்குரியோரை இழந்தமை, வீடுகள் உட்பட்ட சொத்துகளை இழந்தமை, தனிப்பட்ட காயங்கள், இடப்பெயர்வு, பிள்ளைகளின் கல்வியில் இடையூறு ஏற்பட்டமை, வாழ்வாதாரத்தை இழந்தமை, குடும்பத்தின் உழைப்பவரை இழந்தமை மற்றும் மோதல் தொடர்புடைய மன வடுக்கள் என்பவற்றின் காரணமாக முழுச் சனசமூகங்களுமே பாதிக்கப்பட்டுள்ளவர்களுள் குறிப்பாகப் பெண்கள், மிக அபாயவாய்ப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் யுத்த விதவைகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், தனித்த பெண்கள், முன்னாள் பெண் போராளிகள், பெண் பிள்ளைகள் என்போர் எண்ணிக்கையில் அதிகமானோராய் இருப்பதுடன், மோதலுக்குப் பிந்திய இடங்களில் வாழும் சனசமூகங்களின் மிகவும் அபாய வாய்ப்புக்கு உட்பட்ட பிரிவினராயும் உள்ளனர். இந்நிலைமையின் விபரங்கள், கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு (LLRC) போன்ற அரச பொறிமுறைகள் ஊடாகவும், நன்கு ஆய்வு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

# போருக்குப்பின்னரான மீள்நிர்மாணம், மீண்டெழலில் பெண்கள்



ஹரிம் பீரிஸ்



தீர்த்துக்கொள்வதில் இலங்கையின் சாதிப்பானது, மோதலால் பாதிக்கப் பட்ட பெண்கள் விடயத்தில் மிக மோசமான நிலையிலேயே உள்ளது. மோதல்கள் ஓய்ந்து 4 ஆண்டுகள் கடந்த நிலையில், இன்னும் அவர்கள் சமூகத்தில் உள்வாங்கப்படாமலும் அபாயவாய்ப்புக்கு உட்பட்டவர்களா யும், படுபாதாள நிலையில் உள்ளனர். உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படுவதும், விரும்பப்படு வதும், தேவைப்படுத்தப்படுவதுமாக தோன்றுகின்றதை, அதற்காக உள்ளூரி லும் சர்வதேச ரீதியிலும் முழு ஆதரவு டன் ஒரு விளைவைத் தடுப்பதற்காக செயலாற்றும் அரசியல் தன் னியக்கங்களும் உள்ளன.

## அரசாங்கத்தில் மிகக் குறைந்த பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் பெண்கள்

இதற்கான முதலாவது காரணம், இலங்கை அரசியல் வாழ்வில் பெண் கள் குறைந்த பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதாகும். உலகின் முதற் பெண் பிரதம மந்திரி மற்றும் உலகி லேயே பிரபல்யமாகத் தெரிவு செய் யப்பட்டு மற்றும் மீளத் தெரிவு செய் யப்பட்ட ஜனாதிபதி போன்றோரைக் கொண்டிருக்கும் பெருமைக்குரிய சாதனைகள் இருந்தபொழுதிலும் இலங்கைப் பெண்கள் பொது வாழ் வைக் கொண்டிருப்பதிலோ அதனை நாடுவதிலோ துடிப்பான பங்குபற்று னர்களாக இருக்கவில்லை. தற்போது பெண்கள் உள்ளூராட்சியில் 2% வீத மாகவும், மாகாண அரசாங்கத்தில் 3% வீதமாகவும், தேசிய மட்டத்தில் 6% வீதமாகவும் மாத்திரமே பிரதிநி தித்துவம் கொண்டுள்ளனர். இலங்கை யில் பெண்கள் விவகார அமைச்சராக ஒரு ஆண் பதவி வகிப்பதன் மூலம் இதனை மேலும் சிறப்பாக எடுத்துக் காட்ட முடியும். இந்நிலைமையிலி ருந்து மீளுவதாயின் மக்களால் தெரிவு செய்யப்படும் சபைகளில் பெருமளவிலான பெண்களின் பிரதிநி தித்துவத்தை எவ்வாறு உறுதிப்படுத்து வது என்பது மீதான பல்வேறு மாதிரி

இந்நிலைமைக்கான தீர்வுகளா னவை இலங்கையில் மாத்திரமல்லா மல் உலகம் பூராகவும் பெண்களுக்கு எதிரான சகல வடிவங்களிலுமான பாரபட்சங்களை இல்லாதொழிப்பது மீதான சமவாயத்துடனும் (CE-DAW), ஐக்கிய நாடுகளின் பாதுகாப் புச் சபை தீர்மானம் (UNSC) 1325 போன்ற பல உலகளாவிய பொறிமு றைகளுடனும், உள்ளூரில் LLRC அறிக்கை மற்றும் மீண்டெழுதல் மீள் நிர்மாண முயற்சிகளின் முக்கிய அம்ச மாக உள்ள கலந்துரையாடல், பால் நிலை கூருணர்வு மற்றும் பெண்களை உட்படுத்துதல் என்பவற்றை விப ரிக்கும் பல்வேறு தேசிய கருத்திட்டங் கள் என்பனவற்றுடனும் பூரணமாக விவாதிக்கப்பட்டும் உரையாடப் பட்டும் உள்ளது.

ஆனாலும், மீள்கட்டுமானம் மற்றும் மீண்டெழும் விடயங்களில், பெண் களைப்பொறுத்த பிரச்சினைகளைத்

கள் மற்றும் கிடைக்கக்கூடிய தெரிவுகளுடன், தேர்தலில் ஒரு கோட்டா முறைமையின் கொள் கையை முன்னெடுக்க வேண்டும்.

இரண்டாவது, ஜே.வி.பி. கிளர்ச்சியின் விளைவாக இளைஞர் வேட்பாளர் கோட்டாவுடன் இலங்கை பரிசோதனை செய்தது என எடுத்துக் கொண்டால், சில பெண்கள் சார்பு ஏற்பாடுகளைச் சாதிக்க முடியாதவையாக இருக்கின்றது. இதனை, அரசியல் கட்சிகளிடையே பிரசாரம் செய்ய வேண்டும். எதிர்க்கட்சிகளிடையே இவ் ஏற்பாடுகளுக்கான சில ஆதரவும் அனுதாபமும் உள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியானது, தனது அண்மைய அரசியலமைப்பு முன்மொழிவுகளில் பால்நிலை பிரதிநிதித்துவத்திற்கு நியாயமான சந்தர்ப்பம் வழங்கியுள்ளது. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அண்மைய வடமாகாண சபைத்தேர்தலில், அதன் போனஸ் ஆசனங்களில் ஒன்றுக்கு, தேர்தலில் வெற்றிபெறாத பெண் வேட்பாளரை நியமித்ததுடன், வேறொரு போனஸ் ஆசனமானது முஸ்லிம் பிரதிநிதித்துவத்தின் அதிகரிப்பை நோக்காகக் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒரு சக்திவாய்ந்த பெண் தலைமைத்துவவேர்களுடன் கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியால் வழிநடத்தப்பட்டு இருந்தாலும், கவலைக்குரிய முறையில் இவ்விடயங்கள் தொடர்பில் தற்பொழுது ஆர்வம் செலுத்துவதில்லை.

## இரட்டை பாரபட்சத்தை எதிர்நோக்கும் தமிழ்ப் பெண்கள்

வடக்கு, கிழக்கில் பெண்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதிலும் அவர்களை மீண்டெழல் மற்றும் மீள் நிர்மாணத்தில் உள்ளடக்குவதிலும் உள்ள இத்தவறுகைக்கான இரண்டாவது காரணம் அவர்கள் பெண்களாக இருப்பது மாத்திரமல்ல, அவர்கள் தமிழர்கள் எனும் உள்ளடக்கப்படாத சிறுபான்மைக்குழுவாக இருப்பதுவேயாகும். இதன் பிரகாரம் வடக்கு, கிழக்கில் மோதல்கள் காரணமாகப் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண்களை உள்ளட க்குவதிலும், அவர்களின் வாழ்வுக்கு புனர்வாழ்வு அளிப்பதிலும், பாரிய சவாலை எதிர்நோக்க வேண்டியுள்ளது. சமூக முறைமையில் பெண்களுக்கு எதிராகவும் தமிழர்களுக்கு எதிராகவும் செயற்படும் உண்மையின் நிமித்தம் இரட்டைச் சிரமமானதாக மாற்றப்படுகிறது. ராஜபக்ஷ நிர்வாகத்தால் யுத்தத்தின் இறுதியில் நியமிக்கப்பட்ட, பொதுவாக நல்நோக்கங்கள் கொண்டதும் ஆனாலும் குறிப்பிடத்தக்க முறையில் வினைத்திறன் குறைந்தது மான, அரசாங்க உச்ச அமைப்பாகிய யுத்தத்திற்குப் பிந்திய பிரதேசங்களில் மீள்நிர்மாணம் மீதான ஜனாதிபதி செயலணியானது (Presidential Task Force on reconstruction in the post war areas) அதன் ஆரம்பத்திலேயே ஒரேயொரு தமிழரையோ அல்லது ஒரேயொரு பெண்ணையோ அதனது 19 உறுப்பினர் அமைப்பில் கொண்டிராமையானது இதற்கொரு சிறந்த உதாரணமாகும். இக்குழுவானது தமிழ் பெரும்பான்மை வடக்கில், அநேகமான பாதிக்கப்பட்டவர்கள் பெண்களாக இருக்கும் பிரதேசங்களில் மீள்நிர்மாணம் மற்றும் மீண்டெழும் முயற்சிகளைக்கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டதாகும். ஆயினும், ஒரேயொரு தமிழரோ அல்லது ஒரேயொரு பெண்ணோ அரசாங்கத்தினது சொந்தக்கூட்டாளிகளாகிய ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி) அல்லது தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்புகளில் இருந்து கூட நியமிக்கப்படவில்லை. மனவடுவுக்குப் பிந்திய மனஅழுத்த குழப்பநிலைகள், உளவள ஆலோசனைச் சேவைக்கான தேவை மற்றும் பெண்களின் தனித்துவமான அக்கறைகள் போன்ற மிகவும் மென்மையான மனிதத் தேவைகளுக்கு இச்செயலணியானது குறிப்பிடத்தக்க அளவில் அனுதாபம் குறைந்ததாக இருப்பது சிறிது ஆச்சரியமானது. இதன் பிரகாரம் யுத்தத்திற்கு பிந்திய மீள்நிர்மாணத்தில் பெண்களை ஈடுபடுத்திக் கொள்ளுதலானது கட்டாயமானதாகவும் தமிழ்ச் சனசமூகம் அரசியலில் பங்குபற்றுவதையும் ஈடுபடுவதையும் வேண்டி நிற்கிறது. அண்மையில் நடைபெற்று முடிந்த வடமாகாணசபைத் தேர்தலில், மாகாண சபையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைத் தொகுதிகளுக்கும் அதிகமான ஆசனங்களை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பெற்றுக்கொண்டது. இது, தெரிவு செய்யப்படாத, ஆனால், பொதுவாக இறுக்கமான முன்னாள் இராணுவத்தைச் சேர்ந்த ஆளுநரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான விளைவு இயலுமையைக் கொண்டிருப்பதுடன், மீண்டெழல் மற்றும் மீள்நிர்மாணச் செயன்முறையில் ஜனநாயகத் தமிழ் அரசி யல் பங்குபற்றுகையின் புதிய வலுவூட்டுகைக்கான ஒரு வெற்றியைக் கொண்டுள்ளது. ஜனாதிபதி செயலணி மாத்திரமல்லாமல் பல்தரப்பு நிறுவனங்களான- விசேடமாக உலகவங்கி, சர்வதேச நிதி நிறுவனம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற கடன் வழங்கும் நிறுவனங்களும் பால்நிலை கூருணர்வுடையனவாக இருப்பதுடன், வடமாகாண சபையின் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகளுடன், வடக்கில் தமது மீள்நிர்மாண நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துரையாடி அவர்களுடன் ஈடுபடவும் வேண்டும் எனவும் நம்பலாம்.

## வலுவற்ற ஒரு ஜனநாயகம்

பெண்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும் மீண்டெழல் மற்றும் மீள்நிர்மாணத்தில் அவர்களை உள்ளடக்குவதிலும் தவறியதற்கான மூன்றாவது காரணமாக இருப்பது இலங்கை ஜனநாயகத்தின் ஒரு பிரச்சினையாகும். இலங்கையானது அரசாங்கத்தின் பிரதிநிதித்துவ முறையைக் கொண்டுள்ளதே தவிர ஆளுகையின் பதிற்செயற்பாட்டு முறைமையைக் கொண்டிருக்கவில்லை. எமது ஜனநாயகமானது

*(46ஆம் பக்கம் பார்க்க...)*

**உள்நாட்டு அரசியல்**

தனது தேர்தல் வெற்றியின் பொருளை விளக்கம் கொடுத்து கூறுவதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு உரிமை இருக்கிறது. மக்களின் ஆணை ஒரு விடுதலைப் போராட்ட மரபின் பின்புலத்தில் எழுந்தது. அரசியல் தீர்வு ஒன்றை அடைவதற்கான வேணவாவின் வெளிப்பாடு அது



சுரேந்திர அஜித் ரூபசிங்க

# கூட்டமைப்பின் தேர்தல் வெற்றியும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையும்

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை இலங்கை அரசியலின் மையப் பிரச்சினையாக உள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் வெற்றி சுயநிர்ணய உரிமை என்ற பிரச்சினையின் அடிப்படையில் இருதுருவ நிலைப்பாடு தீவிரமடைந்துள்ளது. இந்த இருதுருவ நிலை தெட்டத் தெளிவானது. ஒரு புறத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் எல்லா அதிகாரங்களும் குவிக்கப்பட்டு ஒற்றையாட்சி முறை என்ற நிலை பலப்படுத்தப்பட்டு நீடிக்கப்படுகிறது. மறுபுறத்தில் அரச அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும், அதிகாரங்களில் பங்கேற்பு வேண்டும் அல்லாவிட்டால் பிரிந்து போவோம் என்ற எண்ணம் வலுப்பெறுகிறது. கருத்து வடிவிலான இந்தச் சிக்கலின் யதார்த்தப் பரிமாணத்தைப் பார்ப்போம். இவ்வாறான துருவநிலை ஒற்றையாட்சி அரசு முறையை இப்போதுள்ளவாறு பாதுகாக்க வேண்டும் என்ற முனைப்பாலும், சிங்கள தேசியத்தின் கருத்தியல், அரசியல் மேலாண்மையாலும் எழுந்தது. தனித்துவமுடைய தேசிய இனங்களின் அந்தஸ்தை அரசியல் யாப்பு ரீதியாக அங்கீகரிக்கும்படியும் சமத்துவ அந்தஸ்தையும், அரச அதிகாரத்தில் பங்கையும் தரும்படியும் எழுந்த கோரிக்கையை நிராகரிப்பதன் பயனாய் இந்நிலை எழுந்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தில் வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் 'தனித்துவமான மக்கள்' என்றும், இந்நாட்டிற்கு சமஷ்டி அரசியல்முறை வேண்டும் என்றும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. பிளவுபடாத ஒன்றிணைந்த நாட்டிற்குள் சமஷ்டி என்றும் கூறப்பட்டது. இவ்வாறான பிரகடனம் செய்வதற்கு ஒரு அடிப்படையான ஜனநாயக உரிமை உள்ளது. எந்த மக்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்தார்களோ அவர்கள் அளித்த ஆணை இது. மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்களின் நலன்களைப் பேணும் கடப்பாட்டின் பாற்பட்ட உரிமை இது. தனது தேர்தல் வெற்றியின் பொருளை விளக்கம் கொடுத்துக் கூறுவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு உரிமை உள்ளது. மக்களின் ஆணை ஒரு விடுதலைப் போராட்ட மரபின் பின்புலத்தில் எழுந்தது. அரசியல் தீர்வு ஒன்றை அடைவதற்கான வேணவாவின் வெளிப்பாடு அது. ஆகையால் அது தொடர்பான யாப்பியல் தத்துவங்கள் எவை என விளக்கிக்கூறும் உரிமை அக்கட்சிக்கு உள்ளது.

தமிழ்த்தேசிய இயக்கம் ஒரு உறுதியான அரசியற் கொள்கை நிலைப்பாட்டைக்கொண்டது. சுயநிர்ணய

> தமிழ்த் தேசிய இயக்கம் ஒரு உறுதியான அரசியற் கொள்கை நிலைப்பாட்டைக் கொண்டது. சுயநிர்ணய உரிமை என்ற கருத்து அக்கொள்கை சார்ந்து எழுவது. ஜனநாயக வழியில் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முனைவை முன்னெடுத்துச்செல்ல வேண்டுமாயின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை மதித்தல் வேண்டும்

உரிமை என்ற கருத்து அக்கொள்கை சார்ந்து எழுவது. ஜனநாயக வழியில் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முனைவை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை மதித்தல் வேண்டும். அதனைவிடுத்து அதனைச்சட்டம் இயற்றித் தடைசெய்வதும், அக்கோரிக்கையைப் பற்றிப் பேசுவோரைக் கொடூரமாக அடக்கி ஒடுக்குவதும், ஒழித்துக் கட்டுவதும் பிரிவினைக் கோரிக்கையைத் தூண்டிவிடுவதற்கே உதவும். கௌரவம், சமத்துவம், சுயாட்சி, பாதுகாப்பு, ஜனநாயக சுதந்திரம் ஆகியவற்றை வேண்டி நிற்போருக்கு அரசியல் கட்டமைப்புக்குள் இடமளித்து, அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுத்து நியாயமான தீர்வினை அல்லவா வழங்க வேண்டும். தனித்துவமான தேசிய இனங்களும் இன மதக் குழுமங்களும் தத்தம் பிரச்சினைகள் தொடர்பாகத் தாமே முடிவெடுப்பதற்கும், அவர்களைச் சமத்துவமானவர்களாக நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமன்றோ அவர்களை அடிமைப்படுத்தி வைப்பதோ, பாரபட்சம் காட்டி ஒடுக்குவதோ தேசிய இனப்பிரச்சினையை ஜனநாயக வழியில் தீர்வு காண்பதற்கு மாறானது.

> தமிழ் மக்களின் உணர்வு நிலையை தளர்ச்சியடையச் செய்யாது பேணி எதிர்ப்பியக்கத்தை ஒருங்கமைத்து வழி நடத்துவதும் இன்றுவரை விடுதலைப் போராட்டத்தால் அடையப்பெற்ற பயன்களை பேணிப்பாதுகாத்து மேலும் முன்னோக்கி நகர்வதுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ள ஒரே வழியாகும்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எவ்வகையிலேனும் ஒரு சுயாட்சி முறையை செயற்படுத்துவதற்கு நவ பாசிச சக்திகள் அனுமதிக்கப்போவதில்லை. இவ்விடயத்தில் இச்சக்திகள் அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து செயற்படும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அத்தகைய முயற்சிகளுக்கு மாறான கடும் எதிர்ப்பியக்கம் தூண்டிவிடப்படும். நேரடியான இராணுவ நடவடிக்கைக்கும், இராணுவ அடக்குமுறைக்கும் வழிவகுக்கும் முறையில் 'தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' என்றவாறான சதிவேலைகள் முடுக்கிவிடப்படும். உட்கட்டமைப்பு வேலைகளை பாரிய அளவில் மேற்கொண்டு தரகுப்பண மாகப் பெருந்தொகையைக் கொள்ளையடித்தல், நில அபகரிப்பு என்பவற்றால் பெருஞ்செல்வத்தைத் திரட்டி ருசிகண்டவர்கள் ஒருபோதும் தம் முயற்சிகளில் பின்வாங்கப்போவதில்லை. மாகாணங்களுக்கோ, பிராந்தியங்களுக்கோ அதிகாரங்களைப் பகிர்தல் என்பது நடைபெறப் போவதில்லை. ஆதலால் கூட்டமைப்பு பெரும் நெருக்குதலை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். இந்த நெருக்கடிகளை கூட்டமைப்பு எதிர்கொண்டு முன்னேறுவதானால் அது ஒற்றுமை என்ற பலத்தின் மூலமே சாத்தியமாகும். மக்களின் உணர்வு நிலையை தளர்ச்சியடைய விடாது பேணி எதிர்ப்பியக்கத்தை ஒழுங்கமைத்து வழிநடத்துவதும் இன்றுவரை விடுதலைப் போராட்டத்தால் அடையப்பெற்ற பயன்களைப் பேணிப் பாதுகாத்து மேலும் முன்னோக்கி நகர்வதுமே அவர்களுக்குள்ள ஒரே வழியாகும். இதற்கு தமிழ்த் தேசியத்தின் விடுதலையை இலங்கை மக்களின் சுதந்திரம், ஜனநாயகம், விடுதலை என்பனவற்றின் வரலாற்றின் ஊடாகத்தான் அடைய முடியும்.

கூட்டமைப்பினால் இதனை அடைதல் சாத்தியமில்லை. ஏனெனில், அதனிடம் பல குறைகள் உள்ளன. தமிழர்களுக்கு சமத்துவமான உரிமையைக் கோரும் கூட்டமைப்பு முஸ்லிம்கள் என்ற தனித்துவமான தேசிய இனத்திற்கு அத்தகைய சமத்துவ உரிமையை வழங்குவதற்குத் தயாராக இல்லை. முஸ்லிம்களுக்கு எதிரான ஜனநாயக உரிமைகளையும் மனித உரிமைகளையும் மீறும் நடவடிக்கைகள் நிகழ்ந்தன. இவற்றையும் யுத்தத்தால் விளைந்த அனர்த்தங்களை கருத்திற் கொண்டு இழப்பீடுகள் அவர்களுக்கு வழங்கப்படவேண்டும். ஐக்கிய உணர்வை வளர்த்தல் வேண்டும். அதற்கு மாறாக 'தமிழ் பேசும் மக்கள்' என்ற வரைவிலக்கணத்திற்குள் முஸ்லிம்களையும் உள்ளடக்கி அவர்களின் தனித்துவத்தை மழுங்கடிக்க முனைவது பிளவுகளை வளர்க்கும். தமிழர்களுக்கே தீங்காக முடியும். இன்று கூட்டமைப்பின் முன்னால் உள்ள தெரிவுகள் எவை? மக்களின் அரசியல் உறுதியையும் அவர்களது உணர்வையும் கட்டியெழுப்பி அவர்களை முன்நடத்திச் செல்வதும் அவர்களது அடிமை வாழ்வுக்கு முடிவு காண்பதற்கான போராட்டத்தை முன்னெடுப்பதும் மிகப்பெரிய பணியாகும். இதனை புரட்சிகர இயக்கம் ஒன்றை சிங்கள மக்களினிடையே உள்ள வர்க்கஉணர்வு மிகுந்த தொழிலாளர் வர்க்கம்,விவசாயிகள், மீனவர்கள், பிற ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் பிரிவினர், பெண்கள், இளைஞர்கள் ஆகியோரை அணிதிரட்டுவதன் மூலம் உருவாக்க வேண்டும். அத்தகைய புரட்சிப் போராட்டமானது ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் போராட்டத்துடன் கைகோர்த்து ஒன்றிணைய வேண்டும்.

ஏகாதிபத்தியத்திற்கும், காலனித்துவத்திற்கும் நவகாலனித்துவ அடிமைத்தனத்திற்கும் எதிரான பொது முன்னணி அமைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான புரட்சிகரப் போரா

ட்டம் இல்லாதவிடத்து ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களினதும், இலங்கை மக்களினதும் தலைவிதியை ஏகாதிபத்திய/நவகாலனிய அமைப்பொழுங்கு தான் தீர்மானிக்கப்போகிறது. கூட்டமைப்பு தனது இலக்குகளை அடைவதற்காக 'சர்வதேச சமூகத்தின்' மீது நம்பிக்கை வைப்பதாகத் தெரிகிறது. அமெரிக்காவினாலும் மேற்கு நாடுகளின் வல்லரசுக் கூட்டினாலும் இந்தியாவினாலும் நடத்தப்படும் இராஜதந்திர காய் நகர்த்தல்களில் கூட்டமைப்பு நம்பிக்கை கொண்டுள்ளது போல் தெரிகிறது. இவ்வல்லரசுகளும் இந்தியாவும் ஆசிய பசுபிக், இந்திய சமுத்திரப் பிராந்தியத்தில் விரிவடையும் சீனாவின் செல்வாக்கை தடுத்து நிறுத்தி தமது தந்திரோபாய மேலாண்மையை தக்க வைத்துக்கொள்ள முனைகின்றன. இந்த விளையாட்டில் கூட்டமைப்பு இறங்குவது ஆபத்தானது. அது கூட்டமைப்புக்குள்ளும் தமிழ் மக்கள் மத்தியிலும் மேலும் முரண்பாடுகளையும் பிளவுகளையும் மிகுவித்து அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும். வேளாளர்-பிராமணர்/நிலமானிய- தரகு முதலாளித்துவ வகுப்பினர்கள் கொழும்பில் உள்ள ஆட்சியுடன் கைகோர்த்து நடப்பதற்கும், இருந்துவரும் ஒடுக்குமுறை அமைப்புகளையும் ஏகாதிபத்திய ஊடுருவலையும் தொடருவதற்கு உதவக்கூடும். இருப்பினும் ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களின் பக்கத் துணையாக இருப்பதற்கு முற்போக்கு வர்க்கங்கள் தயாராகவே இருக்கும். சுயகௌரவம், சுதந்திரம், விடுதலை என்பனவற்றிக்குச் சார்பாக அவை தமது போராட்டத்தை எவ்வித சமரசமுமின்றித் தொடரவே செய்வர். எதிர்காலம் இவர்களுக்கே உரியது.

தேசியங்களின் சுயநிர்ணயம் என்ற விடயத்தை ஜனநாயக வழியில் தீர்ப்பதைப் பொறுத்துத்தான் பூர்ஷுவா ஜனநாயகத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது. இதனை நேர்மையான மனப்பூர்வமான உரையாடல், பேரம் பேசுதல், பேச்சுவார்த்தை என்பன வற்றின் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும். சுயநிர்ணய உரிமையை மறுத்ததுதான் நடந்து முடிந்த யுத்தத்திற்கான காரணமாகும். இது கட்டமைப்பு ரீதியான காரணம். அடுத்தடுத்து பதவியேற்ற அரசாங்கங்கள் இதனைத் தீர்ப்பதற்குத் தவறின. ஜனநாயக அடிப்படையில் சுயநிர்ணயம் என்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தவறின. அரசாங்கங்கள் தேசிய இனங்களைப் பணிய வைப்பதிலும் அடக்கி ஒடுக்குவதிலும் ஈடுபட்டன. அதிகாரத்தைப் பிடித்த ஒவ்வொரு அரசாங்கமும் வலதுசாரி, இடதுசாரி என்ற பேதமின்றி, இந்த ஒடுக்குமுறைக்கொள்கையை நடைமுறைப் படுத்தின. பிற்போக்கு பூர்ஷுவா அரசியலின் இனவாதமும், மேலாண்மையும் அரங்கேறியது. அரசாங்கங்கள் சிங்கள மக்களின் நன்மை கருதி இவற்றை செய்யவில்லை. ஆளப்படுவோரின் அதிகார ஆசையும் வெறியும் ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாப்பதுமே நோக்கமாக இருந்தது. இந்த அரசியல் வழித்தடத்திலேயே ராஜபக்ஷ அரசும் செல்கிறது.

அரசியல் பகுப்பாய்வு என்பது நிகழ்வுகளுக்குப் பின்னால் உள்ள வர்க்க நலன்களை வெளிக்காட்டுவதாக இருத்தல் வேண்டும். அதிகாரத்திற்குப் போட்டியிடும் வர்க்கங்களை பின்னின்று இயக்கும் வர்க்க நலன்கள் எவை எனக்காட்டுதல் வேண்டும். வர்க்கப்பகுப்பாய்வு அடிப்படையிலான கொள்கைத் திட்டம் இல்லாவிடில் நாம் ஏமாற்றப்படுவோம். சந்தர்ப்பங்களைக் கைநழுவ விடுவோம். ஆதலால் போராட்டம் எவ்வழியில் செல்ல வேண்டும். அதன் பின்விளைவுகள், பயன்கள் எவை என்பதை நாம் சரியாக மதிப்பிடுதல் வேண்டும். இந்த அடிப்படையில் தான் கொள்கைகளையும் உத்திகளையும், மூல உபாயங்களையும் வகுத்துக் கொள்ள முடியும். சுதந்திரத்திற்கும் விடுதலைக்குமான எமது போராட்டம் விஞ்ஞான அடிப்படையில் அமைதல் வேண்டும். இவை வரலாற்று அனுபவம் மூலம் உறுதிப் படுத்தப்பட்ட உண்மைகள். இவற்றைக்கவனத்தில் கொள்ள வேண்டும். தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு வெற்றிகொள்ளப்பட்ட இனத்தின் மீது அரசினால் மேலிருந்து திணிக்கப்பட்ட ஒன்றாக இருக்க முடியுமா? 'அந்நியராக' கணிக்கப்படும் தோல்வியுற்ற தேசம் ஒன்றின் மீதான திணிப்பாக இது அமையலாமா?

சிங்கள-பௌத்த தேசத்தின் பிரதேசத்தையும் அதன் சமயத்தையும் மொழியையும் அந்நியரிடம் இருந்து மீட்டுவிட்டோம். இனி வெற்றி கொள்ளப்பட்ட இந்த அடிமைகளின் மீது எமது மேலாண்மையை நிறுவுவோம். எமது பெருமையையும் புக

> தனது இலக்குகளை அடைவதற்காக கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறது. அமெரிக்காவும் மேற்கு நாடுகளின் வல்லரசுகள் மற்றும் இந்தியாவும் ஆசிய பசுபிக், இந்து சமுத்திர பிராந்தியத்தில் விரிவடையும் சீனாவின் செல்வாக்கை தடுத்து நிறுத்தி தமது மேலாண்மையை தக்க வைத்துக் கொள்ள முனைகின்றன.
> இந்த விளையாட்டுக்குள் கூட்டமைப்பு இறங்குவது ஆபத்தானது

ழையும் மீள நிலை நிறுத்துவோம் என்ற தோரணையில் செயற்படுவது என்ன நியாயம்? இந்த அரசியல் கருத்தியலில் இருந்துதான் இராணுவ ஆதிக்கக் கோட்பாடு எழுகிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். விடுதலைப்புலிகளை யுத்தத்தின் மூலம் பூண்டோடு அழிக்க வேண்டும் என்ற யுத்த தந்திரோபாயம் இந்த அரசியல் கருத்தியலின் மீதுதான் அமைந்தது என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்த மனப்பாங்கும், கருத்தியலும் தொடர்ந்தால், அதன் விளைவாக தமிழ், முஸ்லிம் மக்களது அரசியல் அந்தஸ்தையும் உரிமைகளையும் அழித்தொழிக்கும் அரசியல் வேலைத்திட்டம் தொடரப்படும். இனவாதம்- இராணுவவாதம் என்பனவற்றை முன்னெடுக்கும் சர்வாதிகார ராஜபக்ஷ அரசை மேலும் மேலும் பலப்படுத்துவதற்கே இந்த அரசியல் கருத்தியல் சேவகம் செய்யும். இராணுவ வெற்றியின் பயன்களை வலுப்படுத்தும் இத்திட்டம் இச்சர்வாதிகார அரசைப் பலப்படுத்துவதாகவே முடியும். இனவாதமும் இனத்துவேஷமும் தான் இராணுவமயமாக்கலின் பின்னால் நின்று ஊக்குவிக்கும் சக்திகள். அரசின் கொள்கையில் பின்வாங்கலுக்கு இடமில்லை. ஜனநாயக வழியில் தீர்வுக்கான சாத்தியங்கள் இல்லாமல் போகின்றன. அரசாங்கத்தின் நிலைபேற்றுக்கு இந்த இனவாதக் கருத்தியல் தான் ஆதாரம் என்று இருக்கும் நிலையில் நாம் செய்யக் கூடியது என்ன?

ராஜபக்ஷ அரசின் இனவாத இராணுவ மயமாக்கல் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும். தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படையில் நாடு மேலும் பிளவுபடும். அந்நிய சக்திகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஊடுருவும். அவற்றின் நேரடித் தலையீடுகள் நிகழும். மக்களின் ஆணை மதிக்கப்படாமல் அவர்களது அபிலாசைகள் துச்சமாக மதிக்கப்பட்டு, அழிவுகள் தொடரும். அதனால் நாடு முழுமையிலுமாக மக்கள் 'எமது அடிமை விலங்குகளைத் தவிர நாம் இழப்பதற்கு எதுவும் இல்லை. வெல்வதற்கோர் உலகம் உள்ளது' என்ற உண்மையினை உணருவர். இலங்கையின் சுதந்திரமும், விடுதலையும் இழக்கப்படும் ஆபத்து எழுந்துள்ளது என்பதை மக்கள் உணருவார்கள். அப்போது அவர்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காகவும் தமது தேசத்தை மீட்டெடுப்பதற்காகவும், அந்நிய ஏகாதிபத்திய நவகாலனிய சக்திகளின் பிடியில் இருந்து மீள்வதற்காகவும் போராட்டத்தை முன்னெடுப்பர்.

> இனவாதமும் இனத்துவேசமும் தான் இராணுவமயமாக்கலின் பின்னால் நின்று ஊக்குவிக்கும் சக்திகள். அரசின் கொள்கையின் பின்வாங்கல்களுக்கு இடமில்லை. ஜனநாயக வழியில் தீர்வுக்கான சாத்தியங்கள் இல்லாமல் போகின்றன. அரசின் நிலைபேற்றுக்கு இந்த இனவாத கருத்தியல் தான் ஆதாரம் என்று இருக்கும் நிலையில் நாம் செய்யக்கூடியது என்ன?

ஒற்றையாட்சி அமைப்பு முறையும், அதிகாரப் பங்கீட்டினை மறுத்தலும் மூன்று பிரதான நோக்கு நிலைகளில் நின்று விவாதிக்கப்படுகிறது. முதலாவது வாதம் இந்நாட்டில் தமிழ், முஸ்லிம் தேசிய இனங்களும் மலையகத் தமிழ்த்தேசிய இனமும் இருப்பதையும் அவற்றின் அரசியல் அந்தஸ்தையும் நிராகரிப்பதாகவும் அமைகிறது. பல்வேறு தேசிய இனங்கள் இந்நாட்டில் இருப்பதை நிராகரிப்பதன் மூலம் அவற்றிற்கு அரசியல் அதிகாரத்தைப்பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்ற நியாயத்தை இவ்வாதம் மறுக்கிறது. சிங்கள - பௌத்த தேசிய இனம் ஒன்றே இந்நாட்டில் வரலாற்று ரீதியாக தனித்துவம் உடைய தேசிய இனமாக உருவாகியுள்ளது. வேறு எந்தவொரு குழுமத்திற்கும் உரிமையில்லாத தேசிய இனம் என்ற அந்தஸ்தும் தேசிய அரசும் சிங்கள இனத்திற்கே உண்டு என்றும் இந்த வாதம் வலியுறுத்துகிறது. ஏனைய பிற இனக்குழுமங்கள் அந்நியர்கள், இந்நாட்டிற்குள் சட்டவிரோதமாக வந்தவர்கள் தங்கள் கருணையிலும் கடாட்சத்திலும் தங்கியிருக்க வேண்டியவர்கள் என்ற கருத்தை இவ்விவாதம் முன்வைக்கிறது. சிங்கள இனம் மேன்மைமிக்க இனம், பிறரை ஆளும் தகுதியுள்ள இனம், இந்த நாட்டை ஆளும் உரிமையை அது வரலாற்றுப் பாரம்பரியமாகப் பெற்றுள்ளது என்றும் இவ்வாதம் கூறுகிறது. இது வரலாற்று உண்மைகளுக்கு மாறானது. இக்கருத்து நெடுங்காலம் நிலைத்திருக்க முடியாதென்பதை வரலாறு நிரூபிக்கும்.

இரண்டாவது வாதம் என்னவென்றால், அதிகாரப் பகிர்வை சிறியளவில் கொடுத்தாலும் அது தனிநாடாகப் பிரிந்து செல்வதில் போய் முடியும். உண்மை இதற்கு மாறானது. மத்தியப்படுத்தப்பட்ட, மேலாதிக்கமுடைய இனவாத, ஒற்றையாட்சி அரசு முறையும், அதன் முதலாளித்துவ இயல்பும்தான் பிரிவினைவாத அரசியலைத் தூண்டிக்கொண்டே இருக்கும். மூன்றாவது வாதம் என்னவெனில், பிரிவினைவாதிகள் தேசிய இறைமைக்கு ஆபத்தானவர்கள் என்பதாகும். தரகு முதலாளித்துவ அரசு தான் மேலாண்மை அரசியலுக்குக் காரணமாகி இறைமைக்கு ஆபத்தை உண்டாக்குகிறது. தரகு முதலாளித்துவ அரசு இலங்கையை ஏகாதிபத்திய, பிராந்திய வல்லரசுகளின் வேட்டைக்களமாக்கி, இந்நாடுகளின்

> ஒடுக்கப்பட்ட சிங்கள மக்கள் தம்மை ஒடுக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த போதெல்லாம் அவர்களின் உண்மையான அபிலாஷைகள் திசை திருப்பப்பட்டு போராட்டங்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. ஆட்சியாளர்கள் நவபாசிச இனவாத கருத்துகளைப்பரப்பி இலங்கையின் பிற தேசிய இனங்களுக்கெதிராக சிங்கள மக்களை ஏவி விடுகின்றனர்

போட்டி, ஊடுருவல் அவற்றின் தில்லுமுல்லுகள் இடம்பெறும் இடமாக மாற்றிவிட்டுள்ளது. எமது தாய்நாட்டைக் கூறுபோட்டு ஏகாதிபத்திய அரசுகளுக்கும், பிராந்திய வல்லரசுகளுக்கும் அடகு வைத்து சர்வதேச கடன் வழங்கும் முகவர்களின் பிடியில் என்றென்றைக்கும் மீளமுடியாத படி தவிப்பதற்கு இந்த தரகு முதலாளித்துவ அரசு வழி செய்துள்ளது. அரசு இத்தகைய சுயநல சதிகார எண்ணத்தோடு செயற்படுகிறது. இச்சூழ்நிலையில் அது சுயநிர்ணய உரிமையினை ஏற்பதோ அதன் அடிப்படையிலான ஜனநாயகத் தீர்வைக் கொண்டு வருவதோ சாத்தியமில்லை.

சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை நிராகரிப்பதும், அந்த இயக்கத்தைப் பலாத்கார வழிகளில் ஒடுக்கி மௌனிக்கச் செய்வதுமே அரசு முன்னால் உள்ள ஒரேயொரு தெரிவாகும். அத்தகைய கோரிக்கையை ஆதரிப்போரை இவ்வரசு துரோகிகள் என்று பெயர் சூட்டும். பொதுபல சேனா, சிங்கள ராவய, ராவணபலய போன்ற அமைப்புகள் அரசாங்கத்தின் பல்வேறு அதிகார மையங்களின் துணையுடன் இக்கைங்கரியத்தையே செய்து வருகின்றன. சிறுபான்மை மதப்பிரிவினர் மீது வன்முறையையும் பயங்கரவாதத் தாக்குதல்களையும் இவ்வமைப்புகள் தொடுக்கின்றன. நாட்டில் அராஜகம் தாண்டவமாடுகிறது. குற்றம் செய்வோரைத் தண்டிக்காமல் அரசு பார்த்துக்கொண்டிருக்கிறது. முழு இலங்கையிலுமாக தனது சர்வாதிகார ஆட்சியை நிலை நிறுத்துவதையே நோக்கமாகக் கொண்டு ராஜபக்ஷ அரசு செயற்பட்டு வருகிறது. அது சிங்கள - பௌத்தம் என்ற பதாகையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நாட்டுப்பற்று பற்றிக் கூறுகிறது. இச்சூழலில் ஒட்டுண்ணி வாழ்க்கை நடத்தும் முதலாளிய கூட்டாளிகளும், போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் பாதாள உலகக் கும்பலும் முதலாளித்துவ அரசுடன் ஒட்டி உறவாடுகின்றன. இவற்றின் பிடியில் சிக்கியுள்ளதால் நாட்டில் சாதாரண மக்களின் மீதான சுரண்டல் தடையின்றி நடைபெறுகிறது. இந்த அரசியல் நிகழ்ச்சி நிரல்தான் நாட்டை இராணுவ மயமாக்கலுக்கும் அரசியல், சமூக வாழ்வில் இராணுவக்கட்டுப்பாட்டை இறுக்குவதற்கும் காரணமாக உள்ளது. பல்கலைக்கழக மாணவர்களுக்குக்கட்டாய இராணுவப்பயிற்சி வழங்குவதும், பாடசாலை அதிபர்களுக்கு இராணுவப் பதவிப் பெயர்களைச் சூட்டுவதும் இராணுவ மயமாக்கல் செயல்திட்டப்படி தான் மேற்கொள்ளப்படுகிறது. (2013 வரவு - செலவுத் திட்டம் 250,000 படைவீரர்களைக் கொண்ட இராணுவத்தின் பராமரிப்புக்காக 290 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது). இந்த நிகழ்ச்சி நிரலில் சில விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. தமிழினத்தை போரில் வென்ற பெருமையை மீண்டும் மீண்டும் போற்றிக் கொண்டாடுதல், பகட்டாரவாரத்துடன் கூடிய இரத்தப்பலியிடுதலை ஞாபகப்படுத்தும் சடங்குகளை நடத்துதல் என்ற இரண்டும் இவற்றுள் முக்கியமானவை. இவற்றின் விளைவுகள் யாவை? சிங்கள வெகுஜனங்களின் உணர்வில் பிற்போக்கு இனவாதம் என்ற நஞ்சு ஊட்டப்படுகிறது. இராணுவப் படைப்பிரிவுகளுக்கும் இந்த நஞ்சு ஊட்டப்படுகிறது. இந்த அபினை ஊட்டுவதன் மூலம் தான் சிங்கள வெகுஜனங்களை மயக்கத்தில் ஆழ்த்தி வைக்கலாம்.

அவமதிப்பு, துஸ்பிரயோகம் அத்துமீறல் என்பன மக்கள் எதிர்நோக்கும் யதார்த்தம். இவற்றை எம்கர்ம வினை என்று மௌனமாக சகித்துக் கொள்ளும் அவர்களுக்கு இனவாதம் என்ற போதைப் பொருள் யாவற்றையும் மறந்து அரசுக்கு விசுவாசமாக இருக்க உதவுகிறது. பொது நலவரசு மகாநாடு நடைபெறும் போது இரத்தவெறிபிடித்த பாசிச சக்திகளுக்கு ஓய்வுகொடுக்கப்படலாம். இராணுவவாத தீயை தண்ணீர் ஊற்றித் தணிக்கலாம். அமைதி திரும்பி விட்டது. சாதாரண நிலை வந்துவிட்டது என்ற தோற்றத்தைக் கூட உண்டாக்கலாம். ஆனால் இவை தற்காலிகமானவை. சந்தர்ப்பத்திற்கேற்ப கையாளும் உபாயங்கள். இலங்கையின் நவகாலனிய தரகு முதலாளித்துவ அரசுக்கு இறுதியாக வேறு வழி ஏதேனும் உண்டா? லெனின் கூறியது போல் அப்பட்டமான பயங்கரவாத பூர்ஷுவா சர்வாதிகாரம் என்பதைத் தவிர அதன் நிலைபேற்றுக்கு வேறு உபாயம் எதுவும் இல்லை என்பது தெளிவு.

ஒடுக்கப்பட்ட சிங்கள மக்கள் தம்மை ஒடுக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த போதெல்லாம் அவர்களின் உண்மையான அபிலாசைகள் திசைதிருப்பப்பட்டுப் போராட்டங்கள் மழுங்கடிக்கப்பட்டன. ஆட்சியாளர்கள் நவபாசிச இனவாதக் கருத்துகளைப் பரப்பி இலங்கையின் பிற தேசிய இனங்க

ளுக்கு எதிராகச் சிங்கள மக்களை திசை திருப்பி ஏவிவிட்டனர். ஒடுக்கு முறை இன்னொரு பக்கமாகத் திருப் பிவிடப்படுகிறது. தரகு முதலாளித் துவ அரசும், ஆளும் வர்க்கமும் ஏகாதிபத்தியத்தின் கொள்கையிலும் சுரண்டும் இலாபத்திலும் ஒருபங் கைப் பெற்றுக்கொண்டிருக்கின்றன. மக்களைப் பிளவுபடுத்தி புரட்சிப் பாதையில் செல்வதைத் தடுப்பதே அவர்கள் கையாளும் தந்திரம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வர லாற்று புகழ்மிக்க வெற்றியும் அவர் களுக்கு மக்கள் அளித்த ஆணையும் ஒரு புறத்தே உள்ளன. மறுபுறத்தே இலங்கையின் மக்கள் சுதந்திரம், ஜன நாயகம், விடுதலை என்பனவற்றை அடைவதற்கான அரசியல் உறுதி யைக் கொண்டிருக்கின்றார்கள். இவை இரண்டும் வரலாற்றின் இறு திப் பரிசோதனைக்காகக் காத்திருக் கின்றன. நாட்டில் உள்ள எல்லா முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக் திகளும் ஒன்றுபட வேண்டிய தரு ணம் இது. இந்த நாட்டை நேசிப்பவர் கள், அதன் விடுதலையை அவாவி நிற்பவர்கள். யாவரும் ஒன்றிணைந்து நவகாலனித்துவ அரசை தூக்கியெ றிந்துவிட்டு மக்கள் ஜனநாயக அரசை ஸ்தாபிக்க வேண்டும். இல ங்கை மக்கள் குடியரசு என அது மலர வும் வேண்டும்.

சுரேந்திர அஜித் ரூபசிங்க இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (மாவோயிஸ்ட்) செயலாளரும், ஏகா திபத்தியத்திற்கு எதிரான மக்கள் கூட் டணியின் தலைவரும் ஆவார். ■




(40ஆம் பக்கத்தொடர்ச்சி...)

காலத்திற்குக் காலம் வரும் தேர் தல்களில் வாக்களிப்பதுடன், பெரு மளவு வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்,எமது ஜனநாயக முறைமை யானது எம்முடன் கலந்துரையாடுவ தில்லை. அபூர்வமாகவே செவிமடுக் கிறது அல்லது அபூர்வமாகவே மக்களுக்கு பதிற்செயற்பாடு காட்டுகி றது. சுயாதீனமான பத்திரிகைத்துறை, ஊடகம் மற்றும், மிக அண்மைக் காலத்தில் அமைதியான எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்குக்கூட உலகிலேயே மிகவும் அபாயகரமான நாடுகளில் ஒன்றாக, உலகளாவிய ரீதியில் இலங்கை வரிசைப்படுத்தப்ப டுகிறது. எமது அரசாங்கத்தின் பிரதி நிதிகள் கூட வெறுமனே ஓரளவில் பிரதிநிதிகள் மாத்திரமே. அரசாங்க உறுப்பினர்களால் மாத்திரம் உரு வாக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுக்களை நாம் கொண்டுள்ளதுடன், அரசியலமைப்பு மறுசீரமைப்புகளா வன அரைநாளுக்குள்ளே அவசர சட்டமூலங்களாக பாராளுமன் றத்திலே நிறைவேற்றப்படுகின்றன. இது, அநேகமான எமது தெரிவு செய் யப்பட்ட பிரதிநிதிகளுக்குக் கூட தேசிய பிரச்சினைகள் தொடர்பாக செவிமடுக்கப்படுவதற்கான சந்தர்ப் பத்தை மறுக்கிறது. அவ்வாறிருப்பின் சிவில் சமூகத்திற்குக் கிடைக்கும் சந் தர்ப்பம் என்ன? அத்துடன் விசேட மாக வலுவூட்டப்படாத கிராமிய சனசமூகங்களின் சிறுபான்மை இனங் களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பம் என் ன? இதன் பிரகாரம் பதிற்செயற்பாடு காட்டாததும் பிரதிநிதித்துவப்படுத் தாததுமான அரசாங்கமானது பெண் களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் மூன்றாவது தடையாக உள்ளது.

இதன் பிரகாரம் இலங்கையின் மீண்டெழல் மற்றும் மீள்நிர்மாணச் செயன்முறையில் பெண்களின் தெளி வான அவசரப் பிரச்சினைகளை தீர்த் துவைப்பதானது, ஜனநாயக ஆதாரப் பிரச்சினைகள், இனசிறுபான்மை அர சியல் பங்குபற்றுகைகள், அரசாங்கத் தில் பெண்களின் பிரதிநிதித்துவம் போன்ற பல ஜனநாயக ஆதரவு பிரச் சினைகளைத் தீர்த்து வைப்பதை வேண்டிநிற்கிறது. எமது முறைமை யில் இடம்பெற வேண்டிய தேவைப் படும் மறுசீரமைப்புகளை உறுதிப்ப டுத்துவதற்கு சிவில் சமூகம்,சமயத் தலைவர்கள் மற்றும் எமது சர்வதேச நண்பர்கள்,எமது அரசாங்கத்துடனும் அரச நிறுவனங்களுடனும் திடமாக ஈடுபடுவதன் ஊடாக, இப்பிரச்சினை களை பூர்த்தி செய்துகொள்ள முடி யும். இவ்வாறான மறுசீரமைப்புகள் இரவோடு இரவாக இடம்பெறாது. தொடர்ச்சியான பிடிவாதமான உறுதி யினாலேயே இடம்பெறும். அநேக மான சனசமூகங்கள் விசேடமாக ஜன நாயக வேர்கள் பாரம்பரியங்கள் மற்றும் நிறுவனங்கள் சிறந்த பாதையை நோக்கி நகரும் என வர லாறு நமக்குக் காட்டுகிறது. வடக்கு, கிழக்கில் யுத்தத்திற்கு பிந்திய, மோத லால் பாதிக்கப்பட்ட பெண்களின் விரைவான மீள்நிலை திரும்புகைக் காக நாம் அவ்வாறு நடக்க நம்பிக்கை வைப்போமாக! ■

சர்வதேச அரசியல்



இயன் புருமா



வெளியுறவுக்கொள்கையில் அமெரிக்கா வீறாப்பான கொடுமைக்காரனாக அல்லது தடுமாறுகின்ற கோழையாகக்காணப்படுகிறது. கறை படிந்த அமெரிக்க ஜனாதிபதியுடன் ஒப்பிடும் போது சிதைவடைகின்ற இரண்டாம் தர வல்லரசான ரஷ்யாவின் ஏதேச்சதிகாரத்தலைவர் புட்டின் உலகில் செல்வாக்குமிக்க ஒருவராக தன்னைக் காண்பிக்கக்கூடியதாக இருக்கிறது

# கென்னடியின் கொலையிலிருந்து அமெரிக்கா படித்த பாடம்




ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இதே மாதம் தான் டெக்சாஸ் மாநிலத்தின் டல்லாஸ் நகரில் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ். கென்னடி சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த அவல நிகழ்வில் இருந்து பாடத்தைப் படித்திருப்பதாக பல அமெரிக்கர்கள் நம்புகிறார்கள். உண்மையில் இதில் அர்த்தமேதுமில்லை. சகல நாடுகளினதும் சரித்திரத்தைப் போன்றே அமெரிக்காவின் சரித்திரமும் இரத்தத்தில் தோய்ந்திருக்கிறது.

ஆனால், இன்றைய பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் கென்னடியின் பதவிக்காலம் அமெரிக்காவின் கீர்த்தியின் ஒரு உயர்ந்த நிலை போன்றே தோன்றுகிறது. துப்பாக்கிக் குண்டுக்கு பலியாவதற்கு ஐந்து மாதங்களுக்கும் சற்று குறைவான காலம் முன்னதாக (கெடுபிடியுத்தத்தின் எல்லைப்பகுதியாக விளங்கிய) பேர்லினில் பெரும் எண்ணிக்கையான ஜேர்மனியர்கள் மத்தியில் உரையாற்றிய போது கென்னடி 'நான் ஒரு பேர்லின்வாசி' (Ich bin ein Berliner) என்று கூறியதன் மூலம் அவர்களை எழுச்சிகொள்ளச் செய்திருந்தார்.

கோடிக்கணக்கான மக்களைப் பொறுத்தவரை கென்னடியின் அமெரிக்கா சுதந்திரத்தையும் நம்பிக்கையையும் பிரதிநிதித்துவப்படுத்தி நின்றது. தான் பிரதிநிதித்துவப்படுத்திய நாட்டைப் போன்றே கென்னடியும் அவரது மனைவி ஜாக்குலினும் மிகவும் இளமையாகவும் கவர்ச்சியா

கவும் தோன்றியதுடன், இன்முகத்து டன் முழு ஊக்கம் கொண்டவர்களாக வும் விளங்கினர். ஒரு முன்மாதிரி யான நாடாக மதித்து மெச்சத்தக்க தாக இருந்த அமெரிக்கா கெடுதியே நிறைந்த உலகில் நன்மைக்கான சக்தி யாக நோக்கப்பட்டது.

இந்தத் தோற்றம் கென்னடியினதும் அவரது சகோதரர் பொபி (ரொபர்ட் கென்னடி) மற்றும் மார்ட்டின் லூதர் கிங்கினதும் கொலைகளினாலும் கென்னடியால் வியட்நாமில் துவக்கி வைக்கப்பட்ட போரினாலும் படு மோசமாக உருக்குலைந்து போனது. கென்னடி தனது பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்திருப்பாரேயானால், அவரால் தூண்டிவிடப்பட்ட எதிர் பார்ப்புகளுக்கு ஏற்ப அவரது மரபு நிச்சயமாக அமைந்திருக்காது.

முதலாவது கறுப்பின ஜனாதி பதியை அமெரிக்கர்கள் தெரிவு செய் தபோது, 1960களின் ஆரம்பத்தில் அனுபவித்த கீர்த்தியில் சிறிதளவா வதை அமெரிக்கா மீண்டும் பெற்றுக் கொண்டதைப் போன்று சொற்ப கால த்துக்குத்தோன்றியது. கென்னடியைப் போன்றே பராக் ஒபாமாவும் பேர்லி னில் குறைந்தது 2 இலட்சம் மக்கள் மத்தியில் (ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னதாகவே) உரையாற்றினார். கென்னடியைப் போன்றே ஒபாமாவும் இளையவராக இருந்ததுடன், அமெரிக்கர்களால் நம்பிக்கையுடன் நோக்கப்பட்டார்.

ஆரம்பத்தில் அளிக்கப்பட்ட உறுதி மொழி ஒருபோதுமே நிறைவேற்றப் படவில்லை. உண்மையில் 2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்கா வின் கீர்த்தி பெரிதும் பாதிக்கப்பட் டது. அமெரிக்காவின் தேசிய அரசி யல் குறுகிய கட்சி மனப்பான்மையி னால் நஞ்சூட்டப்பட்டுவிட்டது. அத னால் ஜனநாயகமே சேதப்படுத்தப் பட்டது போல் தோன்றுகிறது. ஆரம் பத்தில் இருந்தே குடியரசுக்கட்சிக் காரர்கள் ஒபாமாவை வெறுத்தார்கள். பொருளாதார ஏற்றத்தாழ்வு முன் னெப்போதையும்விட ஆழமானதாக இருக்கிறது. நெடுஞ்சாலைகள், பாலங்கள், வைத்தியசாலைகள் மற் றும் பாடசாலைகள் எல்லாமே தரங் குறைந்து போயிருக்கின்றன. சீனா வில் உள்ள பிரதான விமான நிலை யங்களுடன் ஒப்பிடும்போது,நியூ யோர்க் நகரைச் சுற்றியுள்ள விமான நிலையங்கள் பழம்பாணியிலான வையாக இப்போது காணப்படுகின் றன.

வெளியுறவுக் கொள்கையில் அமெ ரிக்கா வீறாப்பான கொடுமைக்கார னாக அல்லது தடுமாறுகின்ற ஒரு கோழையாகக் காணப்படுகிறது. ஜேர் மன் அதிபர் அஞ்சலா மெர்கெல் போன்ற அமெரிக்காவின் நெருங்கிய நேச அணிகள் கடுமையான ஆத்திரத் தில் இருக்கின்றனர். இதற்குக் கார ணம் அமெரிக்கா அவர்களை உளவு பார்த்ததேயாகும். ஏனைய நேச அணிகள், குறிப்பாக இஸ்ரேலும் சவூதி அரேபியாவும் அமெரிக்கா வின் பலவீனத்தைக் கண்டு கடும் வெறுப்படைந்திருக்கின்றன. கறைப டிந்த அமெரிக்க ஜனாதிபதியுடன் ஒப்பிடும்போது சிதைவடைகின்ற ஒரு இரண்டாம் தர வல்லரசான ரஷ் யாவின் ஏதேச்சாதி கார தலைவனான விளாடிமிர் புட்டின் உலகில் செல் வாக்குமிக்க ஒருவராக தன்னைக் காண்பிக்கக் கூடியதாக இருக்கிறது.

இந்தத் துயரமான நிலைக்கு ஒபா மாவை அல்லது விளைவைப் பற்றிக் கவலைப்படாமற் செயற்படுகின்ற குடியரசுக் கட்சிக்காரர்களை குற் றஞ்சாட்டுவது சுலபம். ஆனால், அது உலகில் அமெரிக்காவின் பாத்திரத் தைப் பற்றிய மிகவும் முக்கியமான அம்சத்தை நழுவவிடுவதாக அமை யும். கென்னடியை மிகவும் செல் வாக்கு மிக்கவராக்கிய அதே இலட்சி யவாதம் அமெரிக்காவின் சர்வதேச கீர்த்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

கென்னடி உயிரோடிருந்திருந்த தால் வியட்நாம் போர் விரிவடைவ தைத் தடுத்திருப்பார் என்று இன்ன மும் கூட நம்புவதற்கு அவரை மிகவும் நேசிப்பவர்களில் சிலர் விரும்புகிறார்கள். ஆனால், அவ் வாறு அவர் தடுத்திருப்பார் என்ப தற்கு எந்தவிதத்திலும் சான்று கிடை யாது. கெடுபிடி யுத்த காலகட்டத்தில்



கென்னடி உயிரோடு இருந்திருந்தால் வியட்நாம் போர் விரிவடைவதைத் தடுத்திருப்பார் என்று இன்னமும் கூட நம்புவதற்கு அவரை நேசிப்பவர்களில் சிலர் விரும்புகிறார்கள். ஆனால், அவ்வாறு அவர் தடுத்திருப்பார் என்பதற்கு எந்தவிதத்திலும் சான்று கிடையாது. கெடுபிடி யுத்த காலத்தில் அமெரிக்க தலைமையிலான முகாமின் நிலைப்பாடுகளை நியாயப்படுத்தி மிகவும் உறுதியாகச் செயற்பட்டவர் கென்னடி

அமெரிக்கா தலைமையிலான முகாமின் நிலைப்பாடுகளை நியாயப்படுத்தி மிகவும் உறுதியாகச் செயற்பட்டவர் கென்னடி. அமெரிக்க இலட்சிய வாதத்திலிருந்து வேர்விட்டது தான் அவரின் கம்யூனிச விரோத உணர்வு.

உலகம் பூராகவும் சுதந்திரத்திற்காகப் போராடுவதென்று அமெரிக்கா தானாகவே பிரகடனம் செய்து கொண்ட இலட்சியம் மீதான ஆர்வத்தை வியட்நாமில் நிகழ்ந்த அனர்த்தம் வடுப்படுத்திவிட்டது. அந்தப்பாதிப்பு நிலையில் இருந்து மீள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட அடுத்த முயற்சிகள் மேலும் அனர்த்தங்களையே கொண்டு வந்தன. ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் போருக்குப் போவதற்கு ஜோர்ஜ் டபிள் யூ.புஷ் மேற்கொண்ட தீர்மானத்திற்கான காரணங்கள் சிக்கலானவை யாகும். ஆனால், அந்தப் போர்களை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட சுலோகங்கள் கென்னடி யுகத்தைச் சேர்ந்தவை என்பதிற் சந்தேகமில்லை. ஜனநாயகப் பரப்புதல், அமெரிக்கப் பண்புவிழுமியங்களுக்கு உலகளாவிய ஒரு அதிகாரத்தைப் பெறுதல், விடுதலை ஆகியவையே அந்தச் சுலோகங்களாகும்.

2008ஆம் ஆண்டு அமெரிக்கர்கள் ஒபாமாவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ததற்கு ஒரு காரணம் அமெரிக்க இலட்சியவாதத்தின் சொற்சிலம்பங்கள் மீண்டும் ஒரு தடவை இலட்சக்கணக்கானவர்களின் மரணங்களுக்கும் இடம்பெயர்வுக்கும் வழிவகுத்ததே யாகும். அமெரிக்க அரசியல்வாதிகள் இப்போது 'சுதந்திரம், விடுதலை' பற்றி பேசும்போது மக்கள் மனதில் வருவதெல்லாம் குண்டு வீச்சுகளும் சித்திரவதை முகாம்களும் ஆளில்லா விமானத் தாக்குதல்களுமேயாகும்.

ஒபாமாவின் அமெரிக்காவின் பிரச்சினைகள் அவரின் தலைமைத்துவத்தின் முரண்பாடான தன்மையை அடிப்படையாகக் கொண்டவை யாகும். படைபலத்தினால் உலகை விடுதலை செய்வதென்ற அமெரிக்கக் குறிக்கோளில் இருந்து ஒபாமா தூரவிலகிக் கொண்டார். ஈராக்கில் அவர் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். ஆப்கானிஸ்தான் போரையும் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரவிருக்கிறார். சிரியாவில் அல்லது ஈரானில் போரைத் தொடங்க வேண்டுமென்ற ஆர்வத்தை அவர் தடுத்திருக்கிறார். உலகின் பிரச்சினைகளுக்கெல்லாம் அமெரிக்காவே தீர்வைக் காண வேண்டுமென்று நினைக்கிறவர்களின் கண்களில் ஒபாமா பலவீனமானவராகவும் உறுதியான தீர்மானங்களை எடுக்க முடியாதவராகவுமே தென்படுகிறார்.

அதேவேளை, குவாண்டனாமோ குடாவில் உள்ள விசித்திரமான அமெரிக்கச் சிறையை மூடுவதற்கு அவர் தவறிவிட்டார். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மேற்கொள்ளப்படுகின்ற உளவு வேலைகளை அம்பலப்படுத்துபவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஆளில்லா விமானத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் அதிகரித்திருக்கின்றன. நேரடியான போர்கள் குறைவடைந்திருக்கின்ற போதிலும் மறைமுகமான போர்கள் தீவிரமடைந்து பரவுகின்றன. அமெரிக்காவின் இமேஜ் நாளுக்கு நாள் தாழ்ந்து கொண்டே போகிறது.

பிரதான பிரச்சினை ஒபாமா அல்ல. தங்களுக்கு உலகில் பிரத்தியேகமான பாத்திரம் இருக்கிறதென்று அமெரிக்கர்களுக்கு இருக்கிற இறுமாப்புத்தான் பிரச்சினை. அநாவசியமான போர்களை ஊக்குவிப்பதற்கு இந்த இறுமாப்புடனான நம்பிக்கை பெருவாரியான தடவைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. அமெரிக்கர்கள் தங்களைப் பற்றி பெரிதாக எதிர்பார்ப்பதற்கு அவர்களை அமெரிக்க இலட்சியவாதம் மாத்திரம் வழிநடத்தவில்லை. அமெரிக்காவிடமிருந்து மிகவும் கூடுதலாக உலகம் அடிக்கடி எதிர்பார்ப்பதும் இதற்குக் காரணம். ஆனால், அத்தகைய எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தில் மாத்திரமே முடிவடையக் கூடும். ■

***(இயன் புரூமா நியூயோர்க்கின் பார்ட் கல்லூரியில் ஜனநாயகம், மனித உரிமைகள், இதழியல்துறை பேராசிரியராகப் பணிபுரிகிறார்).***

---

***(61ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

திறனாய்வாளர் எழுதுகிறார். வேறு வார்த்தையில் குறிப்பிட்டால் எதைப் பற்றி எழுதுகின்றோம்? என்ன எழுதுகின்றோம்? ஏன் எழுதுகின்றோம்? யாருக்காக எழுதுகின்றோம்? முதலான நினைப்புகள் திறனாய்வாளரை ஆற்றுப்படுத்தும்.

பொதுவாக திறனாய்வாளருக்கு கலை இலக்கியத்தை ரசிக்கக்கூடிய - அனுபவிக்கக்கூடிய திறன் மற்றும் அழகியல் உணர்வு அடிப்படையான பண்புகளாக அமைய வேண்டும். இவற்றை மேலும் வளர்த்துக் கொள்வதற்கான விரிவான தேடல், ஆழமான வாசிப்பு அவசியமாகின்றது. தனக்கு சரியெனப் படுவதை வெளிப்படுத்துவதில் துணிச்சல், எதிர்வினை ஆற்றுவதில் பொறுப்பும் நிதானமும், உள்ளார்ந்த அறிவின் கூர்மை, எதனையும் தொகுத்தும் பகுத்தும் பொதுமைப்படுத்தியும் வேறுபடுத்தியும் பார்க்கிற பக்குவம் முதலான பண்புகள் திறனாய்வாளருக்கு வேண்டும். இந்தப் பண்புகளைக் கொண்டு இயங்குபவர்கள் நல்லதொரு திறனாய்வாளர் என்று கூறலாம்.

இன்று திறனாய்வாளராக தொழிற்படுவோர் அல்லது அவ்வாறான அங்கீகாரத்தை விரும்புவோர் மேற்குறித்த பண்புகள் கொண்டு இயங்குபவர்களா? என்பதை தம்மளவில் சுய பரிசோதனைக்கு உட்படுத்துவது சமூகத்தின் அவசியத் தேவையாகிறது. அப்போதுதான் நாம் புதிய கருத்துகளைத் தருவதாக, புதிய பாதைகளைக் காட்டுவதாக, புதிய மதிப்பீடுகளை உருவாக்குவதாக, நல்ல வழிகாட்டியாக, நல்ல பொறுப்புள்ள மனிதராக, தோழமையுள்ள தோழனாக முடியும். இங்கு நாம் எங்கே நிற்கிறோம்? நமது திறனய்வுக்களம் எப்படி உள்ளது? இவை குறித்து சிந்திப்பதும் விவாதிப்பதும் நமக்கு உடனடித் தேவையாகிறது. ■

சர்வதேச அரசியல்



# பாகிஸ்தானில் அமெரிக்காவின் ஆளில்லா விமானத்தாக்குதல்கள்

## பலியாகும் அப்பாவிக் குடிமக்கள்

அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தினால் (சி.ஐ.ஏ) பாகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆளில்லா விமானத் (ட்ரோன்) தாக்குதல்களில் குடிமக்கள் கொல்லப்படுவதாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்த விசாரணை நடத்துமாறு லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபை வாஷிங்டனைக் கேட்டிருக்கிறது. அண்மையில் இது தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்த மன்னிப்புச் சபை இத்தகைய தாக்குதல்களில் பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான புதிய விபரங்களை வழங்கியிருக்கிறது. பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்து தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த வேளை இந்த விமானத் தாக்குதலுக்கிலக்கான 68 வயதான மூதாட்டியொருவரும் பலியானவர்களில் அடங்குவார்.




மனாமா பீபி என்ற இந்த மூதாட்டி வடக்குவாரிசிஸ்தான் பழங்குடியினர் பகுதியில் குடும்பத்தவருக்குச் சொந்தமான தோட்டத்தில் 2012 அக்டோபர் 22 ஆம் திகதி மரக்கறிவகைகளைச் சேகரித்துக் கொண்டிருந்த போது ஆளில்லா விமானத்திலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையின் தாக்குதலில் கொல்லப்பட்டதாகப் பேரப்பிள்ளைகள் மன்னிப்புச் சபையிடம் கூறியிருக்கிறார்கள். ஆப்கான் எல்லைக்கு அண்மையாக இருக்கும் இந்தப் பழங்குடியினர் பகுதி தீவிரவாதிகளின் முக்கியமான புகலரணாக விளங்குகிறது. பிடியின் மூன்று பேரப்பிள்ளைகளும் அருகாமையில் இருந்த வேறுபலரும் தாக்குதலில் காயமடைந்ததாக



பாதிக்கப்பட்டவர்கள் மன்னிப்புச் சபையிடம் கூறினார்கள்.

எல்லைகளைக் கடந்து ஆப்கானிஸ்தானிற்குள் வந்து தாக்குதல்களை நடத்தும் கிளர்ச்சிக்குழுக்களுக்கு எதிரான முக்கியமான ஆயுதமாக ஆளில்லா விமானத்தாக்குதல்களை அமெரிக்கா கருதுகிறது. ஆனால், இந்த விமானத்தாக்குதல்களில் கிளர்ச்சியாளர்களை விடவும் பெருவாரியான குடிமக்களே கொல்லப்படுகிறார்கள் என்பதே பாகிஸ்தானில் பரவலான நம்பிக்கையாக இருக்கிறது. இதன் விளைவாக ஏற்படுகின்ற மனக்கசப்பும் சீற்றமும் அல்-கயெடா உட்பட நாட்டில் நிலைகொண்டு இயங்குகின்ற தீவிரவாதிகளுக்கு எதிரான முயற்சிகளில் ஒருங்கிணைந்து செயற்படுவதில் அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இருக்கக்கூடிய ஆற்றலை சீர்குலைக்கிறது.

சர்வதேச மன்னிப்புச் சபை அதன் அறிக்கைக்கு ‘அடுத்தது நானாக இருக்குமோ? பாகிஸ்தானில் அமெரிக்கா ஆளில்லா விமானத் தாக்குதல்கள்’ (Will I be next? US drone Strikes in Pakistan) என்று தலைப்பிடப்பட்டிருக்கிறது. 2012 ஜூலை 6 ஆம் திகதி வடக்கு வாரிசிஸ்தானில் இடம்பெற்ற மிகவும் மோசமான சம்பவமொன்று குறித்து அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது. வேலை செய்து விட்டு உணவு அருந்துவதற்காக மாலை வேளையில் பல ஆண்கள் கூடியிருந்த ஒரு கூடாரம் மீது சரமாரியாக ஏவுகணைகள் வந்து தாக்கின. காயமடைந்தவர்களுக்கு உதவிக்கொண்டிருந்தவர்கள் மீது அடுத்து மீண்டும் ஏவுகணைகள் வந்து வீழ்ந்தன என்று நேரிற் கண்டவர்கள் கூறியதாக மன்னிப்புச் சபை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. அத்தாக்குதல்களில் தீவிரவாதக் குழுக்களுடன் எந்தவித தொடர்புமேயில்லாத 18 ஆண் தொழிலாளர்கள் மாண்டார்கள் என்று நேரில் கண்டவர்களும் உறவினர்களும் கூறியிருந்தார்கள். பலியானவர்களை தீவிரவாத சந்தேக நபர்கள் என்று அந்த நேரத்தில் பாகிஸ்தான் புலனாய்வு அதிகாரிகள் அடையாளப்படுத்தினார்கள்.

**ஆளில்லா விமானத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களில் தீவிரவாதக் குழுக்களுடன் எந்தவித தொடர்பும் இல்லாத பலரை சர்வதேச மன்னிப்புச் சபை நேர்முகம் கண்டிருக்கிறது. இவர்களில் எவருமே தங்களுக்கு இழப்பீடோ அல்லது பாகிஸ்தான் அரசாங்கத்திடமிருந்து போதிய உதவியோ கிடைத்ததாகக் கூறவில்லை**

அந்தத் தாக்குதல்கள் குறித்து கருத்துக் கூறுமாறு கேட்டபோது அதற்கு அமெரிக்கா பதிலளிக்கவில்லை. குடிமக்கள் எவரும் கொல்லப்படமாட்டார் அல்லது காயமடையமாட்டார் என்று பெரும்பாலும் உறுதிப்படுத்தாத பட்சத்தில் அமெரிக்கா ஆளில்லா விமானத்தாக்குதல்களை நடத்துவதில்லை என்று கடந்த மே மாதம் நிகழ்த்திய உரை ஒன்றில் ஜனாதிபதி பராக் ஒபாமா குறிப்பிட்டிருந்தார். குடிமக்கள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்வதற்கு வழியேதுமில்லாத அளவுக்கு ஆளில்லா விமானத் தாக்குதல் திட்டத்தை அமெரிக்கா மிகவும் இரகசியமாகவே வைத்திருக்கிறது என்று மன்னிப்புச் சபை கூறியிருக்கிறது. ஏற்கனவே இடம்பெற்றதாகக் கூறப்படும் மரணங்கள் குறித்து விசாரணை நடத்த அமெரிக்கா தவறிவிட்டது என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

பாகிஸ்தானில் கடந்த சுமார் பத்து வருடங்களாக இடம்பெற்று வந்திருக்கும் ஆளில்லா விமானத் தாக்குதல்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய குடிமக்கள் இழப்புகள் தொடர்பான எண்ணிக்கையை அறிந்துகொள்வதற்கு பல்வேறு அமைப்புகள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. அவற்றில் Long war Journal website, the New America Foundation, Bureau of Investigative Journalism என்ற அமைப்புகளும் அடங்கும். ஆளில்லா விமானத் தாக்குதல்களில் 2065க்கும் 3613க்கும் இடைப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக இந்த அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. இதில் 153க்கும் 926க்கும் இடைப்பட்டவர்கள் குடிமக்கள் என்று நம்பப்படுகிறது என்று மன்னிப்புச் சபையின் அறிக்கை கூறுகிறது. இத்தாக்குதல்களை சட்டபூர்வ

மானவை என்று அமெரிக்கா வலியுறுத்துகின்ற போதிலும், அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் தாக்குதல்களும் அவை போன்ற வேறு தாக்குதல்களும் நீதிவிசாரணைக்குப் புறம்பான மரணதண்டனைகள் அல்லது போர்க்குற்றங்களாக அமையக் கூடியவை என்றே மன்னிப்புச் சபை கருதுகின்றது.

'இக்கொலைகளில் எந்த நியாயப்பாட்டையும் நாம் காணவில்லை. பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கும் அதன் நேச அணிகளுக்கும் உண்மையான அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. சில சூழ்நிலைகளில் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் சட்டபூர்வமானவையாக இருக்கலாம். ஆனால், தொழிலாளர் குழுவொன்றோ அல்லது பேரப்பிள்ளைகளுடன் தோட்டத்தில் நின்ற ஒரு வயோதிபமாதோ அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலைத் தோற்றுவித்ததாக அல்லது வேறு எவருக்கும் அச்சுறுத்தலாக இருந்ததாக எவ்வாறு நாம் நம்புவது' என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் பாகிஸ்தான் ஆய்வாளர் முஸ்தபா கத்ரி கூறினார்.

அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள கொலைகளை விசாரணை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதன் மூலமாக சர்வதேச சட்டங்களின் கீழான அதன் கடப்பாடுகளை அமெரிக்கா பூர்த்தி செய்ய வேண்டுமென்று மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்திருக்கிறது.

பாகிஸ்தானில் அமெரிக்கா அதன் முதல் ஆளில்லா விமானத் தாக்குதலை 2004 ஆம் ஆண்டு நடத்தியது. அதற்குப் பிறகு 350க்கும் அதிகமான அத்தகைய தாக்குதல்களை அது மேற்கொண்டிருக்கிறது. இவற்றில் பெரும்பாலானவை வடக்கு வாரிசிஸ்தானிலேயே இடம்பெற்றிருக்கின்றன. பராக் ஒபாமா 2009ஆம் ஆண்டு பதவிக்கு வந்தபோது ஆளில்லா விமானத்தாக்குதல்களைக் கணிசமான அளவிற்கு தீவிரப்படுத்தியிருந்தார். அடுத்தவருடம் தாக்குதல்களின் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்தது. அதற்குப் பிறகு தாக்குதல்கள் அடிக்கடி நிகழும் நிலையில் படிப்படியான ஒரு தணிவைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்கு பிரதான காரணம் பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான பதற்றம் அதிகரித்தமையேயாகும். இவ்வருடம் இதுவரை சுமார் 24 தாக்குதல்கள் மாத்திரமே இடம்பெற்றிருக்கின்றன.

ஆளில்லா விமானத்தாக்குதல்களை பாகிஸ்தான் அதிகாரிகள் தங்களது நாட்டின் சுயாதிபத்தியத்தை மீறுகின்ற செயல் என்று கிரமமாக கண்டனம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அரசாங்கத்தினதும் இராணுவத்தினதும் சிரேஷ்ட உறுப்பினர்கள் இத்தாக்குதல்களைக் கடந்த காலத்தில் ஆதரித்திருக்கிறார்கள் என்பது தெரிந்ததே.

'ஆளில்லாவிமானத் தாக்குதல்களில் இருந்து மக்களைப் பாதுகாக்கவோ பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவோ பாகிஸ்தான் அதிகாரிகள் தவறியிருப்பது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கடும் விசனமடைந்திருக்கிறது. நாட்டில் இடம்பெற்றிருக்கும் ஆளில்லா விமானத்தாக்குதல்கள் சகலவற்றையும் பக்கச்சார்பின்றி, சுயாதீனமாக விசாரிக்க வேண்டிய கடமை பாகிஸ்தானுக்கு உண்டு. அத்துமீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் இழப்பீடும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டிய கடமையும் பாகிஸ்தானுக்கு இருக்கிறது' என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆளில்லாவிமானத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களில் தீவிரவாதக் குழுக்களுடன் எந்தவித தொடர்புமில்லாத பலரை சர்வதேச மன்னிப்புச் சபை நேர்முகம் கண்டிருக்கிறது. இவர்களில் எவருமே தங்களுக்கு இழப்பீடோ அல்லது பாகிஸ்தான் அரசாங்கத்திடமிருந்து போதுமான உதவியோ கிடைத்ததாகக் கூறவில்லை. ■

---

*(56ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

எங்ஙனம்? இவையிரண்டும் ஒன்றா? வெவ்வேறானவையா? இந்தக் கேள்விக்கு விடையளிப்பதில் இந்திய அரசியல் கோட்பாட்டாளரான ரஜீவ் பார்கவா (Rajiv Bharagava 2005) முன்வைத்துள்ள கருத்துப் பயனுடையது. பொதுமக்கள் விரிகளம் சமூகத்திற்குரியது. அதனைச் சிவில் சமூகத்திற்கு வெளியே நிற்பதொன்றாகவும் அடையாளம் காணலாம். சிவில் சமூகத்தின் பகுதியாக அதனை நோக்கும் போது, சிவில் சமூகத்தை அகன்ற விரிகளமாகப் பார்க்க முடியும். பொதுமக்கள் விரிகளம் சிவில் சமூகத்திற்கு வெளியே நிற்கிறது என நாம் அடையாளம் காணும்போது சிவில் சமூகம் பற்றிய குறுகிய வியாக்கியானமே எமக்குக் கிடைக்கிறது. குறுகிய இலக்குகளை வென்றெடுப்பதற்காகப் பிரஜைகள் அமைக்கும் சங்கங்களையும், கூட்டமைப்புகளையும் உள்ளடக்குவதாக மட்டுமே சிவில் சமூகத்தைப் பார்க்கின்றோம். சிவில் சமூகத்தினுள் பொதுமக்கள் விரிகளத்தையும் உள்வாங்கும் வகையில் நாம் சிவில் சமூகத்தை அகன்ற நிகழ்வு நிலையாகப் பார்க்கும் போது பிரஜைகள் அமைப்புகளைக் கொண்ட நிகழ்வு நிலையாக மட்டுமன்றி அமைப்பு ரீதியாகத் திரண்டிராத பிரஜைகளின் கலந்துரையாடல்களையும் உள்ளடக்க முடியும். அமைப்பு ரீதியாகத் திரண்டிராத பிரஜைகளும் வெகுஜன ஊடகங்கள் ஊடாக அவரவர்களுடன் தொடர்பாடல் நிகழ்த்துவதும், அரசியல் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் கலந்துரையாடல்கள், விவாதங்கள் என்பன அவர்களிடையே நடைபெறுவதும், அதன் மூலம் கருத்துகள் உருவாவதுமான பரந்த நிகழ்வு நிலையாகப் பொதுமக்கள் விரிகளத்தை வியாக்கியானப்படுத்த முடியும். ■

***ஜயதேவ உயன்கொட சிங்கள மொழியில் எழுதிய சிவில் சமூகம் என்றால் என்ன? யாருடையது? எதற்காக? என்ற நூலிலிருந்து...***

***தமிழாக்கம் - சி.கனகசிங்கம்***

கோட்பாட்டு விளக்கம்

# சிவில் சமூகமும் பொதுமக்கள் விரிகளமும்





## யர்கன் ஹபர்மஸ் சிந்தனைகள்

ஜயதேவ உயன்கொட

சிவில் சமூகம் பற்றிய கோட்பாட்டு ஆய்வுகளுக்கு வளம் சேர்த்தவரும்அக்கருத்தாடல்களில் செல்வாக்குச் செலுத்தியவருமான முக்கிய கோட்பாட்டாளராக ஜேர்மனியைச் சேர்ந்த யர்கன் ஹபர்மஸ் திகழ்கிறார். அவர் பொதுமக்கள் விரிகளம் என்ற முக்கியமான கருத்தாக்கத்தை முன்வைத்தார். மேற்குலகின் முன்னணி அரசியல் தத்துவ அறிஞராக இன்று விள ங்கும் ஹபர்மஸ், பிராங்போர்ட் சிந்தனா கூடம் என அறியப்பட்டிருந்த பிரபலமான அறிஞர் குழுவின் உறுப்பினராவார். பிராங்போர்ட் சிந்தனைக் கூடத்தின் கருத்துகள் சமூகம் குறித்த விமர்சனக் கோட்பாடு (Critical Theory) என பெயர்பெற்றது. விமர்சனக் கோட்பாட்டின் சிறந்த பிரதிநிதியாக ஹபர்மஸ் திகழ்கிறார்.

1962 ஆம் ஆண்டில் ஹபர்மஸ் ஜேர்மன் மொழியில் எழுதி வெளியிட்ட 'பொதுமக்கள் விரிகளத்தின் அமைப்பியல் மாற்றம்' என்ற நூலில் 'பொதுமக்கள் விரிகளம்' (Public sphere) என்ற கருத்தாக்கம் முதன் முதலாக எடுத்துக் கூறப்பட்டது.

18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட ஜனநாயக மாற்றங்களையும் அம்மாற்றங்களில் பொதுமக்களின் அரசியல் வகிபங்கு பற்றியும் ஹபர்மஸ் இந்நூலில் ஆராய முயலுகிறார்.

பொதுமக்களின் அரசியல் வகிபங்கு ஜனநாயக சமூகம் ஒன்றின் அடிப்படையான குணவியல்பு; அது தனிநபர் ஒருவரின் வளர்ச்சியை நிர்ணயிப்பதிலும் செல்வாக்குச் செலுத்தும் ஒரு நடைமுறையும் ஆகும் என்பதை ஹபர்மஸ் இந்நூலில் விளக்கியுள்ளார். தாராள ஜனநாயகம் ஐரோப்பாவில் வளர்ச்சியுற்ற போது அரசியல் நிறுவனங்கள் கட்டியெழுப்பப்பட்டன. இது முக்கியமான ஒரு வளர்ச்சியே. ஆனால் தாராள ஜனநாயகம் இதை மட்டும் வழங்கவில்லை. அது பொதுமக்களின் அரசியல் பங்கேற்பை உறுதி செய்தது. பொதுமக்களின் வகிபங்கு காரணமாக ஜனநாயக மாற்றத்திற்கான கேந்திரப் பணிகள் பல நிறைவேறின என்றும் ஹபர்மஸ் கூறினார்.

'பொதுமக்கள் விரிகளத்தின் அமைப்பியல் மாற்றம்' என்னும் நூலில் ஹபர்மஸ் இரு முக்கிய விடயங்களை ஆராய்கிறார்.

முதலாவதாக 18ஆம், 19ஆம், நூற்றாண்டுகளில் ஐரோப்பிய ஜனநாயக மாற்றங்களையும் அம்மாற்றங்களின் பின்னணியில் பொதுமக்கள் விரிகளம் (Public Sphere) உருவாவதையும் பொதுமக்கள் விரிகளத்தின் ஊடாக முதலாளித்துவ சமூகத்

தில் பொதுமக்களின் அரசியல் வகி பங்கு செயல் வடிவம் பெறுவதையும் ஹபர்மஸ் விளக்குகிறார்.

அடுத்ததாக அவர் பொது மக்கள் விரிகளத்தின் மீது தாக்கம் செலுத்தும் முதலாளித்துவ சமூக அரசியல் பண்பாட்டு அம்சங்களை எடுத்துக் காட்டுகிறார். இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்ற அரச முதலாளித்துவம் (State Capitalism) கலாசாரத் தொழிற்பாடுகள், தனியார்துறை பெரு வர்த்தக அமைப்புகள், தொடர்பு ஊடகங்கள் என்பன பொது மக்கள் விரிகளத்தின் மீது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தின என்பதை அவர் எடுத்துக் கூறினார்.

முதலாளித்துவ சமூகத்தில் உருவான 'பொதுமக்கள் விரிகளம்' என்பதனால் ஹபர்மஸ் கருதியது என்ன என்பதை முதலில் பார்ப்போம்.

மக்கள் தத்தம் இல்லங்களுக்குள் என்ன விடயங்களைப் பற்றி உரையாடுகின்றனர் என்ற கேள்வியை நாம் கேட்க வேண்டும். இல்லத்தினுள் அவர்கள் தமது குடும்பத்தினருக்கு மட்டும் இயைபுடையதான விடயங்களைத்தான் பேசுகின்றார்கள். அவர்கள் இல்லத்திற்கு வெளியே வந்து தம் குடும்ப விடயங்களிற்கு அப்பாற் சென்று சகலரையும் பாதிப்பதான பொது விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடும் போது பொது மக்கள் விரிகளம் உருவாகின்றது. ஆகவே பொது மக்கள் விரிகளம் என்பது கருத்துப் பரிமாற்றம் நிகழும் பொதுவெளியாகும். கிரேக்கர் காலத்திலிருந்தே அரசியல் சிந்தனையில் 'தனிநபர் களம்' 'பொதுமக்கள் விரிகளம்' என்ற கருத்துகள் வேறு வேறாக இனங் காணப்பட்டிருந்தன. இவற்றை ஹபர்மஸ் விரிவுபடுத்தி விளக்கியுள்ளார்.

அரிஸ்டோட்டலின் கருத்துப்படி கிரேக்கத்தின் நகர அரசுகளின் பிரஜைகள் தமது குடும்ப விடயங்களைப் பாதிக்கும் விடயங்களில் தனியார் களத்தில் பங்கு கொண்டதோடு பொதுக்களத்திலும் பங்கேற்றனர். சட்டங்களை ஆக்குதல், வழக்கு விசாரணைகளில் பங்குபற்றுதல், பொதுக் கூட்டங்களில் பங்கு பற்றுதல், பொதுத்தேவைகள் பற்றிக் கலந்துரையாடல் ஆகிய விடயங்களில் செயலூக்கத்துடன் பிரஜைகள் ஈடுபட்டனர். கிரேக்க சமூகம் இப்பங்கேற்பை நற்பிரஜைகளின் பண்பாகப் போற்றியது.



யர்கன் ஹபர்மஸ்

பொதுமக்கள் பங்குபற்றல் நிகழ்ந்த களத்தை ஹபர்மஸ் பொதுமக்கள் விரிகளம் என்று இனங்கண்டார். ஐரோப்பாவில் முதலாளித்துவம் வளர்ச்சியுற்ற சூழ்நிலையில் முதலாளித்துவ ஜனநாயகமும் வளர்ந்தது. இவ்விரு வளர்ச்சிகளின் பின்னணியில் பொது மக்கள் விரிகளம் என்ற கருத்தாக்கத்தைப் பிரயோகித்து விளக்கம் தந்தார்.

பொதுமக்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது நிலமானிய சமூகத்தில் நிகழ்ந்திராத ஒன்று. அது முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் முதலாளித்துவ சமூகத்தில் மட்டும் ஏற்பட்டிருக்கக் கூடியதான செயற்பாடாகும். தமது கருத்தாக்கத்தை முதலாளித்துவ 'பொது மக்கள் விரிகளம்' என ஹபர்மஸ் அழைப்பதற்குரிய காரணம் இதுவேயாகும்.

முதலாளித்துவ சமூக பொருளாதார மாற்றங்களின் போது தனிநபர்கள் முக்கிய சவால் ஒன்றை எதிர்கொண்டனர். தனிநபர் களத்தில் இருந்து பொது மக்கள் விரிகளத்தை நோக்கி நகர்வதும், அவ்விருகளங்களினதும் முரண்பட்ட தேவைகளிடையே இணக்கம் செய்து கொள்வதுமே இச்சவால் ஆகும். இது பற்றி ஹெகல், மார்க்ஸ் என்ற இரு சிந்தனையாளர்களும் நுட்பமாக விளக்கியுள்ளனர். நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் தனிநபர்கள் எதிர்நோக்கும் அறைகூவலும் இதுவேயாகும். ஒருவர் தனிநபர் என்ற நிலையையும், தமது தனிநபர் தன்மையையும் கடந்து சென்று ஏனையவர்களின் கருத்துகளையும் ஏற்று பொதுநலனை நாடுதலும் சமூகத்தில் கருத்தொற்றுமையை ஏற்படுத்துவதும் நிகழ்ந்தன.

இதற்கான கருத்துப் பரிமாற்றங்கள், கலந்துரையாடல்கள், விவாதங்கள், தகவல் பரிமாற்றங்கள் போன்றவை பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாயிலாக நிகழ்ந்தன. பாராளுமன்றம், அரசியல் அமைப்புகள், கழகங்கள், பொதுக்கூட்டங்கள் என்பன கருத்துப் பரிமாற்றத்திற்குரிய களங்களாயின. மதுபானக்கடைகளிலும், தேநீர் சாலைகளிலும் தனிநபர்கள் கூடிக் கலந்துரையாடுவதும் சமூக அரசியல் பொருளாதார விடயங்கள் பற்றி விவாதிப்பதன் மூலம் பொது மக்கள் அபிப்பிராயம் உருவாகியது.

முதலாளித்துவ பொது மக்கள் விரி

களத்தின் தோற்றத்துடன் தனிமனிதர்க ளிற்கு பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கும், அப்பொதுஜன உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்து வதற்கும் ஆற்றல் கிடைத்தது. இது முன்னர் தனிநபர்களுக்கு கிடைக்காத ஆற்றல் வரலாற்றில் முதற் தடவை யாக முதலாளித்துவ கட்டத்தில் பொதுஜன அபிப்பிராயத்தை உரு வாக்கும் ஆற்றலைத் தனிநபர்கள் பெற்றுக்கொள்கின்றனர். அரசியல் நடைமுறை மீதும் தாக்கத்தை ஏற்படுத் தும் ஆற்றல் தனிநபர்களுக்குக் கிடை த்தது என்பது ஹபர்மஸ் வாதமாகும்.

முதலாளித்துவ சமூகத்தின் கீழ் உரு யிரண்டிற்கும் இடையில் அமைந்த நிறுவன அமைப்பையுடைய சமூக நடைமுறைகளுடன் கூடிய ஒன்றாக பொதுமக்கள் விரிகளம் பரிணாமம் பெற்றது. குடும்பம், வேலைத்தலம் என்ற இரு நிலைகளை உள்ளடக்கிய களத்தையும், மறுபுறத்தில் தனது அதி காரத்தைத் தன்னிச்சையாகவும், ஒடு க்கு முறையிலும் பிரயோகிக்கும் அரச அதிகாரக் களத்தையும் தொடர்பு படுத்தும் ஊடகமாகவும் பொது மக் கள் விரிகளம் செயற்படத் தொடங்கி யது. அது அரச அதிகாரப் பிரயோகத் தில் தலையிட்டு அதனைத் தணிக்கவும் உதவியது. பொதுமக்கள் விரிகளம் யும் பொது அமைப்புகளையும் உரு வாக்கும் சுதந்திரம், கூட்டங்கள் நடத் தும் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம், அர சியல் விவாதங்களிலும் அரசியல் விடயங்களைத் தீர்மானிப்பதிலும் சுதந்திரமாகப் பங்குகொள்ளும் உரிமை போன்ற ஜனநாயக உரிமைக ளின் அடித்தளத்தில் உருவாக்கம் பெறுகிறது என்பது வெளிப்படை. இவ்வுரிமைகளால் பாதுகாக்கப்படும் அரசியல்-சமூக நிகழ்வு நிலை என வும் இதனை விளக்கலாம். முதலாளித் துவ ஜனநாயகப் புரட்சியின் பின்னர் தாராண்மை ஜனநாயக அரசுகள் அரசி யல் உரிமைகள், சுதந்திரமான நீதித்து றை, சட்டத்தின் ஆட்சி என்பனவற்றை நடைமுறைப்படுத்தின. இவை பொது மக்கள் விரிகளத்தின் நடைமுறை களை விஸ்தரிக்க உதவிய நிறுவன அமைப்பு வடிவங்களாகும்.

**சமூகத்தின் உறுப்பினர்கள் தம்மைப் பொதுவாக பாதிக்கும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடு வதற்கான களமே பொதுமக்கள் விரிகளமாகும். இதில் அவர்கள் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குகிறார்கள். அச்சு ஊடகம் இலத்திர னியல் ஊடகம் என்பவற்றின் மூலமும் நேருக்கு நேர் பேசிக்கொள் வதான பல்வேறு ஊடகங்கள் மூலமும் மக்கள் சந்தித்துக்கொள்ளும் நிகழ்வு நிலையே பொதுமக்கள் விரிகளம் எனப்படுகிறது**

வான பொதுமக்கள் விரிகளம் ஒரு பெருவெற்றியை ஈட்டியது. அரச அதி காரத்திற்குச் சமாந்தரமானதும், அரசு அதிகாரத்தை எதிர்த்து நிற்கக் கூடியது மான அதிகாரத் தளமாக பொதுஜன அபிப்பிராயம் உருவாக்கப்பட்ட தையே ஹபர்மஸ் இப்பெரு வெற்றி எனக்கூறினார். இதன் மூலம் சமுதா யம் எப்படி உருவாக்கப்பட வேண் டும். அது எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் செல்வாக் குச் செலுத்தும் அதிகாரத்தைப் பொது ஜன அபிப்பிராயம் பெற்றுக்கொண் டது. இது விடயத்தில் ஏனைய சக்தி களை மேவி நிற்கக்கூடிய ஒன்றாகவும் பலம் பெற்றது.

பொதுமக்கள் விரிகளம் ஒரு புறத் தில் தனிநபர் களத்தில் இருந்து வேறா னதாக இருந்தது. மறுபுறத்தில் அரச அதிகாரக்களம் என்பதில் இருந்தும் வேறுபட்ட களமாக இருந்தது. இவை தனிநபர்கள் தமக்குப் பொதுவான தும் இயைபானதுமான விடயங்க ளைக் கலந்துரையாடும் களமாக மட்டு மல்லாது அரச அதிகாரத்திற்கு எதிராக அமைப்பு ரீதியாக ஒன்றுபடுவதற் கான அதிகாரத் தளமாகவும் விளங்கு வது என்பதை ஹபர்மஸ் எடுத்துக் காட்டினார்.

சகலரையும் பொதுவாகப்பாதிக்கும் விடயங்கள் பற்றிய வெளிப்படை யான கலந்துரையாடல்களும், விவா தங்களும் பொதுமக்கள் விரிகளத்தில் இடம்பெறும். முடிவில் பொது நன்மை கருதி சகலரும் ஆமோதித்து ஏற்றுக் கொள்ளும் இணக்கம் கட்டியெழுப் பப்படும் பொதுமக்கள் விரிகளம் என் னும் கோட்பாட்டின் உட்கருத்து இதுவே என ஹபர்மஸ் குறிப்பிடுகி றார். ஆதலால் பொதுமக்கள் விரி களத்தின் இயங்கு நிலை பேச்சுச்சுதந் திரம், கருத்துச் சுதந்திரம், சங்கங்களை

ஹபர்மஸ் முன்வைத்த 'பொதுமக் கள் விரிகளம்' பொதுஜன அபிப்பி ராயம் என்ற இவ்விரு கருத்தாக்கங்க ளையும் கனேடிய நாட்டு அறிஞரும் தத்துவஞானியுமான சாள்ஸ் ரெயிலர் என்ற பேராசிரியர் விரிவாக விளக்கம் கொடுத்து தனித்த சிந்தனையாக வளர்த்தெடுத்தார். ஹபர்மஸ் போன்றே சாள்ஸ் ரெயிலரும் முக்கிய மான சமகால சிந்தனையாளர்களில் ஒருவர். சாள்ஸ் ரெயிலர் 1992 இல் Modernity and the Rise of the public sphere (நவீனத்துவமும் பொதுமக்கள் விரிகளத்தின் எழுச்சி யும்) என்ற கட்டுரையை எழுதினார். 1997இல் அவர் 'தத்துவஞான விவா தங்கள்' என்ற நூலைப் பிரசுரித்தார். இவ்விரு பிரசுரங்களும் ரெயிலரின் சிந்தனையை வெளிப்படுத்துபவை. ஹபர்மஸ் பொதுமக்கள் விரிகளம் என்பதை முதலாளித்துவம் பொதுமக் கள் விரிகளம் என்று வியாக்கியானம் செய்தார். சாள்ஸ் ரெயிலர் பொதுமக் கள் விரிகளம் என்பதற்கு தற்கால த்தை ஒட்டிய விரிந்த விளக்கத்தைத் தருகிறார்.

'தற்காலத்தில் பொதுமக்கள் விரி களம் என்பது முதலாளித்துவப் பொது மக்கள் விரிகளத்தை மட்டும் குறிப்பி டவில்லை. இப்போது அது அகன்ற

எல்லையை நோக்கி விரிவடைந்துள்ளது. வெகுஜனத் தொடர்பாடல் மற்றும் ஊடகங்கள் ஆகியவற்றின் விரிவாக்கத்துடன் பொதுமக்கள் விரிகளத்தில் சமூகக் குழுக்களின் கலப்பு பெருகியுள்ளது. அதன் எல்லையும் விரிவடைந்துள்ளது.'

சாள்ஸ் ரெயிலர் தமது பொதுமக்கள் விரிகளம் என்ற கருத்துப்படிமத்தை நவீன வளர்ச்சிப் பின்னணியின் அடிப்படையில் பின்வருமாறு விளக்குகிறார்.

'சமூகத்தின் உறுப்பினர்கள் தம்மைப் பொதுவாகப்பாதிக்கும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான களமே பொதுமக்கள் விரிகளம் ஆகும். இக்களத்தில் அவர்கள் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குகிறார்கள். அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் என்பனவற்றின் மூலமும் நேருக்கு நேர் பேசிக் கொள்வதான பல்வேறு ஊடகங்கள் மூலமும் மக்கள் சந்தித்துக்கொள்ளும் நிகழ்வு நிலையே பொது மக்கள் விரிகளம் எனப்படுகின்றது.'

அனைத்துலக இணையம் 'பேஸ்புக்' போன்ற இலத்திரனியல் சமூக ஊடகங்களையும் பொதுமக்கள் விரிகளத்தில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இந்நிகழ்வு நிலைகள் குறுகியன வல்ல, பரந்து அமைபவை. நாம் வீட்டை விட்டுப் போய்த் தேநீர்க் கடையில் இருந்து கொண்டு பிறருடன் நேற்றுப் பெய்த 'பேய் மழை' பற்றிக் கதைப்போமாயின் அது சாள்ஸ் ரெயிலரின் அர்த்தப்படி பொது மக்கள் விரிகளத்தில் நடைபெறும் கலந்துரையாடல் அன்று. ஆனால் பேய் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குப் பற்றியும், அதனால் ஏற்பட்ட அழிவுகள் பற்றியும் நேற்றிரவு தொலைக் காட்சிச் செய்திகளில் வெளியாகிய அறிக்கைகளைப் பற்றியும் விவாதம் ஒன்று பொதுமக்கள் விரிகளத்தில் இடம்பெறலாம். அதன் பின்னர் அரசாங்கத்தின் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கொள்கைகள் பற்றிய விமர்சனம் தேநீர்க் கடைக் கலந்துரையாடலில் இடம்பெறலாம். இலத்திரனியல் ஊடகம், நேருக்கு நேரான கலந்துரையாடல் என்ற இரண்டும் ஒன்றாக இணைவதன் மூலம் பொது மக்கள் விரிகளம் என்ற பரந்த நிகழ்வு நிலை உருவாகின்றது. அவ்வாறான கலந்துரையாடல்கள் மூலம் பிரஜைகளுக்குப் பொதுவான பாதிப்புகளை ஏற்படுத்தும் பிரச்சினைகள் தொடர்பான கருத்துப் பரிமாறலுக்கும், அவற்றை விமர்சிப்பதற்கும், புதிய யோசனைகள், மாற்று வழிகள் ஆகியவற்றை அமைத்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இத்தகைய பொதுமக்கள் விரிகளத்தை மிகுவிரி விவாதத்தளம் என சாள்ஸ் ரெயிலர் குறிப்பிடுகின்றார். இதன் பொருள் பொதுமக்கள் விரிகளத்தில் நாம் விவாதிப்பவை எம்மைப் பாதிக்கும் தனிநபர் பிரச்சினைகள் பற்றியதன்று. சமூகத்தையும், மக்கள் யாவரையும் பாதிக்கும் பொது விடயங்கள் பற்றியே விவாதிக்கப்படுகின்றன. அப்போது விடயங்கள் பற்றி நாம் பிறருடன் பேசுவதற்கும், சேர்ந்து செயற்படுவதற்கும் உரிய களமே பொதுமக்கள் விரிகளம் ஆகும்.

ரெயிலரின் இன்னொரு முக்கிய கருத்தாக்கமானது மக்கள் அபிப்பிராயம் பற்றி அவர் தரும் வியாக்கியானமாகும். பொதுமக்கள் அபிப்பிராயம் என்பதை 'மனிதர்களின் அபிப்பிராயம்' என்பதில் இருந்து அவர் வேறுபடுத்துகிறார். 'மனிதர்களின் அபிப்பிராயம்' என்பது முதலாளித்துவ சமுதாயத்திலும் அதற்கு முந்திய சமுதாயத்திலும் காணப்படுவதாகும். மனிதர்களிடையே பொதுவாகக் காணப்படுவதாக இருந்தாலும் மனிதர்களின் அபிப்பிராயம் என்ற வகைக் கருத்துக்கள்.

அ. கருத்தாடல்கள் விமர்சனங்கள் ஆகியவற்றினால் உருவாவதில்லை.

ஆ. வியாக்கியானங்களுக்கு உட்படுத்தப்படாமலும் செயல்வடிவம் பெறாமலும் ஒரு தலைமுறையினரால் அடுத்த தலைமுறைக்கு உரித்தாக்கப்படுபவை.

இ. அவை பகுப்பாய்வு என்ற தேர்வு ஊடாக வருபவை அல்ல.

பொதுமக்கள் அபிப்பிராயம் என்ற வகைக் கருத்துகள் மேற்கூறப்பட்டவற்றை விட வித்தியாசமான தன்மை கொண்டவை. அவை முதலாளித்துவ சமுதாயத்தில்

1. விமர்சனங்கள், பகுப்பாய்வு என்ற தேர்வுகளால் உருவாக்கம் பெறுபவை.
2. சமுதாயத்தில் நிகழும் கலந்துரையாடல்களில் இருந்து தோன்றுபவை.
3. சமுதாயத்தின் செயல் முனைப்புடைய கருத்தொருமைப்பாடு இதில் வெளிப்படுத்தப்படுகிறது.

ரெயிலர் சுட்டிக்காட்டுவது போல் மனிதர்களின் அபிப்பிராயம் என்பது நாம் செயல் முனைப்பின்றி முதிய தலைமுறையினரிடமிருந்து பெற்றுக் கொள்வதாகும். சமூக அனுசரிப்பு என்ற வகையில் பெற்றோரிடமிருந்தும், முதியவர்களிடமிருந்தும் மனிதர்களின் அபிப்பிராயத்தைப் பெற்றுக் கொள்கிறோம். 'களவு ஒரு பாவச் செயலாகும்' அவ்வாறானதொரு மனிதர்களின் அபிப்பிராயமாகும்.

பொதுமக்கள் அபிப்பிராயம் அவ்வாறானதல்ல. அது பொதுமக்கள் விரிகளத்தினூடாக உருவாகும். இலத்திரனியல் ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் ஊடான பொதுக் கருத்தாடல்கள், விவாதங்கள், விமர்சனங்கள் என்பன பொதுமக்கள் அபிப்பிராயத்தினை உருவாக்க உதவுவன. 'அரசியல்வாதிகள் அரசாங்கச் சொத்துகளை முறைகேடாகப் பயன்படுத்துவதனால் நிர்வாக ஊழல்களிற்கு வழி பிறக்கின்றது' என்பது பொது மக்கள் அபிப்பிராயத்தின் உருவாக்கத்திற்கு உதாரணமாகும். ஹபர்மஸ், ரெயிலர் ஆகிய இருவரும் செய்துள்ள ஆய்வின் மூலம் தெரியவருவது யாதெனில், பொதுமக்கள் விரிகளம் சமூக அரசியல் செயற்பாட்டின் செயல் முனைப்புடைய நிகழ்வு நிலையொன்றாகும் என்பதே. அது சமூக அரசியல் மாற்றத்தின் ஆக்கபூர்வமான பணியை நிறைவேற்றவும் உதவுகின்றது.

பொதுமக்கள் விரிகளத்தினதும், தனிநபர் விரிகளத்தினதும் அமைவு நிலைகளை அடையாளம் காண்பது

*(52ஆம் பக்கம் பார்க்க...)*

சமூகவியல்

# வரலாற்றுப் பதிவுகள் புதைக்கப்படுமா விதைக்கப்படுமா?



கே.ஆர்.டேவிட்

**வரலாறுகள் ஒரு போதும் இடைவெளி விட்டுத் தொடர்வதில்லை. கடந்த 37 ஆண்டு கால வரலாற்று இடைவெளி எப்படியோ நிரப்பப்படத் தான் போகிறது. அவை அக்காலகட்டத்தைய உண்மை வரலாறாக இருக்குமா என்பதே எம் முன்னால் உள்ள கேள்வி?**

ஒவ்வொரு மனிதனும் தான் சார்ந்த, தனது குடும்பம் சார்ந்த எதிர்காலம்பற்றிச் சிந்திக்கின்றான். அச்சிந்தனையில் எட்டப்படுகின்ற தீர்மானங்களை நோக்கிய பயணங்களே அவனது வாழ்க்கையாக அமைகின்றது. ஒரு மனிதனின் எதிர்காலம் பற்றிய சிந்தனை என்று கூறும்போது, அவன் சிந்திக்கின்ற கருப்பொருளோடு தொடர்புபட்ட இறந்தகாலச் சம்பவங்களின் விரிவாக்கம் அவனை அறியாமலேயே அவனுள் நிகழ்த்தப்பட்டு, அதன் ஒப்பீட்டடிப் படையிலேயே அவனது முடிவுகள் எட்டப்படுகின்றன என்பது கவனத்திற்குரியதாகும். இறந்தகால காரண, காரிய விளக்கங்களும், நிகழ்காலப் புரிதல்களுமின்றி எதிர்காலம்பற்றிய தெளிவானதொரு முடிவை எட்டுவதென்பது சாத்தியப்பட முடியாததொன்று எனக்கூறலாம்.

இன்று வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் எத்தனையோ தலைமுறைகளைத்தாண்டியவன். அத்தலைமுறைகளின் அனுபவ மேட்டின்மீதுதான் அவன் வாழ்கின்றான். இன்று வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் பின்பற்றுகின்ற நடத்தைக்கோலங்கள் யாவுமே இவனது மூதாதையர்களிடம் இருந்து படிப்படியாக இவனிடம் கடத்தப்பட்டவைகளாகும். ஆனால், இவனது மூதாதையர்களிடமிருந்து இவனை நோக்கிக் கடத்தப்பட்ட சமூகக்கூறுகள் விஞ்ஞானத்திற்கூடாக நிகழ்ந்திருப்பதால் அவற்றின் வடிவங்களிலும், இயக்க நிலைகளிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பது அவதானத்திற்குரியதாகும்.

மேற் கூறப்பட்ட சமூக இயங்கியல் கடத்தல்களுக்கூடாக, நமக்கு முன் வாழ்ந்தவர்களின் அனுபவப்படிமங்கள் மீதுதான் இன்றைய தலைமுறையினர் வாழ்கின்றார்கள் என்பதையும், இன்றைய தலைமுறையினரின் அனுபவப்படிமங்கள் மீதுதான் நமக்கடுத்த தலைமுறையினர் வாழப்போகிறார்கள் என்பதையும் நிதானப்படுத்திக்கொள்ளலாம்.

இறந்தகாலச் சம்பவங்கள் பல வகைகளில், பலவழிகளில் நிகழ்காலச் சந்ததியினருக்குக் கடத்தப்படுகின்றன. இவைகளில் வரலாறும், இலக்கியங்களும் முக்கியத்துவம்

பெறுகின்றன. சமூகப்படிமங்களின் உறைவிடங்களாகவே வரலாறுகளும், இலக்கியங்களும் காணப்படுகின்றன. இதில் வரலாறென்பது, இறந்த காலச்சம்பவங்களை காரண காரியங்களை காலவரையறைகளோடு தொடர்புபடுத்தி இடைவெளியின்றித் தொடர்ச்சியாகச் செய்யப்படுகின்ற பதிவுகளாகும். அதாவது 'உள்ளதை உள்ளபடி' பதிவாக்குவதாகும். ஆனால், இலக்கியம் என்பது, சமூகச் செல்நெறிகளை வளப்படுத்தக்கூடிய முக்கிய சம்பவங்களை கருத்தியல் ரீதியாக அதன் உணர்வியல் அம்சங்கள் பிசகாமல் அழகியலோடு 'உள்ளதை உணர்ந்தவாறு' பதிவாக்குவதாகும். வரலாறுகளும், இலக்கியங்களும் ஒன்றையொன்று தழுவிய இரு படைப்புகளாகும்.

கடந்த 30 ஆண்டுகளாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நடந்த யுத்த அனர்த்தங்களும், அந்த யுத்தத்தின் உள்ளீடான தேசிய அரசியல் நபுஞ்சக நடவடிக்கைகளும் தொடர்பான பதிவுகள் தமிழ் மக்களின் வரலாற்றில் மிகமுக்கியமான பகுதிகளாகும். இலங்கை சுதந்திரம் அடைந்த 1948ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான 65 வருடகால தமிழர்களின் வரலாற்றை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. 1948ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டு வரையான 35 ஆண்டுகளை உள்ளடக்கிய காலப் பகுதி. இக்காலப்பகுதியில், இலங்கைத்தேசியத்தில் தமிழ் மக்கள் சமூக அரசியல் வன்முறைகளுக்குள்ளாகி ஏதிலிகளாக வாழ்ந்ததற்கான பதிவுகளையே அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.
2. 1983ஆம் ஆண்டு தொடக்கம் இறுதி யுத்தம் ஆரம்பமான 2006 ஆம் ஆண்டு வரையான 30 வருடங்களை உள்ளடக்கிய காலப் பகுதி. இக்காலப்பகுதியில், இராணுவ நடவடிக்கைகள், இடப்பெயர்வுகள், இந்திய அமைதி காக்கும் படையினரின் வருகை இவைகளோடு தமிழீழ நிழல் அரச நிர்வாகம் போன்ற பதிவுகளைக் காணக்கூடியதாகவுள்ளது.
3. 2006ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான 7 வருடகாலப் பகுதி. பலவிதமான இழப்புக்குள்ளாகி, அரசியல் அஞ்ஞான நிலையையே காணக்கூடியதாகவுள்ளது.

இறந்தகால மனிதவரலாற்றுப் படிமங்கள் மீதே இன்றைய மனிதன் வாழ்ந்து கொண்டிருப்பதையும், இன்றைய மனிதவரலாற்றுப் படிமங்கள் மீதே நாளைய சந்ததியினரின் வாழ்க்கை தொடரப்போகின்றது என்பது பற்றிய விளக்கங்கள் இப்பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள அச்செய்திகளை முன்நிறுத்தி, 1983ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான 37 ஆண்டுகால தமிழர்களின் அரசியல்- போராட்ட முன்னெடுப்புகள் பற்றிய வரலாற்றுப் பதிவுகளை நமது அடுத்த சந்ததியினருக்குக் கையளிக்கக்கூடிய ஆவணங்கள் நம்மிடம் இருக்குமா என்பது பற்றிப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

தமிழீழ நிழல் அரசு நிலவிய காலத்தில் போராளிகளால் அமைக்கப்பட்ட தியாகிகளின் சிலைகள், போராளிகளின் நினைவுச் சின்னங்கள், போராளிகளின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட 'மாவீரர் துயிலும் இல்லங்கள்', நினைவாலயங்கள், பூங்காக்கள், அவர்களால் படைக்கப்பட்ட வரலாற்றுப்பதிவுகள், இலக்கியங்கள் போன்ற அனைத்துமே போரில் அழிந்து போய்விட்டன, எஞ்சியவைகள் அழிக்கப்படுகின்றன. அண்மையில் வன்னிப்பெருநிலப்பரப்பில் அமைந்திருந்த போராளித்தலைவரின் வீடு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இக்குண்டுத் தகர்ப்புத் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய கருத்துத் தெரிவிக்கையில் (உதயன் 06.10.2013) 'தீவிரவாதியின் ஆவியின் இருப்பிடம்' எனக்குறிப்பிடப்பட்டுள்ளது மிகக் கவனிப்பிற்குரியதாகும்.

இளம் வயதில் அகாலமரணமடையும் ஒருவரின் ஆன்மாவானது, அகாலமரணமடைந்த அந்த மனிதனின் பிறப்பின் போது, பிரம்மாவினால் இவனது மரணம் பற்றிக்குறிப்பிடப்பட்ட நாள் வரும் வரையில், இறந்தவனின் ஆன்மாவானது அவன் வாழ்ந்த வீட்டைச்சுற்றியே அலைந்து கொண்டிருக்கும் என்பது தமிழ் மக்களிடம் காணப்படுகின்றதொரு சமய ஐதீகமாகும்.

விடுதலைப் போராட்டம் நீதியானதாகவும் இருக்கலாம், அல்லது அநீதியானதாகவும் இருக்கலாம். அந்தப் போராட்டம் அழிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எதிர்த்தரப்பினரிடம் ஏற்படும்போது, அந்த முடிவானது இழப்புகளுக்கும், மரணங்களுக்கும் மீதுதான் கட்டப்படும் முடிவென்பதை யுத்த வரலாறுகள் கூறும் உண்மையாகும்.

யுத்தத்தின் பின் மரணங்கள் எண்ணப்படலாம். ஆனால் யுத்தத்தின்

**கடந்த 30 வருட கால தமிழர்களின் அரசியல் பாதை சரியானதோ, தவறானதோ எதுவாக இருந்தாலும் நமது எதிர்காலச் சந்ததியினருக்கு கையளிக்க நம்மிடம் வலுவானதொரு ஆவணம் வேண்டும் என்பது தான் நமக்கு முன்னால் உள்ள பிரச்சினை. சரியானவை பின்பற்றப்படலாம்-பிழையானவை திருத்தப்படலாம் அப்பிரச்சினை எதிர்காலச் சந்ததியினருக்கு உரியதே தவிர நமக்கு உரியதல்ல.**

பின்னர் இறந்துபோன போராளிக ளின் ஆவிகள் எண்ணப்படுவதென் பது யுத்த அநாகரிகச் செயலாகும். அடக்கப்படும் ஒரு இனம் அடக்கப் படுபவர்களால் இப்படியும் சிதைக் கப்படுகிறதே என்ற வேதனையே, முப் பது வருடகாலத்து தமிழர்களின் வரலாற்று ஆவணங்கள் பேணப் பட்டு நமது எதிர்காலச் சந்ததியினரு க்கு வழங்கமுடியுமா என்றொரு ஆத ங்கத்தை எனக்கு ஏற்படுத்தியது.

தமிழ் இலக்கிய வரலாறு, ஈழ கேசரிக்காலம், மறுமலர்ச்சிக்காலம், சமுதாய விழிப்புணர்வுக்காலம், தேசிய விழிப்புணர்வுக்காலம், தமிழ்த்தேசிய எழுச்சிக்காலம் என வகுக்கப்பட்டுள்ளன. இதில் 'தமிழ்த் தேசிய எழுச்சிக்காலம்' என்று குறிப் பிடப்பட்டுள்ள 1983-2006 வரை யான முப்பது ஆண்டுகால, சர்வ தேச நாடுகளின் கவனங்களையும் ஈர்த்த, தமிழீழ நிழல் அரசுக்காலத்துக் குரிய அனைத்து ஆவணங்களும் அழிந்துவிடுகின்ற- அழிக்கப்பட்டு விடுகின்ற அபாய நிலையே காணப் படுகின்றது.

'தமிழ் மக்களின் அனைத்து வளங் களும் தமிழீழப் போராட்டத்திற்குரி யன' என்ற எழுதப்படாத விதியின் அடிப்படையிலேயே வன்னியில் அமைந்த தமிழீழ நிழல் அரசு செயற் பட்டது. இந்த அரசின் கீழ் 'கலை இலக்கியத்துறையும்' ஒரு பிரிவாக இயங்கியது. இப்பிரிவின் கீழ், இலக் கியத்தின் சகலதுறைகளும் பேணப் பட்டன. படைப்பாளர்கள் பெரிதும் கௌரவிக்கப்பட்டனர். அவர்களின் படைப்பாக்கல் துறைக்குத் தேவை யான சகல வசதிகளும் வழங்கப்பட் டன. அதுமட்டுமல்லாது குடும்பப் பொறுப்புள்ள- கஷ்ட நிலையிலுள்ள படைப்பாளர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகள் கூட வழங்கப்பட் டது. இதனால் அக்காலத்தில் பெருந் தொகையான படைப்புகள் வெளிவந் தன.

இக்காலப்பகுதியில் தமிழர்களின் வீடுகளில் சமயம் சார்ந்த கடவுள் களின் படங்கள், சினிமா நட்சத்திரங் களின் படங்களுக்கு மேலால் போரா ளிகளின் படங்களையும், போராட்டம் சார்ந்த நூல்களையும் சர்வசாதாரண மாகக் காணக்கூடியதாக இருந்தது.

இக்காலத்தில் பல்வேறுபட்டவர்க ளின் படைப்புகள் வெளிவந்தன.

1. போராட்டகளத்தில் நின்ற படைப் பாளிகள் படைத்தன.
2. போராளிகள் பலர் படைப்பாளி களாகிப் படைத்தனர்.
3. போராட்டக்களத்திற்கு வெளியே நின்றவர்களில் போராட்டத்தை முழுமையாக நேசித்த படைப்பா ளிகளும் படைத்தனர்.
4. போராட்ட சம்பவங்களால் ஈர்க் கப்பட்டவர்கள் பலர் படைத்தனர்.
5. சர்வதேச நாடுகளில் வாழ்கின்ற படைப்பாளர்கள் படைத்தனர்.
6. தமிழ்ப் பிரதேசங்களுக்கு வெளியே வாழுகின்ற படைப் பாளர்கள் தங்களின் பாதுகாப்புக் கருதி மறைமுகமாகப்படைத்தனர்.
7. தமிழீழ அரசுக்கென்று தினசரிப் பத்திரிகைகள், மாதாந்தச் சஞ்சி கைகள், வெளிவந்ததோடு, வானொலிச் செய்திகளும் இடம் பெற்றன. இப்படிப்பல வகையான இலக்கியப் படைப்புகள், பல வகைகளில் வெளிவந்தன. அத் தோடு பொதுமக்களும் எந்த அச்ச மும் இன்றி அவைகளை வாங்கி னர்.

முப்பதுவருடகால தமிழர்களின் அரசியல்பாதை- அது சரியானதோ அல்லது தவறானதோ எதுவாக இருந் தாலும், நமது எதிர்காலச்சந்ததியின ருக்கு நாம் கையளிக்க நம்மிடம் வலு வானதொரு ஆவணம் வேண்டும் என்பதுதான் நமக்கு முன்னாலுள்ள பிரச்சினையாகும். சரியானவைகள் பின்பற்றப்படலாம், பிழையானவை கள் திருத்தப்படலாம். அப்பிரச்சினை எதிர்காலச் சந்ததியினருக்கு உரியதே தவிர நமக்குரியதல்ல.

1. 2006ஆம் ஆண்டு மாவிலாற்றில் ஆரம்பமான இறுதி யுத்தம் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கா லில் முடிவடையும், மூன்று வருட காலப்பகுதியில் ஏற்பட்ட வகை தொகையற்ற தமிழர்களின் இடப்பெயர்வின் போது பொது மக்களின் கைகளில் இருந்த ஆவ ணங்கள் அழிந்துவிட்டன.
2. முள்ளிவாய்க்கால் கைப்பற்றப் பட்டபோது அங்கிருந்த மிகமுக் கியமான ஆவணக்காப்பகங்கள் அழிந்துபோய்விட்டன.
3. முள்ளிவாய்க்கால் கைப்பற்றப்பட் டதன் பின்னர் தமிழர்கள் வாழும் பகுதிகள் அனைத்தும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குட்பட்டதால் பாதுகாப்புக்காரணங்கருதி பொது மக்கள் தங்களிடம் இருந்த ஆவ ணங்களை அழித்துவிட்டனர்.
4. இறுதி யுத்தத்தில் களத்தில் நின்ற ஒரு பகுதிப்படைப்பாளிகள் கொல்லப்பட்டனர். எஞ்சியிருந் தோர் கைதுசெய்யப்பட்டு முட்கம் பிவேலிக்குள் அடைக்கப்பட்ட னர்.
5. அரச புலனாய்வுப் பகுதியினரின் அச்சுறுத்தல்களோடு, உள்நாட்டு கைக்கூலி பெறும் உளவாளிகளின் அச்சுறுத்தல்கள் காரணமாகப் பல படைப்பாளிகள் நாட்டைவிட்டு வெளியேறினர்.
6. இப்போதும் வாழ்ந்துகொண்டி ருக்கும் படைப்பாளிகள் விலங்கி டப்பட்டவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.
7. வடபகுதியில் நடைபெறுகின்ற இலக்கிய நிகழ்வுகள் தொடக்கம் சாதாரண குழுநிலைக் கலந்துரை யாடல்கள் வரை புலனாய்வுப் பிரிவினரின் கவனத்திற்குள்ளாகு கின்றன.
8. யுத்தத்தின் அடிப்படைக்காரணி கள் தவிர்ந்த உதிரிச் சம்பவங்கள் மட்டும் சமகாலப் படைப்புகளாக உள்ளன.

வரலாறுகள் ஒருபோதும் இடை வெளிவிட்டுத் தொடர்வதில்லை. கடந்த முப்பத்தேழு ஆண்டுகால வர லாற்று இடைவெளி எப்படியோ நிரப் பப்படத்தான் போகின்றது. அவை கள் முப்பத்தேழு வருடகாலத்து உண்மை வரலாறாக இருக்குமா என் பதுதான் இப்போது நமக்கு முன்னா லுள்ள கேள்வியாகும். ■

இலக்கியம்



# திறனாய்வு வெளியும் திறனாய்வு வழியும்

மூர். ஜீவானந்தம்

இன்று சமகால ஈழத்துத் தமிழ் கலை இலக்கியச் சூழலில் எரியும் பிரச்சினைகள் என்று நாம் எவற்றை அடையாளப்படுத்துவது? அதற்கான தேடலில் முன் முயற்சிகளில் ஈடுபடக்கூடிய படைப்பாளர்கள் நம்மத்தியில் உள்ளனரா? அல்லது கலை இலக்கியப் பிரச்சினைகள் தொடர்பில் தீவிரமான அலசல்களை, விவாதங்களை, விமர்சன உரையாடல்களை நடத்துவதற்கான அறிவும் ஆற்றலும் நேர்மையும் துணிவும் கொண்டவர்கள் நம் மத்தியில் உள்ளார்களா? இதுபோல் எண்ணற்ற கேள்விகள் நம்மிடையே உருவாகின்றன.

இந்தக் கேள்விகள் மீதான கருத்துப் பகிர்வுகளுக்கு, விடைகளைக் கண்டறிவதற்கு நாம் தீவிரமான முயற்சிகளில் இறங்க வேண்டிய அவசியப்பாடுகள் உருவாகியுள்ளன. ஆனால், இங்கு ஆரோக்கியமான கருத்துருவாக்கச்சூழல் பன்முக ரீதியில் உருவாவதாக இல்லை. அல்லது, உருவாக்குவதற்கான தீவிர முயற்சியில் ஈடுபடுவதற்கான சக்திகள் இல்லை. இவ்வாறான நிகழ்வுகளும் சிந்தனைக் குழப்பங்களும் ஒரு புறமிருக்க, சமீபகால கலை இலக்கியம் தொடர்பில் சில அவதானங்களைக் கவனத்திற்கு கொண்டுவரவேண்டியிருக்கிறது.

பொதுவாக இன்றைய இலக்கிய நிகழ்வுகளில் நூல்வெளியீடுகளில் பேச்சாளர்கள், கருத்துரையாளர்கள் அல்லது விமர்சகர்கள் முதலான அடையாளங்களுடன் வருபவர்கள் பெரும்பாலும் திட்டமிட்டு தங்கள் கருத்துரையை வழங்கும் முறைமையைக் கடைப்பிடிக்க முடியாதவர்களாக உள்ளனர். இவர்களது பேச்சு அல்லது உரை அறிவுபூர்வமானதாக நமது சிந்தனைகளை கிளர்வுக்குட்படுத்தும் பாங்கில் இல்லை. மேலும், தர்க்கவியல் எதுவுமற்று முனைமழுங்கிய உயிரற்ற சொற்களின் புறப்பாடுகளாகவும் உள்ளன. இங்கு ஒரு வித போலித்தனம் எங்கும் நிலைபெற்று வருகின்றன. குறிப்பாக இலக்கியத்தை வளர்ப்பதில் திறனாய்வாளருக்கு முக்கியமான பங்கு இருக்கிறது. ஆனால், இந்தப் புரிதல் நமது சூழலில் பலருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

முன்பு இலக்கியத் திறனாய்வாளர்களாக இயங்கி அமரர்களாகிவிட்ட க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, இ.முருகையன், மு.தளையசிங்கம், ஏ.ஜே.கனகரத்தினா போன்றோரும் இன்றுவரை இயங்கிக் கொண்டிருக்கும் எம்.ஏ.நுஃமான், மு.பொன்னம்பலம், சி.சிவசேகரம், கே.எஸ். சிவகுமாரன், அ.யேசுராசா முதலானவர்கள் காத்திரமாக இயங்கிவந்திருக்கிறார்கள். இவர்களுக்கு நல்லதை அடையாளம் காட்டும் துணிவு இருந்தது. இவர்கள் யாவரும் ஒரே மட்டத்தில், ஒரே பண்பு நிலையில், ஒரே அளவுகோல்களைக் கொண்டு இயங்கியவர்கள் என்று கூறமுடியாது. மார்க்சிய அணிசார்ந்து இயங்கியவர்களிடம் கூட பல வித்தியாசங்கள் காணப்படுகின்றன. மொத்தத்தில் இவர்கள் யாவரிடமும் திறனாய்வு என்பது விசாலமான பணிகளையும் நோக்கத்தையும் கொண்டிருக்கின்றது என்பது தெளிவாக இருந்தது. இவர்கள் இலக்கியத்தை ஒரு கலையாக, சாதனமாக, ஒரு சக்தியாக இனம் கண்டார்கள். இதனுடைய சாத்தியங்களையும் வழிகளையும் ஆராய வேண்டுமென்பதில் உணர்வுபூர்வமாக இருந்துள்ளனர். பல நிலைகளில் தாம் வரித்துக்கொண்ட கருத்தியல் தளங்களில் நின்றுகொண்டு பல்வேறு வினாக்களை எழுப்பி இலக்கியம் பற்றிய சிந்தனைகளை,

புரிதலை ஆழப்படுத்தி வந்தனர். படைப்பாளியின் சிறப்புகளை, தனித் தன்மைகளை அடையாளம் காண்ப தற்கான வெளியைக் கட்டமைத்தனர்.

ஆனால், இன்று பல்கலைக்கழக மட்டத்தில் இளம் தமிழ்த்துறை விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் பெரும்பாலும் முன்னையவர்களின் தடத்தில் பயணிப்பதற்கான அறிவும் திறனும் ஆளுமையும் இல்லாதவர்களாகவே உள்ளனர். இவர்கள் கலை இலக்கியப் பரப்பில் தெளிவான உரைகளை நிகழ்த்துவதற்கான பயிற்சியும் முதிர்ச்சியும் ஆளுமையும் இல்லாதவர்களாக உள்ளமை வேதனைக்குரியது. இதனால்தான் இவர்கள் பட்டிமன்றப் பேச்சுத்தொனியில் காத்திரமற்ற உரைகளை நிகழ்த் தக்கூடியவர்களாக உள்ளனர். படைப்புகளை திறனாய்வு செய்ய விளையாமல் பாராட்டிப் புகழுரைகளை வழங்குவதுதான் தமது பணிகளென திடமாக நம்பும் போலித் திறனாய்வாளர்கள் நம்மிடையே உருவாகி விட்டனர்.

பொறுப்பான திறனாய்வாளராக தொழிற்படுவதற்கான தகுதியைக் தெடுத்துக்கொண்டதை விவரிக்கவோ, பகுத்து விளக்கவோ, புதிய விளக்கங்கள் கொடுக்கவோ தொடங்க வேண்டும். இவ்வாறு மால்கம் கவ்லே கூறுவதன் தாற்பரியத்தை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இந்த இரண்டும் கேட்ப தற்கு எளிமையாக இருந்தாலும் மிகவும் ஆழமாக கவனிக்கப்பட வேண்டியவை.

இங்கு தகுதியானவற்றைத் தேர்ந் தெடுப்பதென்றால் தகுதியானவை என்று முடிவு செய்வது எப்படி? இதற்கான அளவுகோல்கள் என்ன? போன்ற வினாக்கள் முக்கியம். எவ்வாறாயினும் இவற்றைத் திறனாய்வாளர் தான் முடிவு செய்கிறார். இவருடைய பயிற்சி, இலக்கியம் பற்றிய கண்ணோட்டம், சமூக தேவை பற்றிய உணர்வு, திறனாய்வாளரின் நோக்கம் யாவும் இங்கு அடங்குகின்றன. ஒரு வகையில் படைப்பு மதிப்பீடு செய்யப்படுகின்றன. சரியானவற்றைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் திறன்னாய்வின் முதலாவது பணி முடிவடைந்துவிடுகிறது. அடுத்து தேர்ந்தெடுத்தவற்றை திறனாய்வது தீவிர வாசிப்பின் தன்மையையும் புரிந்துகொள்ளலாம். இங்கு நாம் கவனிக்க வேண்டிய விடயம், சமகாலத்தில் திறனாய்வாளர்களாக தொழிற்படுபவர்கள் என்ன செய்கிறார்கள்? இவர்கள் மேற்கொள்ளும் பணிகளால் இலக்கியம் வளம் பெறுகின்றதா? பண்படுத்தப்படுகின்றதா? யாவராலும் மதிக்கத்தக்க வலுவான ஆற்றல் கொண்டதாக திறனாய்வு அமைந்துள்ளதா? போன்ற வினாக்களை எழுப்பி சிந்திக்க வேண்டும். அதாவது, இலக்கியம் வளர்வதற்குரிய சூழலை உருவாக்குவதற்குரிய பணி திறனாய்வாளருடையது. அதனைச் சரியான முறையில் செயற்படுத்துவதற்கு சில நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். திறனாய்வாளருக்குரிய தகுதிகள் அல்லது பண்புகள் என்று நிறையவே உள்ளன.

ஒரு நல்ல திறனாய்வாளர் பொறுப்புள்ள இலக்கியவாதியாகவும், ஒரு நல்ல வாசகராகவும், ஒரு பொறுப்புள்ள மனிதராகவும் இருக்க வேண்டும். தான் ஒரு திறனாய்வாளர் என்ற உணர்வு இருக்க வேண்டும். தன்னு

**நல்ல திறனாய்வாளர் பொறுப்புள்ள இலக்கியவாதியாகவும் ஒரு வாசகராகவும் இருக்க வேண்டும். தன்னுடைய கருத்துகள் இலக்கிய உலகத்தை ஏதோ ஒரு விதத்தில் எதிர்கொள்ளலாம் அல்லது பாதிக்கலாம் என்ற நினைப்பும் இருக்க வேண்டும். கலை, இலக்கியத்தை ரசிக்கக்கூடிய - அனுபவிக்கக் கூடிய திறனும் அழகியல் உணர்வும் அடிப்படையான பண்புகளாக வேண்டும்**

கண்டடையாமல் தமது பணிகளை மேற்கொள்வதால் பாரிய எதிர்விளைவுகள் உருவாகின்றன. இதனைப் புரிந்துகொள்வதற்கான உணர்திறனற்றவர்களாகவும் உள்ளமை வேதனைக்குரியது. திறனாய்வுப் பணியின் போது நாம் கவனிக்க வேண்டிய இரு கட்டங்களை புகழ்பெற்ற திறனாய்வாளர் மால்கம் கவ்லே என்ற அறிஞர் கூறுவதை இங்கு நோக்குவது பொருத்தமாக இருக்கும். முதலாவதாக திறனாய்வதற்கு ஏற்புடைய தகுதியான படைப்பிலக்கியங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இரண்டாவதாக அவ்வாறு தேர்ந் என்பது திறனாய்வாளருடைய திறன்களையும் அவர் தேர்ந்தெடுக்கிற அணுகுமுறையையும் கோணங்களையும் சார்ந்தது. இந்த உண்மை தெளிவாக உணரப்படல் வேண்டும்.

நமது சூழலில் திறனாய்வாளர்களாக இயங்கியவர்களிடையே பல்வேறு வித்தியாசங்களையும் தனித்துவங்களையும் அடையாளம் காணலாம். இவர்களிடையே தொழிற்பட்ட பலங்கள், பலவீனங்கள், போதாமைகள், அறியாமைகள் போன்றவற்றையும் எடுத்து நோக்கலாம். குறிப்பாக விரிவாக்கம் பெறும் நவீன இலக்கியத்தின் பாலுள்ள ஈடுபாட்டையும் டைய கருத்துகள் இலக்கிய உலகத்தை ஏதோவொரு விதத்தில் எதிர்கொள்ளலாம் அல்லது பாதிக்கலாம் என்ற நினைப்பும் இருக்க வேண்டும்.

எந்தத் திறனாய்வாளரும் எந்தப் படைப்பாளியைப் போன்றும் தனக்காக மட்டுமோ அல்லது தன்னுடைய தினவுகளை தீர்த்துக்கொள்வதற்காக மட்டுமோ எழுதுவதில்லை. மாறாக பரந்துபட்ட மக்களுக்காகவும் இலக்கிய வாசகர் குழாத்திற்காகவும் திறனாய்வுக்கு உட்படுத்திய படைப்பாளியைப் போன்ற இதர படைப்பாளிகளுக்காகவும்

*(46ஆம் பக்கம் பார்க்க...)*

அறிவியல் களரி

# நாயின் வால் மொழி..?

பல வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம். பாடசாலை. சிறு பிள்ளைகள் வகுப்பறையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர் ஏதோ கேள்வி கேட்கிறார். எழுந்து நின்ற மாணவன் அவரது முகத்தைப் பார்த்தபடி திக்கித் திணறி விடை அளிக்கிறான். ஆசிரியர் எதுவும் சொல்லவில்லை. மாணவனுக்கு தன்னை அறியாது மூத்திரம் கழிந்து விட்டது.

இத்தனைக்கும் ஆசிரியர் ஏசவில்லை. பிரம்பை எடுக்கவில்லை. கை உயர்த்தக் கூட இல்லை. ஆனால் அவனுக்கு சிறுநீர் தன்னையறியாது பிரிந்து விட்டது. அவ்வளவு பயப்பீதி பயப்படுத்தியது எது? அவரது முகம் கடுகடுப்பாகியிருக்கலாம், கண்களில் கோபம் தெறித்திருக்கலாம். அந்தச் சிறுவயதிலேயே அவனுக்கு ஆசிரியரின் உடல் மொழி புரிந்திருக்கிறது. சிவாஜி கணேசனை சிம்மக்குரலோன் என்பார்கள். கருணாநிதின் நீண்ட அடுக்கு வசனங்களை அட்சரம் தவறாமல், அழகு தமிழில் பேசுவதில் சிவாஜிக்கு இணை கிடையாது. ஆனால் அவரது ரசிகர்களை மிகவும் கவர்ந்தது அதுவல்ல. அவரது முகபாவ வெளிப்பாட்டு முறைகள்தான். அது அவருக்கு கிட்டிய பெரும் கொடையாகும். இதுவும் உடல் மொழிதான்.



உடல் மொழியை ஆங்கிலத்தில் Body language என்பார்கள். Non Verbal communication என்று சொல்வதும் உண்டு. கலைச் சொல்லில் Kinesis என்பார்கள். எங்கள் மனதில் உறைந்திருக்கும் உணர்வுகளை எம்மையறியாது அவ்வாறே பெரும்பாலும் வெளிப்படுத்துகிறோம். கோபத்தை, தாபத்தை, பணிவை, அன்பை, ஆதரவை, வெறுப்பை இவற்றையெல்லாம் பெரும்பாலும் எமது முகத்தாலும் ஏனைய அங்க அசைவுகளின் மூலம்தானே வெளிப்படுத்துகிறோம். இவற்றில் பெரும்பாலானவை எம்மை அறியாமலே எம்மை மீறி பட்டவர்த்தனமாகி விடுகின்றன. பல தருணங்களில் வாயைத் திறந்தால் எம் உணர்வை வெளிப்படுத்திவிடுவோம் என்ற பயத்தில் நாவடக்கிய போதும் முகம் காட்டிக் கொடுத்துவிடும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என முன்னோர்கள் அற்புதமாக உளவியல் பேசினார்கள். அகத்தின் அழகை மாத்திரமல்ல அதன் அழுக்கையும் முகம் வெளிப்படுத்திவிடுகிறது.

‘‘தாபம் பொறுக்க முடியாது இருக்கிறது. புணர்வோம் வருகிறாயா?’’ என்று யாராவது கேட்டிருப்பார்களா. கண்அசைவு அதன் சிமிட்டல், அல்லது அது வெளிப்படுத்தும் வேட்கை உணர்வு ஒன்றே போதும் அவளை அல்லது அவனை படுக்கைக்கு வரச் செய்வதற்கு. வெறுமனே இசைவது மட்டுமல்லாமல் மற்றவரிடம் தாப உணர்வைக் கிளர்ந்தெழச் செய்யும் வல்லமையும் அதில் உள்ளது.

ஒரு ஆய்வைப் பெண்களில் செய்தார்கள், அவர்களின் தாப உணர்வைக் கண்டறிவதற்காக. ஆனால் கேள்விகள் கேட்டு இந்த ஆய்வைச் செய்யவில்லை. அவர்கள் பேசுவதை வைத்துக் கண்டறியவில்லை. கண்களை வைத்துச் செய்தார்கள். அதுவும் முழுமையான கண்களை வைத்து அல்ல. கண் மணியின் விட்டத்தை வைத்து. அது விரியும் அளவை வைத்து மட்டும் செய்யப்பட்டது. நோர்வேயில் உள்ள University of Troms சில் Laeng B, Falkenberg L ஆகியோரால் செய்யப்பட்டது. ஆனால் அந்த ஆய்வு உடல்மொழி பற்றியது அல்ல. ஹோர்மோன் சுழற்சி மாற்றங்களுக்கு ஏற்ப பாலியல் விருப்பங்கள் எவ்வாறு மாற்றம் அடைகிறது என்பதைக் கண்டறிவதற்கானது. அது பற்றி பின்னர் பேசுவோம்.

## மிருகங்களின் உடல்மொழி

ஆனால், இந்த உடல் மொழிகள் மனிதர்களுக்கு மாத்திரமானவையா அல்லது மிருகங்களிலும் உள்ளனவா. மிருகங்களுக்கு மொழி இருக்கிறதோ இல்லையோ நாம் அறியோம். ஆனால் அவை சத்தம் எழுப்



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்



நாய்கள் வால் அசைப்பதை நாம் எல்லோரும் காண்கிறோம். எசமானைக்கண்டால் மகிழ்ச்சியில் வாலாட்டுகிறது. எங்களுக்கு தெரிந்தது அவ்வளவுதான். ஆனால் ஒரு நாய் மற்ற நாயின் வாலாட்டும் விதத்தை வைத்து அதன் உணர்வுகளை மட்டுக்கட்டுகிறது என்கிறார்கள் இத்தாலியைச்சேர்ந்த ஆய்வாளர்கள்

புகின்றன. அதனை அவற்றின் சகாக்கள் புரிந்து கொள்கின்றன. காகங்கள் கரைந்து தம் கூட்டத்தை அழைக்கின்றன. குயில் தாபத்துடன் இசைக்கிறது, பூனையின் மியாவ் எங்களுக்குப் புரிவதில்லை. ஆனால் அதன் சோடிகளுக்கு புரியும். நாய்கள் குரைக்கின்றன.

ஆனால் குரைக்காமல், கத்தாமல், இரையாமலும் இருந்தபோதும் அவை தங்கள் சகபாடிகளின் உடல் மொழிகளைப் புரிந்து எதிர்வினையாற்றுகின்றன என்பதை ஒரு ஆய்வில் கண்டறிந்திருக்கிறார்கள்.

மனிதர்களில் கண்களில் ஆய்வு செய்தார்கள். இப்பொழுது நாய்களின் வாலில் ஆய்வு. வால் என்றால் அதன் நீளம், அகலம் பற்றியது அல்ல. அவை அசையும் விதம் பற்றியது.

நாய்கள் வால் அசைப்பதை நாம் எல்லோருமே கண்டிருக்கிறோம். எசமானைக் கண்டால் மகிழ்ச்சியில் வாலாட்டுவது தெரியும். எங்களுக்குத் தெரிந்தது அவ்வளவு மட்டுமே. ஆனால் ஒரு நாயானது மற்ற நாயின் வால் ஆட்டும் விதத்தை வைத்து அதனது உணர்வுகளை மட்டுக்கட்டுகின்றன என்கிறார்கள் இத்தாலியைச் சார்ந்த ஆய்வாளர்கள். ஒரு நாயானது தனது வாலை இடது பக்கமாக அசைக்கும்போது அதைப் பார்த்திருக்கும் ஏனைய நாய்களின் மனங்கள் பதற்றமடைகின்றன. நாய்கள் பதற்றமடைவதை அவற்றின் இருதயத் துடிப்பு வேகமாவதைக் கொண்டு கண்டறிந்தார்கள். ஆனால் வலது பக்கமாக ஆட்டினால் ஏனைய நாய்கள் பதற்றமடையவில்லையாம்.

வலது பக்கமாகவோ இடது பக்கமாகவோ தமது வாலை ஆட்ட வேண்டும் என அவை திட்டமிட்டுச் செய்வதில்லை. அது இயல்பாக நடக்கிறது. தன்னிச்சையின்றி நடைபெறுவதாகும். இயற்கையின் கொடை எனலாம். அல்லது கூர்ப்பில் எட்டப்பட்டது எனவும் கொள்ளலாம். இதை முன்பு செய்த மற்றொரு ஆய்வு எடுத்துக் காட்டியிருந்தது. தனது எசமானைக் கண்டது போன்ற மகிழ்ச்சியான நிகழ்வு நடைபெறும்போது அதன் மூளையின் இடது பக்கத்தில் செயற்பாடு அதிகரித்ததாம். அந்த நேரத்தில் வால் வலது பக்கமாக ஆடினவாம். மாறாக மற்றொரு நாய் ஆக்குரோசமாக இதைக் கடிக்க நெருங்கும்போது இதன் மூளையின் வலது பக்கத்தில் செயற்பாடு அதிகரித்து, வால் இடதுபுறமாக ஆடுமாம்.

ஆனால், நாய்கள் தங்கள் வால்களை ஒரு பக்கமாக மட்டும் ஆட்டுவதை நாம் கண்டதில்லை. இதற்குக் காரணம் அது வேகமாக ஆட்டுகிறது. அதனால் அது எமக்குப் புரிவதில்லை. வீடியோவில் எடுத்து சிலோமோசனில் பார்க்கும்போது இது தெரிந்தது என்கிறார்கள்.

இப்பொழுது செய்த ஆய்வின் போது வாலை ஆட்டும் வேறு நாய்களின் வீடியோக்களை ஆய்வுக்கு உட்பட்ட நாய்களுக்குக் காட்டினார்கள். வீடியோ பட நாய்கள் எந்தப்பக்கமாக வாலை ஆட்டுகின்றன என்பதைப் பொறுத்து இந்த நாய்களின் இருதயத் துடிப்பில் மாற்றம் ஏற்பட்டது. சில நாய்கள் பெரிதளவு எதிர்வினை காட்டாதபோது மீண்டும் மீண்டும் வீடியோ போட்டுக் காட்டியதன் மூலம் அவை எதிர்வினை காட்டின. எதிர்வினையை அவற்றின் நாடித் துடிப்பின் மூலமாகக் கண்டறிந்ததற்கு மேலாக வேறு அறிகுறிகள் மூலமும் கண்டறிய முடிந்தது.

வாலை இடது பக்கமாக அசைப்பதைப் பார்த்த நாய்களில் மனஅழுத்தமும் எச்சரிக்கை உணர்வும் ஏற்பட்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது. நாய்கள் டென்சனாகும் போது என்ன செய்கின்றன என்பதை நீங்களும் நானும் அறிவோம். அவற்றைத்தான் அவர்களும் அவதானித்தார்கள். அவற்றின் காதுகள் நிமிர்ந்தெழுந்தன, மூச்சிரைத்தன, தாக்குதலுக்கு தயாராவது போல உடலைச் சுருக்கின, கண்கள் விரிந்தன.

### கண்மணி விரிதலும் பாலியல் உணர்வும்

இந்தக் கண்கள் விரிவடையும் தன்மையானது ஏனைய விலங்குகளில் இருப்பது போலவே மனிதர்களிடமும் காணப்படுகிறது. இது தாங்களாகச் செய்வது அல்ல. தன்னை அறியாமல் நடக்கும் செயலாகும். 1975இல் செய்யப்பட்ட ஒரு ஆய்வு சுவாரஸ்யமானது.

தங்களுக்கு சோடியாக வரப்போகின்றவரது புகைப்படத்தைப் பெண்கள் கண்டதும் அவர்களது கண்மணி விரிந்ததாகக் கண்டார்கள். அது பயத்தினால் ஏற்பட்ட விரிவு அல்ல. ஆனந்தக் கிளர்ச்சியால் ஏற்பட்டதாகும். இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது என்பீர்கள். பாலியல் ஆர்வம் பெண்களுக்கு எக்காலத்தில் இயல்பாக எழுகிறது என்பதை இந்த ஆய்வு கோடிட்டுக் காட்டுகிறது. ஆரம்பத்தில் பெண்களின் கண்களைப் பற்றிய ஆய்வின் மீதிக் கதைதான் இனி வருகிறது.

பெண்களின் கண்களை அவர்களது மாதவிடாய் சுற்றின் பல்வேறு கட்டங்களில் பரிசோதித்திருந்தார்கள். மாதவிடாயில் இரத்தப்பெருக்கு இருக்கும்போது (menstrual phase) சூலகத்திலிருந்து முட்டை வெளியேறி கருவாவதற்கு உடலானது தயாராயிருக்கும் 'கருவள காலத்தில்' (ovulatory phase), அதற்கு பின்னான ஓய்வு (luteal phase), காலத்திலாகும்.

அவரது பாலியல் துணைவரின் படங்களைக் காட்டியபோது சூலகத்திலிருந்து முட்டை வெளியேறும் கருவள காலத்தில் அவர்களது பாலியல் உணர்வு தூண்டப்பட்டது. கண்மணி விரிவதைக் கொண்டு அதனைக் கண்டறிந்தார்கள்.

மனைவியின் மாதவிடாய் வட்டத்தை சரியாகக் கணித்து வைத்திருங்கள். அந்நேரத்தில் (கருவள காலம்) சுலபமாகக் கைகூடும்.

ஆனால் கருத்தடை மாத்திரை உண்ட பெண்களில் இந்த மாற்றம் தென்படவில்லை. இதற்குக் காரணம், அவர்களில் ஹோர்மோன் மாற்றங்களால் கருவள காலம் என்பது அடக்கப்பட்டு விடும் என்பதாலாகும். இதன் அர்த்தம் கருத்தடை மாத்திரை உண்ணும் பெண்களுக்கு பாலியல் ஆர்வம் குறைந்துவிடும் என்றல்ல.

கருத் தங்கிவிடும் பிரச்சினை இல்லை என்ற உணர்வு அவர்களில் ஆர்வத் தைத் தூண்டிவிடும் எனவும் சொல்கி றார்கள்.

## நாளாந்த வாழ்வில் உடல் மொழி

உடல் மொழியை இன்று பல கற்கை நெறிகளில் ஒரு பாடமாக எடுக்கிறார்கள். முக்கியமாக தொழில் முறையில் மேலாண்மை நிலையில் இருப்பவர்களுக்கு அவசியமாகிறது. மருத்துவத் துறையில் உடல்மொழி என்ற சொல்லைப் பயன்படுத்தா மலே மருத்துவர்கள் அவற்றைத் தங் கள் நோயாளிகளில் அறிகுறிகளாகத் தேடுகிறார்கள்.

ஆனால், தினசரி வாழ்வில் இதன் முக்கியத்துவம் அபரிமிதமானது. முகபாவங்கள் மட்டுமன்றி ஒருவர் எவ்வாறு உட்கார்ந்திருக்கிறார், அவ ரது கைகள் ஓய்ந்திருக்கிறதா, பரபரக் கிறதா, கண்களில் ஒளிர்வது எது போன்றவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். மற்றவர்களின் மன உணர்வுகளை உடல்மொழி மூலம் புரிந்து கொண்டவர்களால் எல்லோ ரையும் அணைத்து நல்லுறவைப் பேண முடியும். மாறாக அதை அச ட்டை செய்பவர்கள் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகவே நேரும்.

மற்றவர்களது உடல் மொழிகள் எமக்கு என்ன சொல்கிறது என்ப தற்கு அப்பால் நாம் எமது உடல்மொ ழியால் மற்றவர்களுக்கு என்ன செய் தியை கடத்தியிருக்கிறோம் என்பதும் முக்கியமானதாகும். அது சரி, நாயின் வாலாட்டல் உடல் மொழியைப் புரிந்துகொள்வதால் என்ன நன்மை? யாராவது ஒருவரின் வீட்டிற்கு போகி றீர்கள் என வைத்துக்கொள்வோம். தூரத்தில் ஒரு நாய் நிற்கிறது. அதன் வாலைப் பாருங்கள். அது வலது புறமாக வாலாட்டினால் பிரச்சினை இல்லை. உங்கள் வருகை அதற்கு அச்சுறுத்தலாக இல்லை. பேசாமல் இருந்துவிடும். மாறாக இடது புறமாக வாலாட்டினால் மருத்துவமனைக்குச் சென்று ஊசி போடுவதற்கு தயாரா குங்கள். ■

---

*(66ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

அடையாள அட்டையினைப் பெற் றுக்கொள்ளும்படி சொல்லிவிட்டுப் போவர். அங்கே போனால் சடங்கு கள், கிரியைகள் முடித்து அடையாள அட்டையைப் பெற்று வீடுதிரும்ப மாலையாகிவிடும். இது குறித்த பதிவு கள் வார்த்தை இதழில் வெளிவந்த கார்த்திகாவின் 'விலக்கு' கதையில் இடம்பெற்றுள்ளன.

எனக்கு 01.08.2005 அரசாங்க உத் தியோக நியமனம் கிடைத்தது. பிர தேச செயலகத்தில் தான் நான் முத லில் இணைப்புச் செய்யப்பட்டேன். அங்கே 31.03.2009 வரை கடமை யாற்றினேன். இக்கால இடைவெளி யில் பல நெருக்கடியான நிகழ்வுக ளுக்கு நேரடியாக முகங்கொடுத்துள் ளேன். எனது வசிப்பிடமான கரவெட் டியிலிருந்து யாழ். பிரதேச செயலகத் திற்கு அரச, தனியார் பேருந்துகளி லேயே சென்று வருவதை வழக்கமா கக் கொண்டிருந்தேன். அக்காலப்ப குதி தான் இனந்தெரியாத நபர்களால் பலரும் சுட்டுக்கொல்லப்படும் காலப் பகுதியாக இருந்தது. அநேகமான நாட்களில் வேலைக்குச் செல்லும் போதோ அல்லது வேலை முடிந்து திரும்பிவரும் போதோ சுடப்பட்டு இறந்து கிடப்பவர்களின் உடலங்க ளைப் பார்த்துக்கொண்டே போக்குவ ரத்துச் செய்வது வழக்கமாகிப் போனது.

இக்காலப்பகுதியை ஞானம் இத ழில் வெளியான 'சூடுகண்டவன்' என்ற கதை இயல்பாகப் பதிவு செய் துள்ளதை எடுத்துக்காட்டலாம். மேலும், இதே காலகட்டத்தில் பேருந் தில் பயணிக்கும் என்போன்றவர்கள் எதிர்கொண்ட பிறிதொரு நெருக்கடி 'கொன்வே' என்ற செல்லப்பெயரால் சூட்டப்படும் வீதித்தடை ஏற்பாடா கும். அநேகமாக முற்பகல் பத்தும ணிக்குப்பின்னர் வீதியின் இரு மருங் கையும் ஆக்கிரமிக்கத் தொடங்கும் படையினர் முதலில் விசில் ஊதுவர். விசில் சத்தங்கேட்டதும் மக்கள் பதறி யடித்துக்கொண்டு வீதியைக் கடப்பர். விசில் ஊதப்பட்டு ஐந்து நிமிடங்க ளுக்குள் இவ்வாறு மக்கள் பாதை யைக்கடக்க அனுமதிக்கப்படுவர். அதன்பின் பல மணித்தியாலங்களு க்கு வீதியில் மக்கள் பயணிக்க முடி யாது.

படையினரின் வாகனத் தொடரணி செல்வதற்காகவே இவ்வீதித்தடை அமுல்படுத்தப்படும். அவ்வாகனத் தொடரணி சென்று முடிந்து அரை மணிநேரம் கடந்தபின்னரே பொதுப் போக்குவரத்திற்கு அனுமதிக்கும் வகையில் திரும்பவும் விசில் ஊதப் படும். அக்காலப்பகுதியில் முற்பகல் பத்துமணியானதுமே வெளிக்கருமங் களில் ஈடுபட்டுள்ள சனங்கள் 'விசில் ஊதப்போறான் கெதியாய் போக வேணும்' எனப்பரபரக்கத் தொடங்கி விடுவர். நான் வேலை முடிந்து வீடு திரும்பும்போது அநேகமாக ஒவ் வொரு நாளும் கொன்வே என்ற இவ் வீதித்தடையால் வல்லை முனியப்பர் கோவிலில் பலமணி நேரங்கள் காத் திருக்கவேண்டியிருந்தது. அங்கே காத்திருப்போரால் ஐஸ்கிறீம் மற்றும் கச்சான் வியாபாரம் அமோகமாக நடந்ததுமுண்டு.

இதுபற்றிய பதிவினை குப்பிழான் சண்முகம் தனது 'மழைதூறிய ஒரு மாலைப்பொழுதில்' என்ற கதையில் செய்துமிருக்கிறார். இது தவிர அக்கா லப்பகுதியில் கிளைமோர் வெடிப் பதும் பரவலாக நிகழ்ந்தது. கிளை மோர் வெடிப்பதும் வீதியில் செல்லும் சனங்களை முழங்காலிடச் செய்து படையினர் கண்மூடித்தனமாகத் தாக் குவதும் அக்காலப்பகுதியில் சாதார ணமாக நிகழ்ந்து வந்தன. உண்மை யில் இதெல்லாம் முறையாகப் பதிகையிடவேண்டிய விடயங்கள் தான். ■

## கடைசிப் பக்கம்



ச. இராகவன்

# காலமும் கதையும்

ஒரு காலத்தில் வழமையான நிகழ்வுகளாக இருப்பவை பிறிதொருகாலத்தில் நம்ப முடியாதவையாக மாற்றமடைந்து விடுகின்றன. எனினும், இருப்பியல் சார்ந்து தவிர்க்க முடியாத நிகழ்வுகளாகவே அவை நோக்கப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் நான் நேரடியாகவே முகங் கொடுத்துள்ளேன். இது குறித்து ஒரு பதிகை அவசியமெனவும் தோன்றுகிறது. இனிவரும் தலைமுறைக்கென விட்டுச்செல்லும் ஒரு சிறிய ஆவணமாகவும் இப்பதிகை அமையலாம்.

எனக்கு 1996 காலப்பகுதியில் யாழ்.பல்கலைக்கழக உள்வாரி முகாமைத்துவக் கற்கைகள் அனுமதி கிடைத்தது. 1997 பிற்பகுதியில் கற்கைநெறி ஆரம்பமானது. அது யாழ்.குடாநாடு முழுமையாக அரசகட்டுப்பாட்டிற்குள் வந்திருந்தகாலம். அரச, தனியார் பேருந்துகள் சேவையிலீடுபடத் தொடங்கியிருந்தன. இதற்கு முற்பட்ட காலத்தில் நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணம் சென்றுவருவதற்கு துவிச்சக்கரவண்டியே பிரதான போக்குவரத்துச் சாதனமாயிருந்தது. பல்கலைக்கழக உபவேந்தராக இருந்த பேராசிரியர் துரைராசாவின் வாகனம் எனவும் அதைக் குறிப்பிடுவதுண்டு. அவர் தமது சொந்த ஊரான வதிரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் துவிச்சக்கர வண்டியிலேயே சென்றுவந்தார். சோதனைச்சாவடிகள் ஏதுமற்றிருந்த அக்காலத்தில் ஆகக்கூடியதாக ஒன்றரை மணித்தியாலத்தில் வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்துவிட முடியும். ஆனால் பேருந்துகள் சேவையிலீடுபடத் தொடங்கியிருந்த 1996 காலப்பகுதியில் ஒரு மணித்தியாலத்திற்குள் வடமராட்சியிலிருந்து சென்றடைந்துவிடக்கூடிய யாழ்ப்பாணத்திற்குச் சோதனைச்சாவடிகளை எதிர்கொள்ள வேண்டியிருந்ததால் மூன்று மணித்தியாலங்கள் வரை எடுக்கும் பயணமாக அது இருந்தது.

நெல்லியடிச் சந்தி தொடங்கி யாழ். வின்சர் சந்திவரை 14 சோதனைச் சாவடிகள் அப்போதிருந்தன. ஒவ்வொரு சாவடியிலும் பேருந்தைவிட்டு இறங்கி உடற்சோதனைக்குப் பயணிகள் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு சோதனைச்சாவடியிலும் பயணிகள் சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் கழிக்க வேண்டியிருந்தது. அப்போது யாழ்ப்பாணத்திலிருந்து உதயன் நாளிதழின் சகோதர வார இதழாகச் சஞ்சீவி வெளிவந்து கொண்டிருந்தது. இப்பயண அனுபவத்தைப் பின்னணியாகக் கொண்டு இயல்வாணன் (சிறிக்குமரன்) சஞ்சீவியில் முடவன் நடை என்ற சிறுகதையை எழுதியிருந்தார். அதிகாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து தனியார் பேருந்தில் பருத்தித்துறையிலுள்ள நண்பரொருவரின் உறவினரின் மரண வீட்டிற்குச் செல்லுமொருவர் இருள்கவியும் மாலையில் வீடு திரும்புவது வரையிலான பயண அனுபவமாயமைந்த இக்கதை ஒரு கால நிகழ்வரைபடமாக கலைமிளிரும் ஆவணமாக குப்பிழான் ஐ.சண்முகத்தினால் உதயதரிசனம் நேர்காணலில் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. இதேபோன்று தாட்சாயணியின் படைப்பான 'சோதனைகள்' என்ற கதையிலும் மாதவிலக்கான பெண்ணொருத்தி சோதனைச்சாவடியில் உடற்சோதனையின் போது எதிர்கொள்ளும் பீதியும் அவமானமும் நேர்த்தியாகவும் இயல்பாகவும் எடுத்துக்காட்டப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான காலகட்டத்தில் நெருக்கடியை ஏற்படுத்திய இன்னொரு கூறு சுற்றிவளைப்பாகும். எப்போது எந்தப்பகுதியில் சுற்றிவளைப்பு (Round up) நிகழுமெனக் கடவுளுக்கும் தெரியாது. சுற்றிவளைப்பு நிகழப்போகும் பகுதியில் அதிகாலை வேளையிலேயே திருப்பள்ளியெழுச்சி பாடுவதுபோல் நாய்கள் விடாமற் குரைத்துக் கொண்டிருக்கும். விடியும்போது படையினர் மூலைக்கு மூலை நின்று கொண்டிருப்பர். எவரும் எக்கருமத்தின் நிமித்தமும் குறித்த பிரதேசத்தைவிட்டு வெளியேறிச் செல்லவோ உள்நுழையவோ அனுமதிக்கப்படுவதில்லை. இளமதியப் பொழுதில் வீடு வீடாக உள்நுழையும் படையினர் அங்கிருக்கும் இளவயதினரின் அடையாள அட்டைகளை வாங்கிக் கொண்டு ஓர் இடத்தைக் குறிப்பிட்டு (பொதுவாக அவ்விடம் ஒரு கோயிலாகவோ அல்லது பாடசாலையாகவோ இருக்கும்) அங்கே வந்து

*(65ஆம் பக்கம் பார்க்க...)*

## சர்வதேச தரத்தில்

## எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ்

## வெளியீடாக மாதாந்தம் வெளிவருகிறது...

KALAIKESARI

# கலைக்கேசரி

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

மாத இதழ்




**தொடர்புகளுக்கு : 0117 322788**

**Purchase your digital copy at**

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP. READ. ENJOY

http://www.magzter.com/LK/Express-Newspapers/Kalaikesari/Lifestyle/

நமது பாரம்பரிய பண்பாட்டு கலாசாரங்களை

தமிழ்கூறும் நல்லுலகிற்கு எடுத்துச் செல்லும் மாத சஞ்சிகை




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.